www.padippakam.com

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 11 | மார்ச் 2004 | பக்கம் 12 | விலை 12/- | சுழற்சி 67

# பொதுத் தேர்தலில் யார் வென்றாலும் மக்களுக்குக் கிடைக்கப் போவது என்ன?

- பேச்சுவார்த்தை தொடருமா?
- அரசியல் தீர்வு கிட்டுமா?
- வாழ்க்கைச் செலவு குறையுமா?
- உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் கிடைக்குமா?
- தாராளமயம் தடுக்கப்படுமா?
- தனியார் மயம் நிறுத்தப்படுமா?
- இந்திய ஊடுருவல் இல்லாது போகுமா?
- அனைத்து மக்களுக்கும் சுபிட்சம் வருமா?

2004 ஏப்பிரல் 2ம் திகதி இலங்கையின் பதின்மூன்றாவது பாராளுமன்றப் பொதுத் தேர்தல் நடைபெறப் போகின்றது. பாராளுமன்றக் கட்சிகள் தத்தமது பிரசாரங்களை வேகப்படுத்தி வருகின்றன. இரண்டு பிரதான ஆளும் வர்க்க கட்சிகள் அதிகாரத்திற்கு வந்து கொள்வதற்காகப் போட்டியிடுகின்றன. அடுத்த சில கட்சிகள் அதிகாரத்திற்கு வரமுடியாது விடினும் இரண்டு ஆளும் வர்க்க கட்சிகளைச் சார்ந்து நின்று அமைச்சர் பதவிகளுடனான அதிகாரப் பங்கு பெறுதலைக் குறியாகக் கொண்டு தேர்தலில் மும்மரம் காட்டிநிற்கின்றன.

இத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளும் அவற்றின் முக்கிய வேட்பாளர்களும் இலங்கைப் பாராளுமன்றத்திற்குப் புதியவைகள் அல்ல. மாறி மாறி அரசாட்சி அதிகாரம் செய்தவர்களும் பாராளுமன்றத்திற்குச் சென்று அதன் மூலம் பலவகைச் சுகபோகங்களையும் அனுபவித்தவர்களும் ஆவர். தங்களையும் தம்மைச் சார்ந்தவர்களையும் தாராளமாக வளப்படுத்தி வளர்த்துக் கொண்ட இந்தப் பாராளுமன்றப் பதிவியாளர்களால் மக்களுக்கு எதுவுமே கிடைக்கவில்லை. இத்தகையவர்களின் ஆட்சிக் காலத்தில் பதவிக் காலத்ததில் மக்கள் அனுபவித்து வந்த ஒவ்வொரு உரிமைகளையும் பல்வேறு வழிகளாலும் இழக்க வேண்டியே ஏற்பட்டது. வளர்ச்சிகள் முன்னேற்றங்கள் என்று கூறப்படுவனவற்றை ஒரு குறிப்பிட்ட மேல் நிலைத்தட்டினரே பெற்றுக் கொண்டனர். சாதாரண உழைக்கும் மக்களுக்கு சென்றடையவில்லை. அவற்றால் சாதாரண மக்கள் பயனோ பலன்களோ பெறவில்லை. அதற்குப்பதிலாக பலவழிகளிலும் அவர்கள் அமுக்கப்பட்டே வந்துள்ளனர்.

இந்தப் பாராளுமன்ற ஜனநாயகமும் அதற்கான ஆட்சி நிர்வாக அமைப்பும் தேர்தல் என்ற ஏமாற்றும் மக்களின் கவனங்களை திசைதிருப்பி வந்த அதே வேளை நாட்டு மக்களை இன மொழி மத பிரதேச அடிப்படைகளில் பிளவுபடுத்தி ஒருவருடன் ஒருவரை மோத வைத்தும் வந்துள்ளது. தேசியத்தின் பெயரால் ஒடுக்கு முறைகளையும் இன மொழி மத வெறித்தனங்களையும் வளர்த்து வந்துள்ளது. அவற்றுக்கு உருவேற்றி அதிகாரத்தையும் பதவிகளையும் பெற்றுக்கொள்ள இப்பாராளுமன்றப் பொதுத் தேர்தல்கள் தகுந்த களமாகவும் பாயன்பட்டு வந்துள்ளது.

பாராளுமன்ற ஜனநாயகமும் அதற்கான தேர்தலும் சுரண்டல் கொடூரம், அரசு யந்திரத்தின் ஒடுக்குமுறைத் தாண்டவம் சமூக ஏற்றத்தாழ்வின் இழிநிலை, மிகச் சிறுபான்மையினரான

தொடர்ச்சி 11ம் பக்கம்.

## மலையக மக்களின் பிரச்சினைகளை மறக்கும் அண்ணனும் தம்பியும்



தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பிலும் சந்தாப் பணத்திலுமே இ.தொ.கா கட்டிவளர்க்கப்பட்டது ஆனால் இ.தொ.கா தோட்டத் தொழிலாளர்களின் கட்சி என்றோ மலையகத்தமிழ் கட்சிகளினது கட்சி என்றோ கூறுவதை விட ஏனைய இனச் சமூகத்தவர்களும் இணைந்துள்ள தாக கூறுவதிலேயே இ.தொ.கா ஆறுமுகம் தலைவர் தொண்டமான் பெருமையடைகிறார் பிற்படுத்தப் பட்டிருக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் மலையகத்தமிழ் மக்களுக்குப் இருக்கின்ற அடிப்படை பிரச்சினைகளுக்கு கூட தீர்க்கப்படவில்லை ஆனால் மலையகத்தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் அனைத்திற்கும் இ.தொ.கா தீர்வு கண்டுவிட்டதாகவே அவர் கூறுகிறார்.

தோட்டப்பகுதியில் மட்டுப் அரசியல் செய்யக் கூடாது என்றும் தன்னுடன் பல பணம்படைத்த வர்த்தகர்களும் கோடீஸ்வரர்களும் இணைந்து கொண்டுள்ளதாக ம.ம.மு தலைவர் பெ.சந்திரசேகரம் பெருமைப்படுகிறார். அவரும் அவரது கட்சியும் மலையகத்தமிழ் மக்களினால் தோட்டத் தொழிலாளிகளால் கட்டிவளர்க்கப்பட்டது அவர் சிறையில் இருக்கும்போது வாக்களித்து அவரை வெற்றிபெறச் செய்தவர்கள் தோட்டத்தொழிலாளர்கள்தான் மலையகத் தமிழ் மக்களுக்கு சரியான அரசியல் பாதையை காட்டிய தன் மூலம் சாதணையை செய்துள்ளதாக கூறுகிறாா.

இவர்கள் இருவரும் தேசிய அரசியல் செய்வதற்கு எந்த தடையுமில்லை ஆனால் மலையகத் தமிழ் மக்களுக்காக தோட்டத்தொழிலாளர்களுக்காக அரசியல் செய்யபோவதாக தொழிற் சங்கம் செய்யபோவதாக புறப்பட்ட அவர்கள் அம்மக்களின் அடிப்படை வாழ்வில் எந்தவொரு அபிவிருத்தியையும் ஏற்படுத்த முடியாமல் அப்பொறுப்பிலிருந்து இலகுவாக விலகிக்கொள்வதற்காகத்தான் தேசிய அரசியல் பற்றி பேசுகிறார்கள்.

இ.தொ.கா தோட்டத்தொழிலாளர்களை மையமாக கொண்டு செயற்படும் கட்சி என்பதை மறைப்பதற்கு காரணம் ஆறுமுகம் போன்றவர்கள் அவர்களது இருப்பை பாதுகாத்துக் கொள்வதற்காக பாராளுமன்ற அமைச்சுப் பதவிகளை பாதுகாத்து கொள்வதற்காகவே அன்றி தேசிய ரிதியான அரசியல் கடமைகளை செய்ய முடியா நிலையில் அவர்கள் எப்படி தேசியரிதியான கடமைகளை



செய்ய முடியும்?

சந்திரசேகரமும் கூட வடக்குக் கிழக்கு தமிழ் மக்களின் ஒற்றுமை சர்வதேச தமிழர்களின் ஒற்றுமை என்றெல்லாம் பேசுவது மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளிலிருந்து ஒதுங்குவதற்காகவே அன்றி உண்மையான அக்கறையினால் அல்ல.

தொடர்ச்சி 11ம் பக்கம்

## புலி இயக்க பிளவின் பின்னணியில் இருப்பது அமெரிக்காவா? இந்தியாவா?



பிரபாகரனின் தலைமைக்கு எதிராக கிழக்கு மாகாண கருணா தலைமை வேறுபாடுகளை வெளிப்படுத்திவிட்டு கருணா தலைமையில் கிழக்கு மாகாண புலிகள் இயக்க நடவடிக்கைகள் தனியாக முன்னெடுக்கப்படுகின்றன. இப்பிளவு புலி இயக்கத்தின் தலைமைகளுக்கிடையிலான பிளவு என்பதற்கு அப்பால் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தில் உடைவையும் தமிழ் மக்களிடையே வடக்கு கிழக்கு என்ற பிளவுகளையும் வெளிக் கொண்டு வந்து விட்டது என்பதே உண்மை.

இலங்கை தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகள் என்பது கிழக்கு மாகாண தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளின் கூறுகளும் உள்ளடக்கப்பட்டது தான் என்பதில் எவ்வித சந்தேகமும் கொள்ளத் தேவை இல்லை. அந்த அடிப்படையில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் எதுவும் பேரினவாதத்திற்கு, இலங்கை இராணுவத்திற்கும் பிராந்திய மேலாதிக்க சக்திகளுக்கும் ஏகாதிபத்திய சக்திகளுக்கும் துணைபுரிவதாக இருக்கக் கூடாது என்பதே கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

வடக்கு கிழக்கு இணைந்த தமிழரின் பாரம்பரிய பிரதேசம் என்பது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிநாதமாக கொள்ளப்படுகிறது. அதனை தகர்க்கும் வகையில் புலிகள் இயக்க பிளவு அமைத்து விட்டது. கிழக்கு மாகாணம் வடக்கிலிருந்து பிரிக்கப்பட்ட நிலையிலேயே வேண்டும் என்ற கருத்திற்கு வலு சேர்ப்பதாகவே பிளவு அமைந்து விட்டது.

வடக்கு கிழக்கு இணைப்பிற்கு எதிராக பேரினவாதிகளும், முஸ்லிம் தேசிய வாதிகளும் தொடர்ச்சியாக செயற்பட்டு வருகின்றனர். அத்துடன் சில இந்திய பிரமுகர்களும் வடக்கு கிழக்கிற்கு எதிராக பேசிவருகின்றனர். குறிப்பாக 1987ல் இலங்கை இந்திய சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.



தொடர்ச்சி 12ம் பக்கம்..

படிப்பகம்

www.padippakam.com



# மக்களின் உரிமைகளை உறுதிசெய்ய முடியாத பாராளுமன்ற

## பிரதிநிதித்துவம் எதற்கு ?

கங்காணிமார் தோட்டத் தொழிலாளர்களை வெள்ளைக்காரர்களுக்கு அடிமையாக்கியது போன்று தொழிற்சங்கத் தலைமைகள் தோட்டத் தொழிலாளர்களை கம்பெனிகளுக்கு அடிமையாக்கின. தற்போது பாராளுமன்ற பதவிகளில் ஆசை கொண்டவர்கள் இந்நாட்டின் இரண்டு பிரதான பேரினவாத முதலாளித்துவ கட்சிகளுக்கு அனைத்து மலையகத்தமிழ் மக்களையும் அடிமையாக்கும் வாக்கு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர். அதனால் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடும் அனைவரையும் நிராகரித்து வாக்குச் சீட்டுகளை செல்லுபடியற்றதாக்கி, தேர்தல் மீதான எதிர்ப்பை காட்டுவோம் என்று புதிய ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளர் தோழர். இ. தம்பையா அட்டனில் நடைபெற்ற பகிரங்க கருத்தரங்கில் உரையாற்றும் போது கோரிக்கை விடுத்தார்.

புதிய - ஜனநாயக கட்சியின் மலைப் பிரதேச செயலாளர் தோழர்.ச. பன்னீர் செல்வம் தலைமையில் எதிர்வரும் பொதுத் தேர்தலும் மலையகத்தமிழ் மக்களும் எனும் தலைப்பில் 29-02-2004ம் திகதி அன்று நடைபெற்ற கருத்தரங்கில் பேசும் போது அவர் மேலும் தெரிவித்தாவது.

ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் ஐக்கிய தேசிய முன்னணி இற்குமிடையிலான அதிகாரப் போட்டியினால் இத்தேர்தல் இந்நாட்டு மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது. மலையகத்தமிழ் கட்சிகளோ மலையகத்தமிழ் மக்களுடைய அரசியல் பிரச்சினைகள் பற்றி எவ்வித கவனமும் செலுத்தாமல் ஜனாதிபதியுடனோ, பிரதமருடனோ சேர்ந்து தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றப் பதவிகளை தக்க வைத்துக் கொள்வது பற்றியே கவனம் செலுத்தகின்றன.

இரண்டு பெரிய கட்சிகளில் எந்தக் கட்சி ஆட்சியமைத்தாலும் மலையகத்தமிழ் மக்களின் வாழ்வில் எந்தவொரு அடிப்படை மாற்றமும் ஏற்படாது பெருந்தோட்டக் கம்பெனிகளின் பிடியில் அகப்பட்டு மிகவும் மோசமாக சுரண்டப்பட்டுக் கொண்டிருக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு விடிவு ஏற்படப் போவதில்லை. இரண்டு பெரிய கட்சிகளும் தனியார் மயத்தை ஆதரித்து பாதுகாக்கின்றன.

மலையகத்தமிழ் மக்களுடைய இருப்பினை கேள்விக்குட்படுத்தியுள்ள மேல் கொத்மலை திட்டத்தை கைவிட ஐக்கிய தேசிய கட்சியும் தயாரில்லை. சுதந்திரக்கட்சி ஜே.வி.பி கூட்டமைப்பும் தயாரில்லை. அத்திட்டத்தை கைவிடல் செய்வதற்கான போராட்டத்தை முன்னெடுப்பதற்கான வேலைத்திட்டமொன்று எந்த வொரு மலையக கட்சிகளிடமும் இல்லை.

மலையகத் தேர்தல் களத்தை பார்க்கின்றபோது இரண்டு பேரினவாத முதலாளித்துவ கட்சிகளையும் நிராகரிப்பதாகவன்றி இரண்டில் ஒன்றை ஆதரிக்கும் நிலையிலேயே மலையக கட்சிகள் இருப்பதுடன் அவற்றின் தேர்தல் பட்டியலில் தங்களது அபேட்சகர்களை நிறுத்தியுள்ளன. அந்த இரண்டு கட்சிகளின் ஆட்சியிலும் மலையக தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ஆக குறைந்தபட்ச தீர்வு காண்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. அப்படியிருக்கும் போது மலையகத்தமிழ் மக்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளுடன் மலையக தமிழ் அபேட்சகர்கள் மலையகத்தமிழ் மக்களை அணுகுகின்றனர். மாறிமாறி இந்த நாட்டை ஆளுகின்ற முதலாளித்துவ பேரினவாத கட்சிகள் அவற்றின் இனவாத கட்டமைப்பை மாற்றத் தயாரில்லாத விடத்து அவற்றுடன் இணைந்து மலையகத்தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை தீர்க்கப் போவதாக கூறுவது சுத்தக் கபடத்தனமாகும்.

நாட்டின் பிரதான பிரச்சினையான தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்குரிய சூழ்நிலை திடீர் தேர்தலினால் குழப்பப்பட்டுள்ளது. தேர்தல் முடிவடைந்த பிறகும் இதே நிலைமையே தொடரப் போகிறது.

பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இல்லாவிட்டால் எவ்வித உரிமைகளையும் சலுகைகளையும் பெறமுடியாது என்று பிரசாரம் செய்வதெல்லாம் பாராளுமன்ற பதவிகளுக்கு ஆசைப்படுவார் கூறுகின்ற நியாயமாகும். கடந்த பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தல் சாதிக்கபட்டது. என்ன என்பது கேள்வி ஆகும். பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இல்லாத 1952 முதல் 1977 வரை மலையகத்தமிழ் மக்கள் போராட்டங்களினூடாக பல உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றிருக்கின்றனர். காணிச் சீர்திருத்தம் என்ற பேரில் 1977இல் மேற்கொள்ளப்பட விருந்த பெரும்பான்மை இனக்குடியேற்றம் வெகுஜனப் போராட்டத்தினாலும் சிவனு லெட்சுமணனின் உயிர்த்தியாகத்தினாலும் தடுத்து நிறுத்தப்பட்டது. ஆனால் சிவனுலெட்சுமணனின் தியாகத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு பாராளுமன்றத்துக்கு சென்ற தொண்டமான் மலையக மக்களின் போராட்டங்களை நடத்தும் உணர்விற்கு எதிராக செயற்பட்டதுடன் தோட்டத் தொழிலாளர்களின் போராட்ட உணர்வுகளை மழுங்கடிக்க காரணமாக இருந்தார். அவர் எம்.பியாகவும் அமைச்சராகவும் காலத்தில் எத்தனையோ ஏக்கர் தோட்டக்காணிகள் பெரும்பான்மை இனக் குடியேற்றங்கள் நடைபெற்றன; மேல் கொத்மலை திட்டத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் அவர் அமைச்சராக இருக்கும்போதே பெறப்பட்டது மலையகத்தின் சார்பாக 10 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருப்பதாக பெருமை பேசப்பட்ட காலத்தில்தான் மலையகத்தமிழ் மக்கள் மீது பலவித அடக்குமுறைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டன.

எனவே மக்களின் உரிமைகளை உறுதிசெய்ய முடியாத மக்கள் மீதான அடக்குமுறைகளை தடுத்து நிறுத்த முடியாத பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தால் பிரயோசனம் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அக்கருத்தரங்கில் தோழர்கள் சிவ இராஜேந்திரன், எஸ். சந்திரகுமார், வெ. மகேந்திரன் உட்பட பலர் உரையாற்றினர். ஆரோக்கியமான கலந்துரையாடலும் நடைபெற்றது.

## கோமாளித்த புரிந்துணர்வு உடன்படிக்கைகள்

புரிந்துணர்வு உடன்படிக்கை என்பது இரு அமைப்புக்கள் ஒரு பொதுவான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகிற தேர்தலுக்காகத் தமக்குள் உண்டாக்கிக் கொள்ளும் ஒரு ஏற்பாடு. இது நீண்ட கால நோக்கிற் காரியங்களை முன்னெடுக்கும் போது அடிப்படையான கருத்து வேறுபாடுகள் காரணமாகக் குழப்பங்கள் ஏற்படுவதைத் தவிர்க்க உதவுகிறது. எனினும் நோக்கத்தில் வேறுபட்ட இரு அமைப்புக்கள் வரையறைக்குட்பட்ட விதமாகவே தமக்குள் புரிந்துணர்வு உடன்படிக்கையை ஏற்படுத்த இயலும்.

விடுதலைப்புலிகள் அரசாங்கத்துடன் ஏற்படுத்திய புரிந்துணர்வு உடன்படிக்கை போர் நிறுத்தச் சூழலில் அமைதிப் பேச்சு வார்த்தைகளை இயலுமாக்கித் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சிகட்கு வசதி செய்யும் நோக்கை உடையது. இந்த உடன்படிக்கையையடுத்து மலையகத் தமிழ்த் தலைவர்களும் முஸ்லிம் காங்கிரஸும் விரும்பின. முஸ்லிம் காங்கிரஸும் விடுதலைப் புலிகளும் செய் து கொண்ட உடன்படிக்கைக்கு என்ன நடந்தது என்பது பற்றி எல்லாருக்கும் தெரியும்.

இப்போது, ஒரு கூட்டணியாகத் தம்மை முழுமையாக இணைத்துக் கொள்வதில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தவிர்த்து பழைய கூட்டாளிகளின் கேள்விகளை மழுப்புகிற நோக்கிலும் ஜே.வி.பி - ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டு ஒரு தேர்தல் உடன்படிக்கை மட்டுமல்ல என்று வற்புறுத்தும் நோக்கிலும் இரண்டு கட்சிகட்கும் அரசியல் சுற்றுமாற்று வேலை தான். ஏனென்றால் இது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனது கூட்டாளிகளைக் கலந்தாலோசியாமல் ஏற்படுத்திய புதிய கூட்டணியை நியாயப்படுத்துகிற ஒரு செயல் முறை தான்.

இது ஒரு வகையான ஏமாற்று என்றால், இதை அடுத்துச் செல்லாக்காசாகிப் போன சமசமாஜக் கட்சியும் கொம்யூனிஸ்ட் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொண்டுள்ளன. இப்போது ஆறுமுகன் தொண்டமான் யூ. என்பியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்வது பற்றியும் செய்தி வருகிறது.

புரிந்துணர்வு என்றாலே என்னவென்று மக்களுக்குப் புரியாமல் செய்கிற அளவுக்கு இந்த உடன்படிக்கை போகிற போக்கில், விரைவில், புகையிரதத்தில் பயணம் செய்கிற எவரும், பயணச் சீட்டு வாங்குவதற்குப் பதிலாக புகையிரதப் பகுதியுடன் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொண்டு பயணத்தைத் தொடங்கலாம்.

- அப்பாவி -

## குத்தகைக்காக சோரம் போகும் தமிழ் உணர்வு

கூட்டுறவு நவீன சந்தையை நடத்துவதற்கு வர்த்தக கூட்டுறவு அமைச்சிற்கு மட்டக்களப்பிலுள்ள சினிமா கொட்டகை வாடகைக்கு விடப்பட்டுள்ளது. அக்கொட்டகையை மறுசீரமைக்க அமைச்சு 52 லட்சம் ரூபாவை செலவிட்டுள்ளது. மின்சார இணைப்பிற்கு 3 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. வாடகை முற்பணமாக 16 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது.

சினிமா கொட்டகை சொந்தக்காரர் யாருமல்ல. மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. ஜோசப் பரராஜசிங்கமே ஆவார். அக்கொட்டகையை குத்தகைக்கு எடுக்க அமைச்சு வழக்கப்படி ஏலக் கேள்வி யைக் கோரவும் இல்லை. விளம்பரம் செய்யப்படவுமில்லை.

மாறாக ச.தொ.ச. சுப்பர் மார்க்கட்டை (கூட்டுறவு நவீன சந்தை) மட்டக்களப்பிலுள்ள தனது சினிமா கொட்டகை கட்டிடத்தில் நடத்தும்படி வர்த்தக, கூட்டுறவு அமைச்சர் ரவிகருணாநாயக்காவிடம் எழுத்து மூலம் ஜோசப் எம்.பி. செய்த மன்றாட்டத்தை அடுத்து அக்கொட்டகை குத்தகைக்கு எடுக்கப் பட்டுள்ளது.

அம்மன்றாட்டத்தில் மட்டக்களப்பில் அவ்வாறான ஒரு சுப்பர் மார்க்கட்டை திறப்பது சமாதான நடவடிக்கைகளை முன்னுக்கு தள்ளும் என்றும் தமிழ் மக்களுக்கு ஐ.தே.கட்சியின் சமாதான நடவடிக்கைகளில் நம்பிக்கையை ஏற்படுத்தும் என்றும் எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அரசாங்கத்திற்கு எதிராக தமிழ் பத்திரிகைகளில் அறிக்கைகளை வெளியிடும் ஜோசப் எம்.பி. எவ்வாறு கூடுதலாக வாடகைக்கு அவரது கட்டிடத்தை வர்த்தக, கூட்டுறவு அமைச்சிற்கு குத்தகைக்கு கொடுக்க முடியும் என்பதும் அது சமாதான நடவடிக்கைகளை முன்னுக்கு தள்ளும் என்றும் கூறுவதும் எவ்வளவுக்கு சரியானது என்பதுமே எம் முன்னுள்ள கேள்விகள் ஆகும்.

இது பற்றி பல ஊடகங்களிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஜோசப் எம்.பியிடமிருந்து சரியான விளக்கம் வெளிவரவில்லை. அவர் அவரது சினிமா கொட்டகையை 'சதொச'விற்கு குத்தகைக்கு கொடுத்ததை மறுக்கவில்லை.

தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி தமிழ்

தொடர்ச்சி 8ம் பக்கம்.

# நாலு நடக்கும் உலகிலே (நற்குணம்)

## நாலும் நடக்கும் உலகிலே

இப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பேரினவாத ஜே.வி.பியும் உண்டாக்கிய கூட்டணியில் இன்னொரு பேரினவாதக் கட்சியான மகாஜன எக்சத்பேரமுனவை அடுத்துப் பாராது எதிர்பார்ப்புக்களையும் மீறி கம்யூனிஸ்ற் கட்சியும் சமசமாஜக்கட்சியும் இணைந்து கொண்டன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி கூட்டுக்கு இக்கட்சிகள் தெரிவித்த எதிர்ப்பும் நவசமசமஜக்கட்சியுடனும் ஜனநாயக இடதுசாரி முன்னணியுடனும் இணைவார்கள் என்ற எதிர்பார்ப்பும் சந்திரகா கட்சிக்கு ஒரு பாராளுமன்ற ஆசனத்தை வாக்களித்தோடு காற்றோடு பறந்துவிட்டன. இப்போது சிங்கள பூமி புத்த கட்சியும் இவர்களுக்குக் கூட்டாளி! பசி வந்தாள் பத்தும் மறந்துவிடும் என்பார்கள். பதவிப் பசி வந்தால் அதைவிடப் பெரிதாக எல்லாமே பறந்தம் மறந்து விடும் கட்சிப் பேர்ப் பலகைகளை ஏன் கட்டி அழுகிறார்களோ தெரியவில்லை. பேசாமல் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அல்லது சேர்ப்பாளர்கள் என்றால் ஜே.வி.பியில் போய் கட்டிக் கொள்ளலாமே!

## பீஷ்மரும் பாரதமும்

"பீஷ்மர்" என்ற பேரில் சாடையான இடதுசாரித் தோற்றத்துடன் தமிழ்த் தேசியவாத நோக்கில் ஞாயிறு தினக்குரலில் எழுந்து வருகிற ஒரு தமிழறிஞர், வில்லி புத்தூராழ்வார் தனது மகாபாரதத்தில் சாம, பேத, தான, தண்டம் என்று வரிசைப்படுத்தியிருப்பது கண்ணனுடைய நோக்கம் போர் என்பதை வலியுறுத்தவே என்றும் அது வருத்தத் தக்கது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

பிரச்சினைகளின் தீர்வு ஏறத்தாழ அந்த வரிசையில் தானே அமைகிறது. அமைதியாகப் பேசி இயலாதபோது கடுமையாக விவாதித்து அது சரிவராத போது விட்டுக் கொடுப்புக்களுக்கு முயன்று முடியாத போது போரில் இறங்குவது தான் கிட்டத்தட்ட எல்லா முரண்பாடுகளதும் யதார்த்தம். முற்றிலும் போர்ச் சூழலில் பிறந்து வளர்ந்த ஒருவர் வேண்டுமானால், தண்ட, தான, பேத, சாம என்ற இறங்கு வரிசையை எதிர்பாரக்கலாம். ஆனால் பீஷ்மர் நமக்கு என்ன சொல்லப் பார்க்கிறார். மிகவும் குழம்பிப் போயிருக்கிறார் மனிதர்!

## ஊருக்குத் தானடி உபதேசம், உனக்கல்லவே

இந்தியாவின் இரண்டு திரிபுவாதக் கட்சிகளும் இப்போது தி.மு.க. தயவுடன் பாராளுமன்றத் தொகுதிகளில் போட்டியிடுகின்றன. ஜெயலலிதாவின் ஊழல், இந்துத்துவ முனைப்பு ஆகியவற்றை அறிந்து கொண்டே முன்பு ஜெயலலிதாவுடன் கூட்டணியில் இணைய முயல்கிற "தலித்" கட்சிகளை ஏளனம் செய்கிறார்கள். பாராளுமன்ற அரசியலில் இறங்கினால் ஞாபக சக்தி மழுங்கி விடுமா? அல்லது இது இந்தப் போலி இடதுசாரிகளின் வழமையான ஊருக்கான உபதேசமா?

## தடுமாறும் த்ரொத்ஸ்கியம்

த்ரொத்ஸ்கியத்தின் வரலாறு, எப்போதுமே, துரோகத்தினதும் தடுமாற்றத்தினதும் வரலாறாகவே இருந்து வந்துள்ளது. இரண்டாம் உலகப் போரில் .ˆ.பானியத்தை எதிர்த்து சோஷலிய சோவியத் யூனியனுக்கு ஆதரவு தர மறுத்த நாள் முதல் இலங்கையின் த்ரொத்ஸ்கியர் கட்சிகள், விலக்கில்லாமல், தொழிலாளர்கட்குத் தவறிழைத்தே வந்திருக்கிறார்கள். பிலிப், கொல்வின், என்.எம்.பாலா தம்பு என்று நீளுகிற பட்டியல் விக்கிரமபாகுவுடன் நிற்குமா?

அதேவேளை தெளிவீனமும் தடுமாற்றமும் காரணமாக, ஒப்பிடுகையில் நேர்மையான எட்ஸண்ட் சமரக்கொடி போன்றோரும் யூஎன்.பிக்கு உதவி வந்துள்ளார்கள். விளம்பரம் என்று வந்தால் விபசார விடுதியிலும் தன்னை வைத்துப் படமெடுக்கத் தயங்காத நவசமசமாஜத் தலைவர் ஒருபுறமிருக்க, அவருடைய வண்டவாளங்களை நன்கறிந்த வாசுதேவ மீண்டும் அவரை தப்பித் தன்னுடைய நேர்மையான நேசக்திகளைக் கைவிட்டுள்ளார். இதுவும் த்ரொஸ்கியத்தின் சிறு முதலாளி மனோபாவத்தின் ஒரு வெளிப்பாடு தான்.

## அனுர நம் அயல்விவகார அமைச்சரா?

அமெரிக்கா இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசாங்கத்தை எவ்வகையிலும் வற்புறுத்தாது என்று அமெரிக்கத் தூதர் தன்னிடம் சொன்னதாக அனுர பண்டாரநாயக்க சொன்னதையும் ஒரு செய்தி என்று இலங்கை வானொலி பெரிதாக அறிவித்தது.

என்ன தகுதியின் பேரில் அனுரவிடம் அமெரிக்கத் தூதர் இந்த வாக்குறுதியை அளித்தார்.? அமெரிக்கா எந்த நாட்டினதும் உள் அலுவலகங்களிற் தலையிடாது என்று எங்களது உத்தரவாதம் உண்டா?

புதிய பூமி

வட புலத்தில்
ஏக விநியோகம் விற்பனை
வசந்தம் புத்தக நிலையம்
405, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

புதிய பூமியின் வளர்ச்சிக்கு
- நிதி உதவுங்கள்
- சந்தா அனுப்புங்கள்
- விற்பனைப் பணத்தை அனுப்பிவையுங்கள்
- கட்டுரைகள் - செய்திகள் - கருத்துக்கள் அனுப்புங்கள்

ஆசிரிய பீடம் / நிர்வாக பீடம் :
S-47, 3வது தளம், கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
(C.C.S.M. Complex) கொழும்பு - 11, இலங்கை.
Tel: 2435117, 2335844 Fax : 01-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com

பணம் அனுப்பும் வங்கி விபரம் : சோ. தேவராஜா
கணக்கு இலக்கம் : 0672-21-2002634-6
Bank of Ceylon, Central Super Market, Colombo 11.

படிப்பகம்

www.padippakam.com



# பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2004

## அர்த்தமற்ற பொதுத் தேர்தலை நிராகரிப்போம்! அரசியல் அடிப்படையில் சிந்தித்துச் செயற்படுவோம்!

### புதிய- ஜனநாயக கட்சியின் அறைகூவல்!

- எதிர்வரும் பொதுத் தேர்தல் நான்கு ஆண்டு காலத்தில் நடாத்தப்படும் மூன்றாவது பொதுத் தேர்தலாகும். பேரினவாத ஆளும் வர்க்க சக்திகள் எவ்வாறு வடக்கு கிழக்கு மக்கள் மீது யுத்தத்தைத் திணித்து ஆதாயம் பெற்றனரோ அவ்வாறே பாராளுமன்றப் பொதுத் தேர்தலையும் முழு நாட்டு மக்கள் மீதும் திணித்து தமது அதிகாரப் பசிக்கு இரை தேடி நிற்கின்றனர்.
- இத்தேர்தலால் நாட்டின் தொழிலாளர்கள், விவசாயிகள், அரசாங்க-தனியார்-கூட்டுறவுத் துறை ஊழியர்கள், நடுத்தர வர்க்கத்தினர், தேசிய இனங்கள் உள்ளிட்ட ஏகப் பெரும்பான்மையான மக்களுக்கு துளியளவும் நன்மை ஏற்படப்போவதில்லை.
- நாட்டின் இன்றைய பிரதான பிரச்சினையான தேசிய இனப் பிரச்சினைக்குரிய தீர்வு முயற்சிகளைக் குழப்பி, அதன் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் திசை திருப்பி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. கூட்டான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை பாராளுமன்ற அதிகாரத்தில் இருத்தும் நோக்குடனேயே இத் தேர்தல் நடத்தப்படுகின்றது.
- இத் தேர்தல் தெற்கில் பேரினவாதக் கூச்சல்களும் பிரச்சாரங்களும் சிங்கள மக்கள் மத்தியில் மேலும் முன்னெடுத்துச் செல்லப்படுவதற்கே வழி வகுத்து நிற்கின்றது.
- ஜனாதிபதியும் பிரதமரும் பரஸ்பரம் விட்டுக்கொடுத்து புரிந்துணர்வுடன் இனப் பிரச்சினையின் தீர்வுக்கு பேச்சுவார்த்தை நடாத்தி இணக்கப்பாட்டிற்கு வருவதற்கான சந்தர்ப்பம் இருந்தும் இருவருமே அதனைத் தட்டிக் கழித்தனர். ஜனாதிபதி பாராளுமன்ற அதிகாரத்தின் மீதும் பிரதமர் அடுத்த ஜனாதிபதி பதவியின் மீதும் கண் வைத்து அதிகார மோகத்தில் செயற்பட்டதன் விளைவே இன்றைய பொதுத் தேர்தலாகும்.
- ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி -ஜே.வி.பி. கூட்டு ஒரு புறமாகவும் ஐக்கியத் தேசியக் கட்சி மறுபுறமாகவும் அணி வகுத்து நிற்கின்றன. இவ்விரு பேரினவாத ஆளும் வர்க்க கட்சிகளுக்குப் பின்னால் நேரடியாகவும் மறைமுகமாகவும் தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ்க் கட்சிகள் நின்றும் வருகின்றன. இதனால் இக் கட்சிகள் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறி நிற்கும் தேசிய இனங்களின் சுதந்திரம், சுயநிர்ணய உரிமை, சுயாட்சி என்பன அச்சுறுத்தலையும் அபாயத்தையும் இத் தேர்தல் மூலம் எதிர் கொண்டு நிற்கின்றன.
- அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் யப்பான் ஆகியன ஐக்கிய தேசியக் கட்சியின் பின்னாலும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி. கூட்டின் பின்னால் இந்தியாவும் இருந்து தத்தமது கைங்கரியங்களை முடுக்கி வருகின்றன. இதனால் இலங்கையானது அமெரிக்க - இந்திய ஆதிக்கப் போட்டிகளின் பலிக் களமாக மாற்றப்பட்டுள்ளது. இதனை இத் தேர்தல் தெளிவாகக் காட்டுகிறது.
- இரண்டு பிரதான ஆளும் வர்க்கப் பேரினவாதக் கட்சிகளும் சமாதானம் பற்றி வெறும் வாய் உபசார சொற்றொடர்கள் வெளியிடுகின்றனவே தவிர சுயநிர்ணய உரிமை அடிப்படையில் வடக்குக் கிழக்கிற்கான சுயாட்சி பற்றிய தெளிவான திட்டவட்ட முன்மொழிவுகள் எதனையும் இத் தேர்தலில் முன்வைக்கவில்லை.
- அவ்வாறே அரசியல் நெருக்கடிக்கும் அதிகார இழுபறிகளுக்கும் காரணமான ஜனநாயக விரோத நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையினை ஒழிப்பதற்கும் உறுதியான வாக்குறுதியினை இரு கட்சிகளுமே இத்தேர்தலில் வழங்கவில்லை.
- நாட்டில் பெருகி வரும் வறுமை, வேலை இன்மை, வீடின்மை, சம்பளம் போதாமை உற்பத்திகளுக்கு உரிய விலை கிடைக்காமை, அந்நியப் பொருட்களின் இறக்குமதி, சுகாதாரச் சீர்கேடு, கல்விச் சீர்குலைவு, சமூக பண்பாட்டுச் சீரழிவுகள் என்பனவற்றுக்கு இத் தேர்தலால் எவ்வித விமோசனமும் கிடைக்கப் போவதில்லை.
- அதிகரித்துச் செல்லும் பொருட்கள் மீதான விலைகள், கட்டண உயர்வுகள், வரி இறுப்புகளால் நாளாந்த துன்பங்களைச் சுமந்து நிற்கும் மக்களுக்கு இத்தேர்தலால் எவ்வித பலாபலனும் ஏற்படமாட்டாது. மேலும் மக்களின் பணத்திலிருந்து சுமார் நூறு கோடி ரூபாய்கள் அர்த்தமற்ற இத் தேர்தலுக்கு செலவிடப்படுகிறது.
- நாட்டின் பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டுத் தளங்கள் அனைத்திலும் ஊடுருவி பெரும் நாசங்களை ஏற்படுத்தி வரும் தாராளமயம், தனியார் மயம், உலகமயமாதல் என்பனவற்றைத் தடுத்து நிறுத்தக்கூடிய எந்தவொரு திட்டமோ உத்தரவாதமோ ஆளும் அதிகார ஆதிக்க வர்க்க பிரதான கட்சிகளினால் முன்வைக்கப்படாத பொதுத் தேர்தலாகும்.
- கடந்த இருபது வருட கால விட்டுக் கொடுக்காத தமிழர் போராட்டத்தினால் ஏற்பட்ட பலாபலன்கள் இப்பொதுத் தேர்தலில் இனிப்புத் தடவிய முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயக வாக்குச் சீட்டின் மூலம் கையிழக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம் உருவாகி உள்ளது. தோல்வி கண்ட பாராளுமன்றப் பேரம் பேசுதல் மீண்டும் அரங்கிற்கு வந்து விடுமோ என்ற சந்தேகம் இப்பொதுத் தேர்தலில் காண முடிகின்றது.
- வடக்கு கிழக்கு மக்களின் அன்றாட அவல நிலை தொடர்கிறது. இயல்பு வாழ்வும் ஜனநாயக- மனித உரிமைச் சூழலும் கேள்விக்குரியவையாகவே இருந்து வருகின்றன. இடம் பெயர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்களும் லட்சக் கணக்கான மக்களும் தமது சொந்த வாழ்விடங்களுக்குத் திரும்பவும் தொழில் புரிந்து கொள்ளவும் முடியாது, அகதி வாழ்வையே வாழ்ந்து வருகின்றனர். அவ்வாறே இதுவரையான யுத்தத்தில் காணாமல் போனோர் பற்றி உரிய பதில் உரிய இடங்களில் இருந்து உரியவர்களுக்கு கிடைக்கவில்லை. இத்தகைய மக்களின் கண்ணீர் கதைகளுக்கும் வாழ்வுக்கும் இத்தேர்தலால் எவ்வித பதிலையும் வழங்க முடியாது.

ஆதலினால் ஆளும் வர்க்க அதிகாரப் போட்டிக்கும் அரசியல் ஆதிக்க இருப்புக்கும் இப்பொதுத் தேர்தல் ஒரு களமாகப் பயன்படுத்தப்படுகிறது. இரு பேரினவாதக் கட்சிகளும் நிலவுடமை முதலாளித்துவ வழி வந்த மேட்டுக்குடி ஆளும் அதிகார வர்க்கக் கட்சிகளே யாகும். இக் கட்சிகளுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏனைய கட்சிகள் அணி பிரிந்து துணை நின்று தத்தமது சொத்து சுகபோக வர்க்க நலன்களைப் பேணிக் கொள்கின்றன. இத்தகைய கட்சிகள் பொதுப்படையாக இனம், மதம், மொழி, பிரதேசம் எனப் பேசினாலும் உழைக்கும் மக்களின் அடிப்படையான அபிலாஷைகள் பற்றி அக்கறைக் காட்டுவதில்லை. வர்க்க, இன, சாதிய, பெண்கள் மீதான ஒடுக்குமுறைகளின் உண்மைகளையும் யதார்த்தங்களையும் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றன. சுரண்டலையும் ஒடுக்குமுறைகளையும் அந்நிய ஏகாதிபத்திய பிராந்திய மேலாதிக்க சக்திகளின் ஊடுருவல் களையும் எதிர்க்கத் தயாரில்லாத கட்சிகளாகவே இருந்தும் வருகின்றன. இவர்கள் முதலாளித்துவ பாராளுமன்றத்தின் மூலம் ஆளும் அதிகார ஆதிக்க வர்க்க சக்திகளுக்குத் தமது ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கி வருகின்றனர். இதனை இத்தேர்தலின் மூலமும் தொடர்கின்றனர். பாராளுமன்ற ஜனநாயகம் என்பது பெரு முதலாளித்துவ பேரினவாத மேட்டுக் குடிகளுக்கும் அவர்களுக்குத் துணை நிற்கும் ஏகாதிபத்திய சக்திகளுக்கும் சேவை புரியும் ஒன்று என்பது இப்போது அப்பட்டமாகி நிற்கின்றது. ஆனால் மக்கள் பல்வேறு வகைப்பட்ட பிரசாரங்களில் ஏமாற்றப்படுகின்றனர். இப்பொதுத் தேர்தலில் இவை மேலும் தெளிவாகக் காணப்படுகின்றன.

இந்நிலையில் எமது புதிய ஜனநாயகக் கட்சி எவ்வித அர்த்தமும் அற்ற இப்பொதுத் தேர்தலில் பங்குகொள்ள வில்லை. கடந்த இரண்டு தேர்தல் களிலும் ஜனநாயக விரோதச் சூழல் நெருக்கடிகள், அச்சுறுத்தல்கள் மத்தியில் போட்டியிட்டு மக்களுக்கு கூற வேண்டியவற்றைக் கூறி நின்றோம். எமது கொள்கைகளை எடுத்துக் கூறுவதற்கு தகுந்த மேடையாகவும் பயன்படுத்தினோம். ஆனால் வருடாந்த திருவிழா போன்று ஆளும் வர்க்க சக்திகளால் அவர்களின் தேவைக்காக நடாத்தப்படும் பயனற்ற இத்தேர்தலில் எமது கட்சி பங்குகொள்ளவில்லை.

அதேவேளை மேற்கூறப்பட்டவற்றின் உண்மைகளை மக்கள் அரசியல் ரீதியில் சிந்தித்து சீர்தூக்கிப் பார்த்து தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும். இப்பொதுத் தேர்தலின் வாக்குச் சீட்டைச் செல்லுபடியற்றதாக்கி தமது எதிர்ப்பைக் காட்ட வேண்டும் என்ற வேண்டு கோளை எமது கட்சி விடுக்கின்றது.

## எதிர்வரும் பொதுத் தேர்தலை நிராகரிப்போம். வாக்குச் சீட்டுகளை செல்லுபடியற்றதாக்குவோம்.

**புதிய - ஜனநாயகக் கட்சி**

# கள்ள வாக்குகள் தயார்!

எதிர்வரும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கு சகல ஏற்பாடுகளும் தயார் எனத் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதே வேளை பிரதான கட்சிகள் தத்தமக்குரிய கள்ள வாக்குகளைத் தயார்படுத்துவதிலும் அதற்குரிய புதுப்புது வழிமுறைகளைத் தேடுவதிலும் மும்முரமாகி வருகின்றன. விகிதாசார விருப்பு வாக்கு முறையின் கீழான இத்தேர்தலில் வெற்றி பெற நிற்கும் ஒவ்வொரு வேட்பாளரும் கள்ள வாக்குகளின் மீதே கண் வைத்து செயலாற்றி வருகின்றனர் இந்த கள்ள வாக்குத் தயாரிப்பில் பல்கலைக் கழகங்கள் முதல் பட்டி தொட்டி வரை பயிற்றுவிப்புகள் நடைபெற்றும் வருவதாக அறிய முடிகின்றது. இக்கள்ள வாக்குகளுக்கு வெவ்வேறு அளவுகளில் கொடுப்பனவுகள் தீர்மானிக்கப் படுவதாகவும் பேசிக் கொள்ளப்படு கின்றது. இலங்கையில் எந்தவொரு அரசாங்க நடவடிக்கையிலும் ஆட்களை உறுதிப்படுத்திக் கொள்ள கேட்கப் படுவது தேசிய அடையாள அட்டை யாகும். அல்லது அதற்குச் சமனான சட்டரீதியான ஆவணம் ஆகும். ஆனால் அவை எதுவும் கேட்கப்படாத ஒரு இடம் தேர்தலில் புள்ளடி போடும் இடமாகும். இவ்வடையாளங்கள் விவகாரத்தை எந்தவொரு பிரதான கட்சியும் முக்கியத்துவப்படுத்தி வலியுறுத்தாது இருந்து வருவதன் பின்னணி என்ன? கள்ள வாக்குகளின் மகிமையின் சாரம் அறிந்தே எவ்வாறு அது பற்றிப் பேசுவதில்லை. முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயகத்தின் முதுகெழும்பே இந்த கள்ள வாக்குகள் தான் என்று கூறுவதில் என்ன தவறு இருக்கிறது.

# ஒரே பார்வையில் தேர்தல் செலவு

1999ம் ஆண்டிலிருந்து இதுவரை நான்கு தேர்தல்கள் இடம் பெற்றுள்ளன. ஐந்தாவது பொதுத் தேர்தல் ஏப்பிரல் 2ம் திகதி நடைபெறவுள்ளது. இந்த ஐந்து தேர்தல்களுக்கும் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ செலவு 300 கோடி ரூபாவாகும் என்பதுடன் எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு மேலும் 25 கோடி ரூபா மேலதிகமாகத் தேவைப்படும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1999 | - ஜனாதிபதி தேர்தல் | - ரூபா. 60 கோடி |
| 2000 | - பாராளுமன்றத் தேர்தல் | - ரூபா. 60 கோடி |
| 2001 | - பாராளுமன்றத் தேர்தல் | - ரூபா. 60 கோடி |
| 2002 | - உள்ளூராட்சித் தேர்தல் | - ரூபா. 60 கோடி |
| 2004 | - பாராளுமன்றத் தேர்தல் | - ரூபா. 60 கோடி |

ஒரு அபேட்சகர் ஆகக் குறைந்த 20 இலட்சம் ரூபாய் செலவு செய்கிறார் என்ற கணிப்பில் 4000 அபேட்சகர்களும் 800 கோடி செலவு செய்யப்படுகிறது ஐந்து தேர்தல்களுக்கும் 4000 கோடி ரூபாய் செலவாகின்றது. கணக்கிற் காட்டப்படாத செலவு 200 கோடி ரூபாய் எனவும் கணிக்கப்பட்டுள்ளது. 2004ம் ஆண்டு ஏப்பிரல் 2ம் திகதி தேர்தலுக்கு 85 கோடி ரூபாய் மட்டில் செலவாகுமென தேர்தல் ஆணையாளர் தெரிவிக்கிறார். ஒவ்வொரு தேர்தலிலும் 4000க்கு மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டியிடுவர். ஒவ்வொரு கொழும்பு மாவட்ட அபேட்சகரும் 50 இலட்சம் ரூபா அளவில் செலவளிப்பார். கொழும்புக்கு வெளியே உள்ள அபேட்சகர்கள் 25 இலட்சம் ரூபாய் இந்தக் கணிப்பு ஒரு வரையறுக்கப் பட்ட கணிப்பாகும்.

சில அபேட்சகர்கள் தலா ஐந்து கோடி ரூபாய் வரை செலவு செய்வார்கள். அவர்களின் செலவை வர்த்தகப் பிரமுகர் களும் பெரிய நிறுவனங்களும் பொறுப் பேற்கும். ஒரு குறித்த பிரமுகரைத் தேர்தலில் "கவனித்தால்" அவர் பின்பு அமைச்சரானதும் தனக்கு உதவியவர் களுக்கு உரிய வகையில் "கவனிப்பார்".

ஜனாதிபதித் தேர்தலில் ஏற்படும் செலவும் பொதுத் தேர்தலில் ஏற்படும் செலவும் ஒன்றே. இந்த நாடு கடந்த ஆறுவருடங்களில் குறைந்தது 4300 கோடி ரூபாவைத் தேர்தலுக்கு செலவிட்டுள்ளது. கணக்கிற்குட்படாத செலவாக கடந்த ஆறு வருடங்களில் 200 கோடி ரூபாவிலிருந்து 1000 கோடி ரூபாய் வரை செலவாகியுள்ளது. அல்லது விரயமாக்கப்பட்டுள்ளது.

இங்கு கவனிக்க வேண்டியது உதவி வழங்கும் நாடுகள் உதவப் போவதாக உறுதியளித்த தொகை 4500 கோடி ரூபாவாகும். இந்தத் தொகையை நாம் தேர்தல் நடத்திய செலவுக்கு ஈடுசெய்யமட்டுமே போதுமானது.

கல்விக்காக 3200 கோடி மட்டுமே செலவாகிறது. 2002ம் ஆண்டுக்கான சுகாதாரத் துறைச் செலவு 2500 கோடி ரூபா மட்டுமேயாகும்..

கணக்கைக் கணக்கெடுக்காது பாராளுமன்ற அரசியல்வாதிகளின் வெற்று முழக்கங்களில் ஏமாந்து போனால் மக்கள் துன்பங்களை மட்டுமே அனுபவிப்பர்.

# பங்குபற்றுபவர்பற்றி சிந்தித்தால்...!

பொதுத் தேர்தலில் போட்டிக்கு நிற்கும் வேட்பாளர்கள் ஒவ்வொருவரின் 'கட்சிக் கொடிகள்,கொள்கை விளக்கங்கள், ஆடை அணிகலன்கள், பேச்சுக்கள் நடிப்புக்கள், கும்பிடும் கரங்கள் மாலை மரியாதைகள் இன்னும் இவைகள் போன்றவற்றைக் களைந்து விட்டுக் சற்று உற்று நோக்கிப் பார்க்க வேண்டும். ஒரு கணம் சிந்திக்க வேண்டும். அந்த மாவட்டத்தில் அந்த தொகுதியின் அந்தந்த ஊர்களில் அவ் வேட்பாளர் களின் கடந்த காலத்தின் காட்சிகள் தொடராக வருவதைக் காணமுடியும் கொலைகள் புரிந்தோர், கொள்ளை நடத்தியோர், இரத்தக் கறை படிந்தோர், ஊழல் புரிந்தோர், மக்களை ஏமாற்றியோர், கட்டிக் கொடுத்தோர், துரோகமிழைத்தோர், உள்நாட்டு இந்திய இராணுவத்தினருடன் ஒத்துழைத்தோர், மக்களை வதைசெய்தோர், அரச சார்பற்ற நிறுவனங்களிடம் இருந்து பணச் சுளைகளைப் பெற்றோர் வழக்குப் பேசி உழைத்தோர். தத்தம் குடும்பங் களை ஈடேற்றி வளப்படுத்தியோர் இப்படியே பட்டியல் நீண்டு செல்வதைக் காணமுடியும். இத்தகையோர் தான் தத்தமது இனங்கள் மொழிகள் மதங்கள் பிரதேசங்கள் சார்பாக உணர்ச்சி மிகு பேச்சுக்கள் பேசி இத்தேர்தலில் நாடுமுழுவதும் வாக்குக் கேட்டு வருகின்றனர். மக்கள் ஒரு கணம் இத்தகைய வேட்பாளர்கள் பற்றிச் சிந்தித்தால் போதும்......என்றே புதிய பூமி வேண்டிக் கொள்கிறது.

www.padippakam.com



# தேர்தல் காலத்து ஏமாற்றுப் பேச்சுக்கள்

தேர்தல் காலத்தில் தேர்தலில் போட்டி யிடுபவர்கள் பேசுவதை பார்க்கின்ற போது அவர்கள் மீது பரிதாபப்படுவதா? அவர்களால் ஏமாற்றப்படும் வாக்காளர் கள் மீது பரிதாபப்படுவதா? என்பது பிரச்சனையாகிவிடுகிறது.

## மேல்மாகாண தமிழ் உணர்வு

மேல்மாகாண தமிழ் உணர்வு மனோ கணேசனுக்கு பிரத்தியேகமானதாகும். அதில் யாரும் பங்குப் போட்டுக்கொள்ள முடியாது. அவர் மட்டுமே அதிலும் ஐ.தே.கட்சி பட்டியலில் போட்டியிட வேண்டும் எப்படியும் வெற்றிபெற வேண்டும். இதற்கு மாறாக எது நடந்தாலும் அது மேல் மாகாணத் தமிழ்மக்களுக்கு இழைக்கப்படும் துரோகமாகும். இம் முறை கொழும்பு மாவட்ட ஐ.தே.கட்சி பட்டியலில் 4 தமிழர்கள் போட்டியிடுவது அவருக்கு பெரிய தலையிடியை கொடுத்துள்ளது. மூன்று விருப்புரிமை வாக்குரிமை மட்டுமே இருக்கும் போது 4 தமிழர்கள் போட்டி யிடுவது முறையற்றது என்கிறார். அப்படியென்றால் சிங்களவர்களிலும் 3 பேரும் முஸ்லிம்களில் 3 பேர் மட்டுமே போட்டியிட வேண்டும்என மேல்மாகாண தமிழ் உணர்வின் ஜனநாயகம்.

மேல் மாகாண மக்கள் முன்னணியின் செயலாளர் ஜெயரட்ணராஜா கம்ப}ா மாவட்டத்தில் அமைச்சர் ஜோன் அமரதுங்காவின் அழைப்பை ஏற்று ஐ.தே.கட்சியில் போட்டியிட்டு கம்ப}ா மாவட்டத்தமிழர்களின் பிரதிநிதித்து வத்தை பாதுகாப்பார் என்று அறிவிக்கப் பட்டது. ஆனால் பின்னர் கம்பஹா மாவட்ட ஐ.தே.கட்சியின் ஒரேயொரு தமிழ் வேட்பாளரக கந்தசாமி போட்டியிடு வதாக அறிவிக்கப்பட்டது. அவர் அமைச்சர் ஜோன் அமரதுங்க விற்கு நெருக்கமானவர். ஐ.தே.கட்சியை யும் விமர்சிப்பதாக காட்டிக் கொள்ளும் தமிழர் பணிக்குழு ஐ.தே.கட்சி தமிழ் வேட்பாள ரான மனோ கணேசனை ஆதரிக்கிறது. ஐ.தே.கட்சிக்குள் போராட்டம் செய்யப்போவதாக மனோ கணேசனும் கூறுகிறார்.

## தேர்தல் கால ஏமாற்றுப் பேச்சுக் கேளீர்!

மேல் மாகாண மக்கள் முன்னணியின் தலைவர் ஐ.தே.கட்சியில் போட்டியிடு கிறார். ஆனால் கங்கைவேணியன் மேல் மாகாண மக்கள் முன்னணி ஐ.தே.கட்சி யின் அடிவருடி அல்ல என்று கூறுகிறார்.

ஐ.தே.கட்சியில் போட்டியிடும் ஏனைய தமிழர்களின் சூழ்ச்சிக்கு கொழும்பு மாவட்டத் தமிழர்கள் பலியாகக்கூடாது என்று மனோ கணேசன் கூறுகிறார். மலையக மக்கள் முன்னணியின் கொழும்பு மாவட்ட செயலாளர் மு.கனக ராஜா மனோ கணேசனின் சூழ்ச்சிக்கு பலியாகக்கூடாது என்கிறார்.

இவ்வாறு ஒருவரையெருவர் மாறிமாறி திட்டிக்கொள்ளும் கொழும்பு மாவட்ட தமிழ்மக்களின் உடன்பிறப்புகள் இரத்தத்தின் இரத்தங்கள் எல்லாம் ஐ.தே.கட்சியின் பட்டியலில் மண்டியிட் டுள்ள அடியார்கள் என்பது மட்டும் உண்மை.

தனித்துப் போட்டியிட்டு தேர்தலில் வெற்றிபெற முடியாது. அதனாலேயே ஐ.தே.கட்சியில் இணைந்து போட்டியிடு கிறோம் என்பது அவர்கள் எல்லோரும் பாடும் பக்திப்பாடல்களின் இறுதி வரிகளாகும்.

## மலையகத் தனித்துவம்

ஐ.தே.கபட்டியலில் மூன்று அபேட்சகர் களுக்குக் கூட கேட்டு கொடுக்கப் படாததால் ம.ம.மு மலையகத்தமிழ் மக்களின் தனித்துவத்தை நிலைநாட்ட நுவரெலியா மாவட்டத்தில் தனியாக போட்டியிடுவதாக ம.ம.மு தலைவர் சந்திரசேகரம் தெரிவித்துள்ளார். ஆனார் கொழும்பு மாவட்ட ஐ.தே.க பட்டியலில் ம.ம.முயின் ஒருவருக்கு இடம் கொடுக்கப்பட்டுள்ளது. ஐ.தே.கட்சி தேசியப்பட்டியலிலும் ம.ம.முன்னணிக்கு சில இடம் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஐ.தே.கட்சியினை எப்படியாவது வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று ம.ம.மு தலைவர் கூறுகிறார். செயலாளர் மு.சிவலிங்கமோ சொந்தக் கட்சியில் போட்டியிட்டால் தான் செல்வாக்கை அறிய முடியுமென்கிறார். தேர்தல் காலங்களில் தேசியக் கட்சிகளின் கரங்களை பற்றிக் கொண்டு சொந்த மக்களிடம் வாக்கு கேட்கும் காலாசார த்தை மாற்ற வேண்டும் என்கிறார். விடுதலை புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் வழியை பின்பற்றப் போவதாகவும் கூறுகிறார்.

இலங்கை ஜனநாயக தொழிலாளர் முன்னணியின் தலைவர் எஸ். சதாசிவமும் மலையகத் தமிழர்களின் தனித்துவத்தை வெளிப்படுத்தவே நுவரெலியா மாவட்டத்தில் தனியாக போட்டியிடுவதாக கூறியுள்ளார். ம.ம.முன்னணியுடன் இணைந்து போட்டியிட எடுத்த முயற்சிகள் தோல்வி யடைந்ததால் ம.ம.மு தலைமையின் தமிழ் கட்சிகளை ஐக்கியப்படுத்தும் முயற்சிகளை அம்பலப்படுத்துகிறார் சதாசிவம்.

நுவரெலியா மாவட்டத்தில் தனித்துவம். பதுளை மாவட்டத்தில் அவரது கட்சியின் தலைவர் சென்னன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிடு கிறார். அதன் தேசியப்பட்டியலில் இ.ஐ.தொ.முன்னணியின் தலைவர் ஒருவரின் மனைவியின் பெயர் சேர்க்கப் பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## போலித்தமிழர்கள்

நுவரெலியா மாவட்டத்தில் போலித் தமிழர்களின் முகமூடிகிழித்தெறியப் படுவது நிச்சயம் என்று இ.தொ.ஐ. முன்னணி உபதலைவர் கணபதி கனகராஜ் தெரிவிக்கிறார். அவரது கட்சி வெல்லுவது உறுதி என்கிறார்.

## தேசியப்பட்டியலுக்குப் பணம்

தேசியப்பட்டியல் பிரதிநித்துவத்தை பணத்துக்கு விலைபேசும் மலையகக் கட்சிகளுக்கு சிறந்த பாடம் புகட்ட வேண்டும் என்று எஸ். சதாசிவம் சாடியுள்ளார். விற்பவர் யார்? வாங்குபவர் யார்?

## புத்திரசிகாமணியின் கண்டுப்பிடிப்பு

மலையகமக்களின் செல்வாக்குள்ள ஒரே தலைவர் ஆறுமுகம் தொண்ட மானே என்கிறார் வீ. புத்திரசிகாமணி. இ.தொ.காவில் உட்பூசல்கள் இல்லாமல் இருப்பதற்கு அதன் தலைமையின் சாணக்கியமே காரணமென்கிறார். பாவம் வயிறு வளர்க்கும் குத்துக்கரண அரசியல் பேசுகிறார்.

## பின்னடைவிற்கு தலைமைகளே காரணம்

கடந்த ஐம்பது வருடங்களாக தேர்தலில் வாக்களித்து வரும் இந்திய வம்சாவளித் தமிழ் மக்களுக்கு இதுவரை விமோசனம் கிடைக்காமைக்கு அம்மக்களை பிரதிநிதித்துவப்படுத்திய தலைவர்களே பொறுப்பாளிகளாவார்கள். இந்திய வம்சாவளி மக்களுக்கன சரியான தொரு தலைமை உருவாகவில்லை. இப்படி கூறியிருப்பவர் எஸ். சதாசிவம் தான். அவரும் தொழிற்சங்கத் தலைவராக இருந்தார். பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். அப்படி யென்றால் அவரின் கூற்று அவரையும் உள்ளடக்கியதாகவே இருக்க வேண்டும். தன்னைத் தானே அறியாத தலைவரே சதாசிவம்.

எதிர்வரும் தேர்தலில் அவரை வெற்றி பெறச்செய்து அவரை தலைவராகக் கோருகிறர் என்பது விளங்காமல் இருக்க முடியுமா?

## மலையக மக்கள் சலுகைகளுக்கு விலை போக்ககூடாது

மலையக மக்கள் அற்பசொற்ப சலுகைகளுக்கு விலைபோகாது நன்கு சிந்தித்து செய்றபட்டு தகுதியான வர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்று இ.தே.தொ.சங்கத்தின் பொதுக்செயலாளர் கே. வேலாயுதம் குறிப்பிட்டுள்ளார். இவையெல்லாம் யார் யாருக்கு கூற வேண்டியது என்பது புரியவில்லை போல தெரிகிறது.

## இ.தொ.கா.வும் பாராளுமன்ற ஆசனங்களும்

ஐ.தே.கட்சியில் போட்டியிடும் இ.தொ.கா. வின் வேட்பாளர்களில் 10பேர் பாராளுமன்ற உறுப்பினர்களாகிவிடு வார்கள் என்று ஆறுமுகம் தொண்ட மான் கூறுகிறார். இ.தொ.கா.விலிருந்து 9 பேர் தெரிவு செய்யப்படுபவர்கள் என்று முத்து சிவலிங்கம் கூறுகிறார். இ.தொ.கா.தலைவர்கள் வெற்றி ஒன்றைப் பற்றியே சிந்திப்பதாக கூறிவருகின்றனர்.

## கூட்டு ஒப்பந்தம் ஒரு கேடா?

பெருந்தோட்டக் கம்பனிகளுடன் தொழிலாளர்கள் சில சார்பில் தொழிற் சங்கங்களினால் செய்து கொள்ளப் பட்ட கூட்டு ஒப்பந்தங்கள் தொழிலாளார் களுக்கு பாதகமாகவே அமைந்துள்ளன. அந்த கூட்டு ஒப்பந்த முறையை இல்லாமல் செய்வதற்காகவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பட்டியலில் போட்டியிடுவதாக இலங்கை ஜனநாயக தொழிலாளர் முன்னணி தலைவர் சென்னன் கூறியுள்ளார்.

கூட்டு ஒப்பந்த முறையை இரத்து செய்யக் கோரி வெகுஜனப் போராட்டங் களை நடத்தப்போவதாக ம.ம.மு செய லாளர் மு.சிவலிங்கம் தெரிவித் துள்ளார்.

## மலையகத்தமிழ் பிரதிநிதித்துவம்

மேற்படி பல கதைகள் பேசி பல கூட்டணிகள் அமைத்து தேர்தலில் போட்டியிடுகிறவர்கள் பாராளு மன்றத்தில் மலையகத்தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் தேவை என்பதற்காகவே போட்டியிடுவதாக கூறுகின்றனர். அந்த அடிப்படையில் அவர்களை தெரிவு செய்யும்படி கேட்கின்றனர்.

மலையகத்தமிழ் மக்களுடைய உரிமைகள் பற்றியும் அவர்களுடைய பிரச்சினைகள் பற்றியும் மேற்படி பேசும் வேட்பாளர்களில் அதிகமானோர் பாராளுமன்றத்தில் மாகாணசபைகளில் உள்ளுராட்சி சபைகளில் அங்கம் வகித்திருக்கின்றனர். அப்போதெல்லாம் அவர்கள் என்ன செய்யதார்கள்? மலையகத்தமிழ் மக்களுடைய பிரச்சனை களை தீர்ப்பதற்கு அவர்கள் மேற் கொண்ட நடவடிக்கைகள் என்ன? அதற்கு தடையாக இருப்பவை எவை? போன்றன பற்றி எதுவித சிந்தனையு மற்ற நிலையிலேயே தேர்தல் காலங் களில் மக்களிடம் பேசி வருகின்றனர்.

மக்களும் அதைப் பற்றி ஆர்வப்படுவ தாகவும் இல்லை. அதனால் தேர்தல் கால வாய்மொழிகளை உதிர்ப்பவர்களே மீண்டும் மலையகத்தமிழ் மக்களை மேய்ப் பவர்களாக பாராளுமன்ற உறுப்பினர் களாக வருமாறு சபிக்கப்பட்டுள்ளனர்.

## என் ஓட்டு யாருக்கு?

*தேர்தல் வந்திரிச்சில்ல அண்ணே வாறாரு, தம்பி வாறாரு, மாமன் வாறாரு, மச்சான் வாறாரு, ஓட்டு கேக்கிராரு. வாறவங்க எல்லாக்கிட்டையும் இப்பத்தான் எங்களத் தெரியுதான்னும் இவ்வளவு நாளா எங்கே இருச்தீங்கன்னும் கேக்கிறேன். வேற என்னா செய்யுறது நாக்கப் புடுங்கிக்கிட்டு சாக மாட்டாங்களான்னு நெனைச்சுத்தான் அப்படி கேட்டுப்பார்க்கிறேன். ஆனா ஒருத்தனுக்காவது ரோசம் வாறமாதிரி தெரியலை. பச்சை சிரிப்பு சிரிக்கிறாங்க, நெளியிறாங்க. நாங்க எப்படியாவது பாராளுமண்றத்தில் இருக்கனும். இல்லாட்டி ஒன்னுமே செய்ய முடியாதுன்னு சொல்லுறாங்க நீ ஓட்டுப் போட்டாலும் போடாட்டியும் நான் வெல்லத்தான் போறேன். கூட ஓட்டுத் தேவை. அதனாலத்தான் ஓங்கக்கிட்டவாறேன்னு கொஞ்சப் பேரு சொல்லுறாங்க.*

*கம்பனிக்காரங்களும் துரைமாரும் எங்கள படுத்துற பாட்டப் பாருங்க. நிறைய வேலை செய்ய சொல்லுறாங்க ,சம்பள உயர்வே இல்லை. முன்னமாதிரி யூனியன் மூலமே எதையும் செய்ய முடியதில்லை.*

*விலைவாசி கூடிப்போச்சு. அதவாங்குறதற்கு பணம் இல்லை. இன்னும் எல்லாருக்கும் கொடுத்திருக்கிற அடையாள அட்டை இல்லை. வீடு இல்ல. காணி இல்ல. நிம்மதியான வாழ்க்கை இல்லை.*

*கைய, கால வலிச்சிச்சின்னா மருந்தெடுக்க இடமும் இல்லை. தோட்டத்திலயும் ஆஸ்பத்திரி இல்லை. டவுனில ஒழுங்கான பெரியாஸ்பத்திரி இல்லை.*

*பொம்பளைங்கள ஏமாத்திக் கூட்டிட்டு போய் குடும்பக் கட்டுப்பாட மட்டும் செஞ்சிடுறானுங்க. பத்தனை சிறிபாத கல்லூரியில் மாணவர்களுடைய உணவு பணத்தை திருடிய திருட்டுப்பயல்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கல. அங்கே ஒரேகுழப்பம். அங்கு எல்லாருக்கும் வாய்ப்பும் இல்லை. படிக்க நெனைக்கிரவங்களுக்கு வசதி இல்ல. அதபத்தி கேட்கப் போனா, சிறிபாத கல்லூரிய இல்லாமலாக்கிடுவோம்னு பயங்காட்டுறானுங்க.*

*தொண்டமான் பயிற்சி நிலையம் ஏன் மூடிக்கெடுக்குன்னு கேட்டா அது மூடிந்தான் கெடக்கும்னு சொல்லுறாங்க.*

*மேல் கொத்மலை திட்டத்தை ஐ.தே.க அரசாங்கம் நிப்பாட்டிடுச்சான்னு கேட்டா பதில் கொல்லுறாங்க இல்ல மழுப்புறானுங்க.*

*பயங்கரவாதின்னு இன்னம் சிறையில் தோட்டப்பொடியன்க சிறையில் இருக்காங்க. அவங்கள விட்டபாடில்ல. பிந்தனுவெவ சிறையில் கொல்லப்பட்டவங்களுக்கு நட்ட ஈடு கொடுக்கல. அந்தப் போராட்டத்தில் கொல்லப்பட்டவங்களுக்குப் நட்ட ஈடு இல்ல.*

*இதெல்லாம் கேட்டா எப்பவும் போல ஓட்ட போடுங்க. பாராளுமன்றத்துக்கு அனுப்புங்கன்னு சொல்லுறாங்க. எல்லாப்பிரச்சனையையும் தீர்க்க பாராளுமன்றம் போகனுமாம்.*

*போட்ட ஓட்டெல்லாம் வாங்கிட்டு போய் எல்லாப்பிரச்சினையும் தீர்த்திட்டாங்க. இனிமே தீர்க்கிறதுக்கு ஒன்னுமில்லாதது போல பேசுறாங்க. கொஞ்ச நாளைக்கு அவங்க பாராளுமன்றத்துக்கு போகாம இருக்கட்டும்.*

*பேசோ பேசுன்னு பேசிப்பிட்டு எல்லா தேர்தலிலும் எவனுக்காவது போட்டேன். இந்த முறை ஒரு முடிவெடுத்த திருக்கிறேன். ஒருத்தனுக்கும் போடமாட்டேன். அதுக்காக ஓட்டுப்போட போகாம வீட்டில் இருக்க மாட்டேன். கட்டாயம் போவேன். ஓட்டுக் கேக்கிற ஒருத்தனுக்கும் போடாம ஓட்ட கென்சலாக்கி பெட்டியில் போடப்போறேன்.*

*ஏப்ரல் ௨ ஆம் திகதி நேரத்தோட ஓட்டுப்போடுகிற இடத்துக்குப் போய் ஓட்டுச்சீட்டை வாங்கி கென்கலாக்கி ஓட்டுப் பெட்டியில் போடப்போறேன்.,*

*ஒருத்தனுக்கும் என் ஓட்டு இல்லை. இந்த முறை தேர்தல்ல பிரயோசனம் இல்ல. தேர்தலுக்கு பிறகு பிரச்சினை எதுக்குமே தீர்வு கிடையாது.*

*ஏன் கடிதத்தை வாசிக்கிறவங்க எல்லாம் என்னமாதிரியே ஓட்ட கென்சலாக்கி போட்டா கோடி புண்ணியம் கிடைக்கும்னு வேண்டிக்கிறேன்.*

நன்றி

- ஒரு தோட்டத் தொழிலாளி -

## அறியார் அறிக

(இராகலைப் பன்னீர்)

*ஏதும் கேட்காமல்*
*இருந்தோர் அறிக*
*எதிர்ப்பதால் நமக்கு*
*துன்பம் கிட்டுமென*
*இருந்தோர் அறிக*
*நியாய மென வறிந்தும்*
*துணிந்தால்*
*பதவி போமென*
*பணிந்தோர் அறிக!*

*எதிரியின்*
*வாள் முனைக் கூரின்*
*பளபளப்புக் கண்டு*
*பயந்தோர்களு மற்றும்*
*எழுதல் மட்டுமே*
*இன்ப மெனக் கொண்டோர்*
*எல்லோரும் அறிக!*

*எதிரே*
*எதிரியும்*
*எதிரியின் படைகள்*
*என்பதறிந்தும்*
*எதிர்க்கத் துணிந்தோம்.*

*எதிரியின் மூர்க்க மறிந்தும்*
*எதிரியின் ஆயுத மறிந்தும்*
*அவன் பால்*
*போர் தொடுத்தல்*
*தக்க தென வாய் மொழிந்தோம்.*

*எல்லாம் வல்ல*
*எங்கள் ரூஸ்யா*
*சாய்ந்து விட்ட தென*
*எக்காளமிட்ட*
*எங்கள் எதிரியின்*
*முகத்தருகே மீண்டும்*
*கை நீட்டி*
*அவன் கோர முகத்தில்*
*குருதி கசிய*
*முஸ்டியால் குத்தி*
*பாடம் சொல்லும்*
*நேபாளத்தின்*
*மலைச் சரிவுகள் போல*
*இந்த மலைகளும்*
*இயல்பாகவே ஜொலிப்பதால்ளு*
*வர்க்க அடிமைகள்*
*வெல்வது.........*
*நிஜமெனக் கொண்டதால்*

*மேய்ப்பர்களுக் கெதிராய்*
*போர் செய்யும்*
*வல்லமை பூண்டு*
*இந்தப் பனியில்.........*
*வெறுங்கால்களில் அழுத்தும்*
*கற்களின் மீது*
*பொழுதுகள் மறந்து*
*நடக்கத் துணிந்தோம்!*

*எல்லாமறிந்த*
*என் நண்பர்களே*
*இதனையும் அறிக*

*எங்கள் தோல்விகள்*
*இன்னும் வரும்*
*என்பதறிந்தும்*
*நாங்கள் துணிந்திருப்பது*
*ஏதுக் கென்றால்*

*புகழ் பூத்த வார்த்தைகளால்*
*புகழ் வீர்கள் என்பதற்கல்ல*
*இந்த முடை நாற்றத்துள்*
*மூழ்கி விட்டுச் சாகும்*
*உங்களைப் போலன்றி*

*உங்கள் பிள்ளையும்*
*எனது பிள்ளையும்*
*இந்த*
*மலட்டு ஜனநாயகத்தின்*
*எல்லாத் துயர்களையும்*
*அனுபவித்தல்*
*ஆகா தென்பதற்குத்தான்!*

www.padippakam.com



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
# புதிய பூமி
Puthiya Poomi
சுற்று 11 மார்ச் 2004 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 67

எஸ்.47, 3ம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி. கொழும்பு 11. இலங்கை. தொ.பே.:2435117, 2335844 பாக்ஸ்:011-2473757
ஈ-மெயில் : puthiyapoomi@hotmail.com

## வன்முறைகள் நிறைந்த தேர்தலும் மக்களின் வரப்பிரசாதமும்

முதலாளித்துவ பாரளுமன்ற ஜனநாயகத்தின் உச்சம் வாக்குச்சீட்டுக்களின் மூலம் மக்கள் ஆட்சியாளர்களை தெரிவு செய்வதுதான் என்று திரும்பத்திரும்பக் கூறப்படுகின்றது. எமது நாட்டின் வரலாற்றில் பாரளுமன்றம் தேர்தல்கள் ஜனாதிபதி தேர்தல்கள் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள், மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் என பல தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. எதிர்வரும் ஏப்ரல் இரண்டாம் திகதி நடைபெறவிருப்பது இன்னொரு பாரளுமன்றத் தேர்தலாகும்.

இந்த தேர்தல்களின் மூலம் மக்கள் ஒருபோதும் அவர்களது ஆட்சியாளர்களை தெரிவு செய்யவில்லை. மக்களை ஆள்வதெற்கென உறுதியாக இருக்கின்ற ஆளும்வர்க்கப் பிரதிநிதிகளுக்கு ஒப்புதல் கொடுக்கும் நிர்ப்பந்தங்களாகவே தேர்தல்கள் அமைகின்றன. மக்களை ஆள்வதற்கான பிரதிநிதிகளை மக்கள் தெரிவு செய்வதில்லை. மாறாக ஆளும்வர்க்கத்தினாலும் ஆளும்வர்க்கம் ஏற்படுத்தியுள்ள சூழலினாலும் உருவாக்கப்பட்டுள்ளவர்களுக்கு ஆள்வதற்கான தகுதியை ஒப்புதல் கொடுப்பதனையே தேர்தல் மூலம் செய்யப்படுகிறது. அதனை கூட எவ்வித நிர்ப்பந்தமும் அச்சுறுத்தலும் பயமும் பீதியுமின்றி செய்வதில்லை

ஆளும்வர்க்கத்தின் பிரசாரங்கள் பெருமளவில் மக்களை மாசுபடுத்துவதுடன் வன்முறைகள் மக்களை பீதிக்கும் அச்சத்திற்கும் உள்ளாக்குகின்றன. தேர்தலில் போட்டியிடுபவர்களின் ஆதிக்கப்போட்டியின் விளைவாகவே வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டாலும் வன்முறைகள் தேர்தலிருந்து பிரிக்கமுடியாதவை களாக்கப்பட்டுவிட்டன. அதனால் மக்கள் முதலாளித்துவ பொய்ப்பிரசாரங்களினால் மட்டுமன்றி வன்முறைகளாலும் கட்டுப்படுத்தப்படுகின்றனர். யார் யார் பொய்ப் பிரசாரங்களையும் வன்முறைகளையும் கூடுதலாகவும் குறைவாகவும் செய்கிறார்கள் என்பதனை அவதானித்து கொண்டிருக்க வேண்டிய வர்களாகவே மக்கள் இருத்தப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இரண்டுவிதமான சூழலில் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. அரசாங்க நிர்வாக முறையை நடைமுறைப்படுத்தக் கூடிய வடக்கு கிழக்கை தவிர்ந்த ஏனைய தென்பகுதி ஒரு சூழலிலும் வடக்கு கிழக்கில் நிலவுகின்ற இன்னொரு சூழலிலும் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. வழமைபோல் தென்பகுதியில் தேர்தல்வன்முறைகள் அதிகரித்த வண்ணமிருக்கின்றன. அவை பொலிஸ் நிலையங்களில் செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் அல்லது நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படுகின்ற வழக்குக ளுடன் முடிவுறுத்தப்படுகின்றன. அவற்றால் மக்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல் பயம் பீதி என்பவற்றுடன் ஏற்படும் பௌதிக மனோரீதியான பாதிப்புகளுக்கு எவ்வித தீர்வும் காணப்படுவதில்லை. அந்தப் பாதிப்புகளுடன் தேர்தலை முகம் கொடுக்க வேண்டியவர்களாக மக்கள் இருக்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் சின்னத்தம்பி சுந்தரம்பிள்ளை என்பவர் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார். அவர் மட்டக்களப்பு மாவட்ட ஐ.தே.கட்சி வேட்பாளராவார் அவர் வீட்டில்வைத்து சுடப்பட்டபோது உயிர்த்தப்பினார். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சூட்டுக்காயத்திற்கு சிகிச்சையளிக்கப்பட்டுவந்த வேளையில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளர். அவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் பல முறை அச்சுறுத்தப்பட்டதாகவும் விடுதலை புலிகள் இயக்க உறுப்பினராலேயே அவர் வீட்டில் வைத்து சுடப்பட்டிருப்பதாகவும் அவர் வீட்டில் வைத்து சுடப்பட்டதை அடுத்து ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார். மன்னாரில் ஈ.பி.டி.பி வாகனமொன்று தீக்கிரையாக்கப்பட்டது. மட்டக்களப்பில் சில ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் கடத்தப் பட்டுள்ளனர். வாழைச்சோனையில் பொன்னையா யோகேந்திரன் என்ற ஈ.பி.டி.பி உறுப்பினர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இவை தேர்தல் பிரசாரகாலத்தில் வடக்கு கிழக்கில் நடைபெற்ற சில சம்பவங்காளாகும்.

இந்த சம்பவங்களை அடுத்து ஐக்கிய அமெரிக்க அரசு பயங்கரவாதம் பயங்கரவாத நடவடிக்கைகள் அரசியல்படுகொலைகள் என்பவற்றை கைவிட்டு பொறுப்புடன் நடந்த கொள்ளும்படி புலிகள் இயக்கத்தை வலியுறுத்தியுள்ளது.

இந்த சம்பவங்கள் அறிக்கை செய்யப்பட்டதுடன் தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தலைமைக்கும் கிழக்கு மாகாண தலைவர் கருணாவுக்கும் பிளவு ஏற்பட் டுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன. கருணாவின் தலைமையை மாற்றுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளை அடுத்தே இப்பிளவு வெளிச்சத்திற்கு வந்துள்ளதாக கூறப்படுகிறது. கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற தேர்தல் வன்முறைகள் அல்லது கொலைகளுக்கு பிறகே புலிகள் இயக்கப் பிளவு பற்றிய செய்தி வெளிவந்தன. அக்கொலைகள் கருணாவின் கட்டுப்பாட்டை மீறியே நடைபெற்றதாக கருணாகூறியிருந்தாக செய்திகள் வெளிவந்துள்ளன. விடுதலை புலிகள் இயக்கத்தில் ஏற்பட்டுள்ளதாக்க கூறப்படுகின்ற பிளவிற்குப் தேர்தல் வன்முறைகளுக்கும் நேரடியான காரண காரிய தொடர்புகள் இருக்கின்றதா இல்லையா என்பதை விட வடக்கு கிழக்கில் தேர்தல் சுமுகமாக நடத்தப்பட புலிகள் இயக்கம் நடை முறைரீதியாக பொறுப்புடையதாக்கப்பட்டுள்ளது.

தமிழ்தேசியக் கூட்டமைப்பிற்கு புலிகள் இயக்கம் நேரடியாக ஆதரவு கொடுக்கத் தீர்மானித்ததை அடுத்து புதிய நிலைமைகள் தோன்றியுள்ளதை அவதானிக்க முடிகிறது. அதாவது தமிழ்தேசியக் கூட்டமைப்பை விட தேர்தலில் போட்டியிடும் ஏனைய அமைப்புகளின் பிரசார கருத்துபரிமாற்றல் சுதந்திரத்தை ஏற்று அங்கிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதாவது யுத்த சூழ்நிலையில் இருந்ததைவிட ஜனாநாயகத்தின் பன்முகப்பட்டத் தன்மையை நோக்கி பயணிக்க வேண்டியிருக்கிறது.

இதனால்தான் வடக்கு கிழக்கில் ஏற்படுகின்ற தேர்தலுடன் சம்பந்தப்பட்ட வன்முறைகள் பற்றி அதிகம் கரிசனை காட்டப்படுகிறது. அவ்வன்முறைகள் தமிழ்மக்களின் சார்பிலான விடுதலைப் போராட்டத்தின் ஜனநாயக மறுப்பாகவும். மனித உரிமைகள் மறுப்பாகவும் பிரகடனப்படுத்தப்படுகிறது. அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடைபெறுகின்ற வன்முறைகள் பற்றி பொலிஸ் தேர்தல் கண்காணிப்புக் குழு என்பன வெளிப்படுத்துகின்ற அபிப்பிராயங்களுக்கும் வடக்கு கிழக்கில் நடைபெறும் வன்முறைகள் பற்றிய அபிப்பிராயங்களுக்கும் வித்தியாசமாக இருப்பதை அவதானிக்க முடிகிறது. அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதி வன்முறைகள் வெறும் சட்ட ஒழுங்குவிதி மீறல்களாகவும் தனிநபர்களின் அடாவடித்தனங்களாகவும் அதிகாரப் போட்டியின் விளைவாகவும் பார்க்கப்படுகின்றது.

வடக்கு கிழக்குல் இடம்பெறுவரும் வன்முறைகள் வன்முறை கலாசாரத்தின் தொடர்ச்சி எனவும் தமிழ் மக்களின் சார்பிலான போராட்டத்தின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளின் தொடர்ச்சி எனவும் மனித உரிமை மீறல்கள் காட்டப்படுகின்றன. இவை இவ்வாறு காட்டப்படுகின்றனவே என்பதற்காகவன்றி உண்மையாக நடை முறையில் வடக்கு கிழக்கில் பன் முக ஜனநாயக மயப்படுத்தலின் அவசியம் உணரப்பட வேண்டும். ஜனநாயகப் பண்பாடு கட்டிவளர்க்கப்பட வேண்டும்.

தற்போது திணிக்கப்பட்டுள்ள பொதுத் தேர்தல் வடக்கு கிழக்கில் எவ்வாறு நடந்தேறப் போகிறது என்பதற்கு அப்பால் ஜனநாயகம், மனித உரிமைகள் பற்றி சிந்திக்கப்பட வேண்டும் கருத்தை கருத்தால் வெல்லமுடியாதபோதும் கருத்தை நிலைநாட்ட முடியாதபோதும் வன்முறைகள் தலைதூக்குகின்றன.

ஜனநாயகத்தின் அடிப்படையான கருத்துப்போராட்டம் மறுக்கப்படுகின்றபோது மக்கள் ஜனநாயகத்தின் வரப்பிரசாதமாக வன்முறைகளின் விளைவுகளையே சுமக்க வேண்டியவர்களாக இருப்பர்.

முதலாளித்துவ பாராளுமன்றத்தின் செயலின்மைஎப்போது நிரூபிக்கப்பட்டு விட்டது. முதாலாளித்துவத்தை இம்மண்ணிலிருந்து அகற்றுவதற்கு இன்னும் நீண்ட காலம் எடுக்கும் என்பது அதற்காக நீண்ட பல போராட்டங்கள் அவசியம் என்பதும் உணரப்படல் வேண்டும்.

- ஆசிரியர் குழு -

# தேசியமும் உலகமயமாதலும் பொய்களும் உண்மைகளும்

**வெகுஜனன்**

தேசியம் என்பது வரலாற்று வழியாகத் தோற்றம் பெற்றபோது அதற்கு தேவையும் அர்த்தமும் இருந்தது. இன்றும் கூட அதனை எடுத்த எடுப்பிலேயே அர்த்தமற்ற தொன்று எனக் கண்மூடித்தனமாகப் புறந்தள்ளி விட முடியாது. ஏனெனில் தேசியம் அதன் அடியாக வந்த தேசியவாதம் என்பனவற்றின் தோற்றம் வளர்ச்சி அதன் வர்க்க அடிப்படைகள் போன்ற பல பக்கங்களையும் தெளிவாகக் கண்டு கொள்வது அவசியம்.

தேசியவாதம் வளர்ந்து செல்லக் கூடிய அடிப்படைகளைக் கொண்டுள்ளது என்றும் அதன் எல்லைகள் வியாபித்து நிற்கின்றன எனவும் வாதிடப்படும் போதே விவாதம் உருவாகின்றது. தேசியத்தை வர்க்க சாதிய பெண்கள் ஒடுக்குமுறைகளுக்கும் அவற்றின் ஊடானசமூக ஏற்றத்தாழ்வுகள் அநீதிகளுக்கும் அப்பால் வைத்து முழு மக்களையும் ஒன்றுபடுத்தக் கூடிய ஒன்று எனக் கொள்ளப்படும் போதே அதனுடன் மாக்சிசவாதிகள் முரண்படு கின்றனர்.

ஆனால் தேசியம் குறிப்பிட்ட எல்லைக் குட்பட்டு ஒடுக்கு முறைகளுக்கு எதிரானதொன்றாக இருக்கும் சூழலிலும் முற்போக்கான சமூகப் பார்வையைக் கொண்டிருக்கும் போது அதனுடன் முரண்பட வேண்டிய தேவை மாக்சியவாதிகளுக்கு ஏற்படுவதில்லை

கொலனித்துவப் பிடியை எதிர்த்தும் ஏகாதிபத்தியத்தைத் தாக்கியும் சுதந்திரம் ஜனநாயகம் மனித உரிமை மற்றும் மக்கள் சார்பான கோரிக்கைகளை வற்புறுத்தியும் தேசியவாதிகள் முன்னெடுத்து ஒவ்வொரு போராட்டத் தையும் மாக்சியவாதிகள் ஆதரித்தும் பங்கெடுத்தும் வந்துள்ளனர். உலகின் ஒவ்வொரு நாடுகளினதும் வரலாற்றுச் சூழலுக்கு ஏற்ப தேசியவாதிகளுடன் முடிந்தளவுக்கான ஐக்கியத்தைக் கொண்டிருக்கவும் செய்தனர் ஆனால் தேசியவாதம் பிற்போக்கான நிலைப் பாடுகளை எடுக்கும் சந்தர்ப்பங்களில் வெறுமனே தேசியத்தின் பெயரால் சமரசம் காணாது அதனை நிராகரித்து அல்லது எதிர்த்து நிற்கவும் மாக்சிய வாதிகள் தவறவில்லை. இதற்கு இந்திய தேசிய சுதந்திரத்திற்கான போராட்டம் தேசியவாத நிலைநின்று முன்னெடுக் கப்பட்ட போது மாக்சிச லெனினிச வாதிகள் எடுத்த நிலைப்பாடுகள் பல வகை அனுபவங்களைத் தந்தது. அவ்வாறு சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சி சீன தேசியவாதிகளுடன் கொண்ட உறுதியும் போராட்டங்களும் வேறொரு வகை அனுபவமாகியது. அவ்வாறே தென்னாபிரிக்கா உள்ளிட்ட ஆபிரிக்க நாடுகளினதும் லத்தீன் அமெரிக்க அனுபவங்களும் பல்வேறு வகைப்பட்ட அனுபவங்களையும் படிப்பினைகளையும் மாக்சிசவாதிகளுக்கு வழங்கியது.

இலங்கையில் கொலனித்துவ ஏகாதி பத்திய எதிர்ப்புப் போராட்டங்கள் தேசிய வாத சக்திகளால் முன்னெடுக்கப்பட வில்லை. தேசியம் பேசிய தலைமைத்துவ சக்திகள் நிலவுடமை வழிவந்த மேட்டுக் குடியினராக இருந்த காரணத்தால் அவர்கள் கொலனித்துவ எசமானர் களைக் கோபப்படுத்தாத அடிபணிந்து செல்லும் சமரசப் போக்கையே கைப்பிடித்தனர். அதற்குப் பதிலாக கொலனித்துவ ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்று போராடுவதையே மாக்சிய வாதிகள் வற்புறுத்தி நின்றனர்.

இலங்கைத் தேசியம் பற்றிபேசிய மேட்டுக்குடித்தலைமைகள் ஆட்சி அதிகாரத்தைக்கை மாற்றிப் பெற்றுக் கொண்ட பின் எண்ணிக்கையில் பெரும் பான்மையினரான சிங்கள மக்களின் அபிலாஷைகளை மட்டும் தாங்கள் பிரதிநிதித்துவம் செய்வதாகக் காட்டிக் கொண்டனர். உண்மையில் பௌத்த சிங்கள தேசியம் என்பது வர்க்க நலன்களைப் பாதுகாத்து ஏகாதிபத்தியத் தை அரவணைக்கும் போக்காகவே வளர்ந்து கொண்டது. அதுவே ஏனைய தேசிய இனங்களை ஒடுக்கி நிற்கும் பேரினவாதமாகிக் கொண்டது. முழுநாட்டிற்குமான தொன்றாகப் பேசப்பட்ட தேசியம் விரைவாகவே பௌத்த சிங்களப் பேரினவாதமாக மாற்றமடைந்தது. இது இலங்கையில் மட்டும் இடம் பெற்ற தற்செயல் வளர்ச்சி அல்ல. பல்லின சமூகங்களைக் கொண்ட மூன்றாம் உலக நாடுகளில் கொலனித்துவத்திற்குப் பின்னான காலகட்டத்தின் தேசியவாதத்தின் தவிர்க்க வியலாத ஒரு வளர்ச்சியாகவும் அமைந்தது.

பௌத்தசிங்கள பேரினவாதத்தை எதிர்த்து எழுந்த தமிழ்த் தேசியவாதம் கூட முற்போக்கான கூறுகளுடன் எழுந்து வளரவில்லை என்பது தான் காணக்கிடைக்கும் உண்மையாகும். அதற்குக் காரணம் தமிழ்த் தேசியவாதத் தலைமை என்பது தமிழ் நிலவுடமை மேட்டுக்குடி சார்ந்த உயர்சாதிய உயர்வர்க்கத்தினரைப் பிரதிநிதித்துவம் செய்யும் தலைமையாகவே இருந்து வந்ததாகும். அதனால் அத்தலைமை யிடம் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலவுடமை எதிர்ப்பு, தொழிலாளர்கள் -விவசாயிகள் சார்பு சாதிய எதிர்ப்பு என்பன இல்லாதிருந்தன. தமிழ்த் தேசியத்தை பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிரான பரந்த தளத்தில் மேற் கூறிய சக்திகளின் ஐக்கியத்துடன் கட்டமைக்க முடியாத நிலையிலேயே இருந்து வந்தன. ஆனால் தமிழ்த் தேசியத்தை பழமைவாத இனமொழி உணர்ச்சிகளுக்கு ஊடாகப் பேசி நின்றதன் மூலம் முதலாளித்துவ பாராளுமன்றத்திற்குச் செல்லும் ஒரு வலுவான பாதையாகவும் மாற்றிக் கொள்ள முடிந்தது.

தமிழ்த் தேசியவாதம் ஆயுதப் போரட்டத்தின் ஊடாகப் பயணித்து வந்த போதிலும் கூட ஏகாதிபத்திய எதிர்ப்பையும் நிலவுடமைப் பழமைவாதப் போக்கையும் எதிர்த்த நிலைப்பாடு களைத் தனது நிகழ்ச்சித் திட்டத்தில் முன்வைக்கவில்லை. இது வெறுமனே தந்திரோபாயப் பிரச்சினை மட்டுமேன்று மூலோபாயத்துடன் இணைந்த தொன்றுமாகும்.

இன்று சுயநிர்ணய உரிமைக்கான போராட்டங்கள் உலகின் பல்வேறு நாடுகளில் இடம் பெறுகின்றன. அங்கெல்லாம் இன மொழி மத பிரதேச தேசியங்களுடனேயே பெரும்பாலும் போராட்டங்கள் முன்னெடுக்கப் படுகின்றன. அவற்றில் வெறும் இனஎழுச்சியும் இன மொழி மேன்மை பற்றிய பழமைவாதக் கருத்துக்களே மீண்டும் மீண்டும் மீட்கப்படுகின்றன. இதனால் ஏனைய இனங்கள் மொழிகள் மதங்கள் மீதான காழ்ப்புணர்ச்சிகளும் வக்கிரங்களும் குரோதங்களும் வளர்க்கப்படுகின்றன. இத்தகைய உணர்ச்சி மிகு தேசியவாதத் தால் ஏனைய சமூக யதார்த்தங்களும் அவற்றின் வர்க்க அடிப்படைக் காரணங்களும் மறைக்கப் படுகின்றன.

இத்தகைய பின்னணியிலேயே இன்றைய உலகமயமாதல் சூழலில் தேசியவாதத்தின் நிலை பற்றிநோக்க வேண்டியுள்ளது. உலகமயமாதல் என்பது ஏகாதிபத்தியத்தின் மிகப் பிந்திய ஒரு உலகம் தழுவிய நிகழ்ச்சித் திட்டமாகும். அதன் கவர்ச்சிகரமான தோற்றப்பாடு மிக விரைவிலேயே உடைந்து வீழ்ந்து வருகின்றன. ஏகாதிபத்திய சுரண்டலும் உலக மேலாதிக்க அடக்கு முறையுமே அதன் நோக்கம் என்பது வொளிப்படையாகி நிற்கிறது. அதனால் தேசிய நலன்கள் என்று கூறப்படும் சகலவற்றையும் உலகமயமாதல் எதிர்த்து நிராகரிக் கின்றது. அதன் அடிப்படையில் தேசியவாதம் முன்னிறுத்தும் சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களையும் உலக மயமாதலானது எதிர்த்து வலுவிழக்கச் செய்து வருகின்ற நிலையில் சுயநிர்ணய உரிமைக்கான எந்தவொரு போராட்டமும் உலகமயமாதலுடன் இணங்கிப் போக முடியாத ஒன்றாகும். இது அடிப்படையில் ஒரு தேசிய விடுதலைப் போராட்டமானது ஏகாதிபத்தியம் பற்றி கொண்டிருக்கும் நோக்கையும் போக்கையும் வெளிப் படுத்த வேண்டிய அவசியத்தை வற்புறுத்துகின்றது.

ஒரு உண்மையான தேசிய விடுதலை இயக்கம் தனது சுயநிர்ணய உரிமைக் கான போராட்டத்தை வலுவுள்ளதாக முன்னெடுப்பதற்கு மக்களின் பரந்து பட்ட ஐக்கியத்திலும் போராட்ட உறுதியிலும் ஜனநாயக மனித உரிமைகளுக்கு உத்தரவாதமளிப்பதிலும் ஏனைய தேசிய இனங்களின் ஆதரவைப் பெறுவதிலும் தங்கியிருத்தல் வேண்டும் என்பது முன் நிபந்தனை யாகிறது. அவ்வாறே நிலவுடமை வழிவந்த பழமைவாதக் கருத்தியல்களும் நடைமுறைகளும் சாதியப் பார்வைகளும் நிராகரிக்கப்படல் வேண்டும். இவற்றுடன் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது உறுதியானதாக உள்ளடக்கப்படல் வேண்டும். இவற்றை உள்ளடக்காத தேசியம் அல்லது தேசியவாதம் எவ்வகையிலும் அது சார்ந்த ஏகப் பெரும்பான்மையான மக்களின் அபிலாஷகளைக் கொண்டதாக விளங்க முடியாது.

இன்று மூன்றாம் உலக நாடுகளின் தேசியங்களாயினும் போராடும் நிலையில் உள்ள இன மொழி மத பிரதேச தேசியங்களாயினும் உலகமயமாதல் என்ற ஏகாதிபத்திய நச்சு நிகழ்ச்சி நிரலுடன் சமரசம் காண முற்படுவதால் அல்லது அரவணைப்பதால் நாசங்களுக் கும் அழிவுகளுக்குமே உள்ளாக நேரிடும் இதனை உரிய தலைமைத் துவங்களும் மக்களும் தூரநோக்கில் புரிந்து அதற்குரிய செயறதிட்டங்களுடன் செயல்படுவது இன்றைய தேவையாகும்.

படிப்பகம்

www.padippakam.com



# பாராளுமன்ற அமைப்பும் பொதுத் தேர்தல்களும்

இலங்கையின் முதலாவது பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 1947ம் ஆண்டு நடைபெற்றது. அன்றைய வெள்ளை ஏகாதிபத்தியத்தின் குள்ள நரிப்பிரதிநிதியான சோல்பரி பிரபுவின் தலைமையிலான குழுவினர் தயாரித்த அரசியலமைப்பின் கீழேயே அப்பொதுத் தேர்தல் இடம் பெற்றது. அன்றிலிருந்து எதிர் வரும் ஏப்பிரல் 2ம் திகதி 2004ல் நடைபெற இருக்கும் தேர்தலானது பதின்மூன்றாவது பொதுத்தேர்தலாகும். கடந்த ஐம்பத்தியேழு வருடங்களில் பாராளுமன்ற ஜனநாயகம் என்ற பெயரில் நடாத்தப்பட்ட பன்னிரண்டு பொதுத் தேர்தல்களின் மூலமாக இந்நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் எத்தகைய பலாபலன்கள் கிடைத்தன என்பதே இவ்வேளை எழுப்ப வேண்டிய கேள்வியாகிறது.

அன்று சுதந்திரம் என்ற பெயரில் வெள்ளை ஏகாதிபத்தியவாதிகள் தமது நம்பிக்கைக்குரிய நிலவுடமை முதலாளித்துவ மேட்டுக்குடி வர்க்கப் பிரதிநிதிகளிடம் அதிகாரத்தைக் கையளித்துச் சென்றனர். பணிவு மிக்க அடிமை விசுவாசத்துடன் ஆட்சி அதிகாரத்தைக் கையேற்ற இவர்கள் ஜனநாயகம், சுதந்திரம் என்ற பெயரில் முதலாளித்துவ பாராளுமன்ற ஆட்சி முறையினைப் பேணிப் பாதுகாத்து தங்களது உயர் வர்க்க நலன்களையும் அந்நிய ஏகாதிபத்தியவாதிகளின் தேவை களையும் பூர்த்திசெய்து வந்துள்ளனர்.

கடந்த பன்னிரண்டு பொதுத் தேர்தல்களின் மூலமாக ஆட்சிக்கு வந்தவர்களின் வரலாற்றைத் திருப்பிப் பார்க்கும் போது ஆளும் வர்க்க சக்திகள் இரு அணிகளாக நின்றே ஆட்சியதிகாரத்தை முன்னெடுத்து வந்துள்ளன. இவர்களின் தலைமை சக்தியாக இருந்து வந்தவர்கள் சிங்கள மக்களிடையே இருந்த நிலவுடமை வர்க்க வளவுச் சொந்தக்காரரான உயர் கொய்கம-வெள்ளாள சாதிக் குடும்ப வழி வந்தவர்களேயாவர். இலங்கையின் முதலாவது பிரதமராக பதவியேற்ற டி.எஸ். சேனநாயக்கா அத்தகைய குடும்பப் பின்னணியில் இருந்து வந்தவராவார். நிலவுடமை உயர் சாதிய ஆதிக்கக் குடும்பத்தின் வாரிசுகளாக அவருக்குப் பின் டட்லி சேனநாயக்கா, சேர் ஜோன் கொத்தலாவல போன்றவர்கள் பிரதமரானார்கள்.

அவ்வாறே நிலவுடமைக் குடும்பத்திலிருந்து வந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவும் அவருக்குப்பின் அவரது மனைவியான சிறிமாவோ பண்டாரநாயக்காவும் அதன் பின் இருவரினதும் மகளான சந்திரிக்காவும் பிரதமராகவும் தற்போதைய ஜனாதிபதியாகவும் இருந்து வந்துள்ளனர்.

சேனநாயக்காவின் குடும்பத்தின் ஆட்சி அதிகார தலைமை ஆதிக்கத்தை ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஐக்கிய தேசியக் கட்சிக்குள் கைமாற்றி எடுத்துக் கொண்டார். அவரும் நிலவுடமை முதலாளித்துவ குடும்பப் பின்னணி கொண்டவரே. ஆனால் சாதாரண மக்களின் அன்பையும் ஆதரவையும் தனது "மக்கள் சேவை" என்பதன் ஊடாகப் பெற்று கீழ் நிலை அரசியலில் இருந்து உயர் நிலையான ஜனாதிபதி வரை வந்தவர் ஆர். பிரேமதாசா ஆவார். அவரது பக்கத்துணையுடன் ஆட்சி அதிகாரத்தை இறுக்கி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை கொண்ட அரசியலமைப்பை உருவாக்கி சர்வாதிகாரப் போக்கிற்கு தலைமை தாங்கியவர் ஜே.ஆர். அவரது குடும்பத்தின் மருமகன் ரணில் விக்கிரமசிங்கா தலைமைத்துவ ஆளுமை குறைந்த நிலையிலும் கூட ஐக்கியத் தேசியக் கட்சியின் தலைமைத்துவத்திலிருந்து பிரதமராகிக் கொண்டார்.

இடைக் காலத்தில் ஆர். பிரேமதாசா ஒருவர் தான் இலங்கையின் பாராளுமன்ற அரசியலில் விதிவிலக்காக சாதிய சமூக அடிநிலையில் இருந்து வந்த ஒருவராகக் காணப்பட்டார். அவரது சேவையானது ஐக்கியத் தேசியக் கட்சியின் ஊடான ஆளும் உயர்

**அரசியல் மாணவன்**

வர்க்கத்தினருக்கே சென்றடைந்து கொண்டது. அவ்வாறு இருந்தும் கூட பிரேமதாசாவின் பதவியினையும் ஆளுமையையும் சிங்கள மேட்டுக்குடி ஆளும் வர்க்கம் மனம் விரும்பி ஏற்றுக் கொள்ளவில்லை. அவரது அகால மறைவை மிகுந்த மனநிறைவுடன் மௌனமாக ஏற்றுக்கொண்டது.

ஆர். பிரேமதாசாவை இலங்கையின் பாராளுமன்ற அரசியல் அரங்கில் கழித்து விட்டுப் பார்த்தால் இரண்டு மேட்டுக்குடி ராஜ பரம்பரை வழிவந்தவர்கள் தான் தலைமைப் பாத்திரத்தை வகித்து வந்த வரலாற்றைக் காண இயலும். இத்தகைய தலைமைத்துவத்தின் கீழ் ஆளும் வர்க்கமாக இருந்து வந்தவர்கள் தொடர்ச்சியாக வர்க்க அடிப்படையில் சுரண்டல் சமூக அமைப்பைப் பாதுகாப்பதிலும் இன ரீதியில் பேரினவாதத்தை வளர்த்தெடுத்து தமது ஆட்சி அதிகாரத்திற்கான அரணாக அதனை அமைத்துக் கொள்வதிலும் முன்னின்று வந்துள்ளனர்.

இலங்கையின் 57 வருடகால முதலாளித்துவ பாராளுமன்ற அரசியல் அரங்கினை உற்று நோக்கின் சிங்களவர்கள், தமிழர்கள் மட்டுமன்றி மலையகத் தமிழர்கள் மத்தியிலும் சொத்து சுகபோக உயர் சாதிய நிலைப்பாடு கொண்ட நிலவுடமை வழி வந்த குடும்பத்தவர்களே தலைமை தாங்கும் ஆளும் வர்க்க சக்திகளாக இருந்து வந்துள்ளமை காணக் கூடியதாகும். இவர்களது ஆட்சி அதிகாரத்துடன் அந்நிய ஏகாதிபத்திய சக்திகள் இணங்கியும் ஆதரித்தும் ஊட்டமளித்தும் வந்துள்ளன.

1947ன் சோல்பரி அரசியலமைப்பையும் அதன் பின்னான 1972ம் ஆண்டு குடியரசு அரசியல் யாப்பும் 1978ல் ஜே.ஆர். கொண்டு வந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசியலமைப்பும் அடிப்படையில் முதலாளித்துவப் பாராளுமன்ற அமைப்பு முறையினைப் பாதுகாத்துக் கொள்வதற்கேயாகும். அதன் மூலம் சுரண்டலும் ஒடுக்குமுறைகளும் கொண்ட இன்றைய சமூக அமைப்பினைத் தொடர்ந்தும் பேணிப் பாதுகாக்கும் பணிகளே முன்னெடுக்கப் படுகின்றன.

மக்கள் ஏற்றத்தாழ்வானதும் கொடூரங்கள் நிறைந்ததுமான இன்றைய சமூக அமைப்பிற்குரிய அடிப்படைக் காரணங்களை அறிந்து கொள்ளாதவாறே பாராளுமன்ற ஜனநாயகத்தின் கீழான பொதுத் தேர்தல்கள் நடாத்தப்பட்டும் வந்துள்ளன. சுரண்டல், ஒடுக்கு முறைகள், சமூக அநீதிகள் என்பனவற்றை மறைக்கும் வலுவான திரையாகவே பாராளுமன்ற ஜனநாயகம் ஆளும் வர்க்க சக்திகளால் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. அதன் ஒரு வகைத் தோற்றமாகவே ஜனநாயக ரீதியான பொதுத் தேர்தல்களும் ஏனைய தேர்தல்களும் பெயரளவில் முன்னெடுக்கப்படுகின்றன.

இத்தகைய பாராளுமன்றப் பொதுத் தேர்தல்களால் இந் நாட்டின் ஏகப் பெரும் பான்மையான உழைக்கும் மக்களுக்கு விடுதலையோ விமோசனமோ ஏற்பட்டதாக வரலாற்றின் எந்தவிடத்திலும் காண முடியாது. இத்தேர்தல்களில் மக்கள் புள்ளடியிட வைக்கப்படுவதன் மூலம் அரசியலில் அவர்கள் பங்கு கொள்கிறார்கள் என்றும் ஆட்சியைத் தீர்மானிப்பவர்கள் மக்களே என்றும் கூறப்படுகிறது. ஆனால் உண்மை நிலை என்ன? இத்தேர்தல்களில் பயன்படுத்தப்படும் பணம், சாதி, உயர் அந்தஸ்து, ஊழல், மோசடி, வன்முறை போன்றவற்றின் மூலமே பாராளுமன்ற, ஏனைய சபைகளின் பிரதிநிதிகள் தெரிவு செய்யப் படுகிறார்கள் என்பதை நேரடியாகவே காண முடியும்.

எனவே பாராளுமன்ற ஆட்சிமுறையும் அதன் கீழான பொதுத் தேர்தல்களும் இந்நாட்டின் ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்களினதோ தேசிய இனங்களினதோ அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கானவை அல்ல. அவை யாவும் சொத்து, சுகம் படைத்த ஒரு சிறு பிரிவினரின் நலன்களையும் தேவைகளையும் பேணிப் பாதுகாப்பதற்கானவைகளேயாகும்.

இதனை கடந்த 57 வருட பாராளுமன்ற ஆட்சி முறையும் அதன் கீழான பொதுத் தேர்தல்களும் நமக்கு மிகத் தெளிவாக எடுத்துக் காட்டி நிற்கின்றன. இப்பொழுது எதிர் கொள்ளப்படும் 13வது பாராளுமன்றப் பொதுத் தேர்தலும் எவ்வகையில் தானும் மக்களுக்குரியதொன்றாக இருக்கப் போவதில்லை என்பதே உண்மையானதாகும்.

# கல்வியும் சமூகமும்

## ஒரு வரலாற்றுப்புல நோக்கு

கொலனிய நிருவாகம் தனது அதிகாரத்துக்கு உட்பட்ட நாட்டில் கல்வியைப் பரப்புவதற்குப் பரோபகார உணர்வு காரணமல்ல. யாருக்கு, எந்தளவு கல்வி, எப்போது என்பன கவனமாகக் கணிப்பில் எடுக்கப்பட்டே கல்வி பரவலாக்கப்பட்டது. கல்வியின் பரவலாக்கத்தில் கிறிஸ்துவ சமயப்பரப்பாளர்களைப் பயன்படுத்தியதன் மூலம், எவருக்கும் கல்வி வழங்குவது ஒரு தரும காரியம் என்ற தோற்றத்தைக் கொலனிய நிருவாகத்தால் ஏற்படுத்த முடிந்தது. அஞ்ஞானிகளை விசுவாசிகளாக்குகிற அறப்பணிக்கு எந்தவிதமான ஏமாற்றையும் கையாளலாம் என்பது மதப் பிரசாரகர்களது 'அறம்'. எனவே கல்வி மூலம் ஒருவர் பெறக்கூடிய சமூக மேம்பாட்டுக்குப் பிரதியாக ஒருவர் தனது மதத்தை மாற்றுவது தனது பிள்ளைகட்கு இலவசமாகவோ சலுகைகளுடனோ நவீன கல்வியை வழங்க இவ்வாறு விட்டுக் கொடுக்க ஆயத்தமாக இருப்பதிலும் வியப்பில்லை. அதற்கும் மேலாகச் சாதி உட்பட்ட சமூக வேறுபாடுகள் மனிதரைப் பல்வேறு நன்மைகள் கருதி மதம் மாறத் தூண்டின.

தமிழகத்தில் நாடார் சமூகத்தில் ஒரு கணிசமான பிரிவினர் மதமாற்றத்தின் மூலம் சமூக மேம்பாடு கண்டனர். இதன் விளைவாக முழு நாடார் சமூகமும் காலப் போக்கில் தமது சாதித் தகுதியை உயர்த்திக் கொள்ள இயலுமாயிற்று. மிகவும் இறுக்கமான சமூகத் சாதிக் கட்டுப்பாடு உள்ள சூழல்களில் ஒருவர் தனிப்பட்ட முறையில் மதம் மாறுவதானால் தன் முழு உறவையும் உதறித் தள்ளியே அவ்வாறு செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும். எனவே மதமாற்றங்கள் நேரடியான அல்லது மறைமுகமான முறையில் குடும்ப, உறவு அங்கீகாரத்துடனேயே நடைபெற்றன.

இலங்கையில் கத்தோலிக்க மதத்துக்கு மாறினோரிற் பெரும்பானவர்கள் போர்த்துக்கேயர் காலத்தில் மதம் மாறியவர்களே, கத்தோலிக்கப் பாடசாலைகள் உருவான பின்பு மதமாற்றங்கள் நடைபெற்ற போதும், கொழும்பு, யாழ்ப்பாணப் பகுதிகளில் புரட்டஸ்தாந்து கிறிஸ்துவ சமயத்துக்கு மதம் மாறினோரிற் பெரும்பானவர்கள் ஏற்கெனவே சாதி அடிப்படையிலும் சமூக நிலையிலும் ஓரளவு வருமானத்தை அதிகமாக்குவதும் சமூகத்தில் இவர்களது நிலையை மேலும் உயர்த்த உதவியது.

யாழ்ப்பாணத்தில் அமெரிக்காவிலிருந்து வந்த சமயப்பரப்பாளர்கள் அதிகளவில் பாடசாலைகளை நிறுவினார்கள். இதற்கான காரணம் அவர்கள் கொழும்பில் தமது சமயம் பரப்புதலைச் செய்வதை பிரித்தானிய கொலனி நிருவாகமும் இங்கிலாந்தின் திருச்சபையின் இலங்கைப் பிரதிநிதிகளும் விரும்பாதது தான் என்று கூறப்படுகிறது. இதன் விளைவாக, யாழ்ப்பாணம் சன விகிதாசாரத்தில் அதிகளவிற் கிறிஸ்துவப் பாடசாலைகளைப் பெற்றது. இதன் ஒரு அம்சமாகச் சமூகத்தின் இடைநிலையிலிருந்தவர்கள் பலரும் ஆங்கிலக் கல்வி வாய்ப்பைப் பெறுவது இயலுமாயிற்று.

இக்கல்வியின் பரவலாக்கம் முற்றாக விரிவடைந்திருந்தால் சமூக ஏற்றத்தாழ்வுகளையும் ஓரளவு சமன்படுத்தியிருக்கும். அவ்வாறு நிகழாத விதமாக யாழ்ப்பாணத்தில் ஏற்கெனவே இறுகிப் போன சாதி அமைப்பும் அதன் முக்கிய அம்சங்களும் ஒன்றான தீண்டாமையும் கவனித்துக் கொண்டன. தீண்டாமைக் கொள்கை, சைவக் கோவில்கள் போல கோவிலுக்குள் வர அனுமதி மறுக்குமளவுக்கு மோசமாக இல்லாவிடினும், கிறிஸ்துவ ஆலயங்களுள் ஒன்றாகவும் சமமாகவும் சேர்ந்து வழிபட இயலாத தேவாலயங்களிலும் இப்போக்குக் குறைவாகவேனும் கடைப்பிடிக்கப்பட்டே வந்தது.

ஆங்கிலப் பாடசாலைகளில் சாதியாற் தாழ்த்தப்பட்ட குழந்தைகள் சேருவது குறைவாக இருந்ததற்குப் பொருளாதாரக் காரணங்களை

> **கொலனியக் கல்வியானது மதம் சார்ந்தும் இலங்கையின் ஏற்றத்தாழ்வானதும், சாதியம் சார்ந்ததுமான சமூகக் கட்டமைப்பை உள்வாங்கியே வழங்கப்பட்டது.**

விட சாதிய ஒடுக்குமுறையும் உயர் சாதியினருக்கும் கொலனிய நிருவாகத்துக்கும் பாடசாலை நிருவாகங்கட்கும் இடையே இருந்த புரிந்துணர்வும் முக்கியமாக பங்களித்தன. பிற் காலங்களில் ஒடுக்கப்பட்ட மக்கள் போராடியதனாலும் முற்போக்கான சிந்தனையாளர்களது ஆதரவாலும் தாழ்த்தப்பட்ட சமூகத்துக் குழந்தைகள் பாடசாலைகளில் சேர்க்கப்பட்டாலும், வகுப்பறைகளில் அவர்கள் உயர் சாதியினருக்குச் சமமாக அமர்ந்து படிக்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டு வந்தது. அவர்கள் உயர்நிலைப் பாடசாலைகட்குப் போய்ப் படிக்காமல் தடுப்பதற்கான முயற்சிகள், நேரடியான கொலனி ஆட்சியிலிருந்து நாடு விடுபட்ட பின்னும் தொடர்ந்தன.

இலங்கையின் பிற பகுதிகளிலும், சமூக ஏற்றத் தாழ்வுகள் ஆங்கிலக் கல்வியை வசதிபடைத்த பகுதியினருக்கே எளிதாக எட்டக்கூடிய நிலையிலேயே வைத்திருந்தன. எனினும் கல்வி மூலம் மேம்பாடு பெறும் வாய்ப்பை முற்றாகவே மறுக்க இயலாது போனதற்கு நகரங்களிற் சாதியத்தின்படி சிறிது தளர்ந்தது ஒரு முக்கிய காரணமாகும். சிங்கள மக்களைப் பொறுத்தவரை, கரையோரப் பகுதிகளில் வாழந்த வேளாளரல்லாத சாதியினரிடையே வணிகம், கைத்தொழில் என்பன மூலம் பொருளாதார மேம்பாடு எய்தியவர்கள் ஒரு புதிய முதலாளி வர்க்கமாக உருவாகி வலுப்பெற்றதும் ஒரு காரணமாயிற்று.

எவ்வாறாயினும் ஆங்கில மூலம் வழங்கப்பட்ட 'நவீன' கல்வி, குறிப்பிட்ட சில நகரங்கள் சார்ந்தே பெறக்கூடியதாக இருந்தது. பொதுவாகவே கிராமப் புறங்களில் உயர்நிலைக் கல்விக்கான பாடசாலைகள் இருக்கவில்லை எனலாம். ஆங்கிலக் கல்வி வேண்டியவர்கள் கிராமங்களிலிருந்து நகரத்துக்கு வரவேண்டியிருந்தது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் புவியியல் அமைப்பும் குடிப்பரம்பலும் மதப் பிரசாரர்களது அதிகளவிலான கல்வி முயற்சிகளும் கிராமத்திலிருந்த வசதிபடைத்த அல்லது இடைநிலைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கட்குக் கல்வி வாய்ப்பை அளித்தன. கல்வியின் பரவலாக்கத்தில் கிறிஸ்துவ சமயப் பரப்பாளர்கட்குப் போட்டியாக பௌத்த, சைவ மதவாதிகளது செயற்பாடும் ஒரு முக்கியமான பங்களித்தது. கிறிஸ்துவப் பாடசாலைகளுடன் ஒப்பிடத்தக்க கல்வி வசதிகளுடனான பாடசாலைகள் தென்னிலங்கையிலும் வடபிரதேசத்திலும் 19ம் நூற்றாண்டின் பிற்கூற்றிலேயே நிறுவப்படத் தொடங்கின.

கல்வி கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகட்கு அப்பால் நகரங்கள்

**பேராசிரியர் சி. சிவசேகரம் (7)**

சார்ந்து அமைந்ததற்குக் கொலனி நிருவாகத்தின் கல்வி கொள்கையினளவுக்கு இலங்கையின் நிலவுடமைச் சமூகக்கட்டமைப்புக்கும் ஒரு பங்கிருந்தது. இலங்கையை ஒரு அரைக் கொலனி அரை நிலவுடமைச் சமூகமாக வைத்திருப்பது கொலனிய ஆட்சியாளர்கட்கும் அவர்களுடன் சமரசத்துக்கு வந்துவிட்ட நிலவுடைமை புதிய முதலாளிய மேட்டுக்குடிகட்கும் வசதியாகவே இருந்தது.

கிராமங்களின் கல்வித் தேவைகள் பழைய கல்வி முறை சார்ந்து, நவீன பாடசாலைகளது ஒழுங்கு, பாடத்திட்டம், மதிப்பீடுகள் என்பன இல்லாமலே நீண்டகாலத்துக்கு தொடர்ந்தன. நகரங்களின் பொருளாதார வளர்ச்சியும் உழைப்பாளிகளுக்கான தேவையும் கிராமங்களினின்று மக்களை நகரங்களை இழுத்ததற்குக் கிராமியப் பொருளாதாரத்தின் நலிவும் ஒரு காரணமாகும். இவ்வாறான இடப் பெயர்வுகளுக்கு மேலாக வணிகம், போக்குவரத்து என்பனவற்றின் விருத்தியும் கிராமங்களின் கல்வித் தேவைகளைப் படிப்படியாக மாற்றியது. அரசாங்கம் நாடளாவிய முறையில் கல்விப் பொறுப்பை ஏற்க இத்தேவைகளே காரணமாயின.

கொலனி ஆட்சியின் பிற் கூற்றில் கல்வி மேலும் பரவலாக்கப்பட்டது. ஆங்கிலக் கல்வி, வசதிபடைத்தவர்கட்குரியதாக இருந்த அதே வேளை, தாய் மொழிக் கல்வி இலவசமாக வழங்கப்பட்டது. தாய் மொழிக் கல்விக்கான பாடசாலைகள் ஆங்கிலப் பாடசாலைகளை விட தாழ்வானவையாகவே கருதப்பட்டு நடத்தப்பட்டும் வந்தன. கல்வித் தகுதி என ஏற்பட்ட தராதரம் பிரித்தானியக் கல்வி நிறுவனங்களது அளவுகோல்கள் கொண்டு அளக்கப்பட்டது. அக்காலங்களில் இன்றைய எட்டாம் வகுப்புக்குச் சமனான கனிஷ்ட பாடசாலை

தொடர்ச்சி.. 11ம் பக்கம்.

படிப்பகம்

www.padippakam.com



# மதமாற்றத் தடைச்சட்டம்

- ஒருவருக்கு தனது அரசியல் நிலைப்பாட்டை மாற்ற உரிமை உண்டென்றால் ஏன் அவருக்கு தனது ஆன்மீக நிலைப்பாட்டை மாற்றும் உரிமை இல்லாமல் போக வேண்டும்.
- சில கிறிஸ்தவ நிறுவனங்கள் பெருந்தொகைப் பணம் செலவிட்டு மதமாற்றத்தை ஊக்குவிப்பது ஏன் என்பது நியாயமான கேள்வியாகும்.
- அமெரிக்க ஏகாதிபத்திய நிதி ஆதரவு பெற்ற பல கிறிஸ்தவ மத நிறுவனங்கள் அமெரிக்க நலன்களுக்காக சேவை புரிந்து வந்துள்ளமை வரலாறாகும்.

மதம் எதுவுமே மனிதரது மாற்ற முடியாத சமுதாய அடையாளமாக இருக்குமென்றால் இன்று வழக்கில் உள்ள எந்த மதத்துக்குமே உலகில் இடமிருக்க முடியாது. சமணர்களையும் பௌத்தர்களையும் மதம் மாற்றச் சதி செய்ததற்காக அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகியோர் தண்டிக்கப்பட்டிருக்க வேண்டும். அதிலும் இரண்டு தடவைகள் மதம்மாறிய அப்பர் கடுமையான விசாரணைக்குட்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.

மற்ற மனிதர்களைத் தமது மதத்துக்கு மாற்றுவது அம்மதத்தவர்களது கடமை என்று போதிக்கிற மதங்களும் இஸ்லாமும் கிறிஸ்துவமும் அடங்கும். ஆயினும் எல்லா மதமாற்றங்களும் இம் மதநம்பிக்கையால் தூண்டப்பட்டவையல்ல. இவ்விதமான கடமை உணர்வுக்கான தேவையில்லாமலே மதமாற்றங்கள் பெருமளவில் நடந்துள்ளன. சமணமும் பௌத்தமும் பார்ப்பணியச் சடங்குகட்கும் சாதியத்துக்கும் எதிராக எழுச்சி பெற்ற மதங்கள். ஒடுக்கப்பட்ட மக்கள் தாமாக அவற்றில் இணைந்த காலம் ஒன்று இருந்தது. ஆயினும் அவை வேகமாக பரவுவதற்கு அரசர்கள் அந்த மதங்களுக்கு மாறியது தான் முக்கியமாக உதவியது. இது இன்று பெரிய மதங்கள் எனக் கூறப்படும் ஒவ்வொரு மதத்துக்கும் பொருந்தும்.

அரச அதிகாரமும் மதபீடங்களும் எப்போதுமே உடன்பட்டோ அல்லது சமரசத்துக்கு வந்தோ தான் மக்கள் மீது தமது அதிகாரத்தைச் செலுத்தி வந்துள்ளன. நிறுவனமாகச் செயற்படும் எந்த மதமும் அடக்குமுறை அரசுகளைப் பகைத்துச் செயற்பட்டதென்றால் அது குறுகிய காலத்தில் மதபீடத்தினாலும் அரசினதும் நலன்கட்கிடையிலான மோதலின் விளைவானதேயாகும். ஆயினும். இன்னொரு மதம் அரசிற்கு நெருக்கமாகாதாத வரை, மதமும் அரசும் விரைவில் சமரசமாகி விடுகின்றன.

மதங்களுக்கும் மதச் சடங்குகட்கும் வழிபாட்டுக்குமான தேவை உளவியல் சார்ந்ததாக இருக்கலாம். நிச்சயமும் நிம்மதியும் அற்ற வாழ்வில் மனிதருக்கு மதங்கள் மூலம் ஏதோ ஒரு ஆறுதல் கிடைக்கிறது. ஆனால் அது எவ்வகையிலும் அவர்களது வாழ்வின் நிம்மதிக்கோ எதிர்காலம் பற்றிய நிச்சயத்துக்கோ உதவுவதில்லை. எனினும் அவ்வாறான ஒரு தற்காலிக ஆறுதலுக்கான உரிமையை யாரும் மனிதருக்கு மறுக்க இயலாது. அதே வேளை எவ்வாறான ஆறுதலை மனிதர் நாடக் கூடும் என்று எவரும் விதிப்பதும் சரியாகாது. அதிலும் முக்கியமாக இவ்வாறான எந்தத் தப்பியோடும் வழியும் தேவையில்லாத மனிதர்கட்குத் தமது வழியைத் தாமே அறியும் உரிமையும் இருக்க வேண்டும். இந்த அடிப்படையிலேயே எவருக்கும் எந்த ஒரு மதத்தையும் நம்பும் உரிமையும் நம்பாமலிருக்கும் உரிமையும் உண்டு. இவ்வகையில் மாக்ஸிய வாதிகளே மதங்கள்பற்றி மிகவும் சகிப்புத் தன்மையுடன் நடந்து கொள்கின்றனர். மத நம்பிக்கை, வழிபாடு என்பனவற்றுக்கான உரிமையை மதிப்பது அந்த உரிமையின் பேரில் பிற மனிதர்களது உரிமைகட்கு மறுப்பாகச் செயற்படுவதை ஏற்பதாகாது. எனவே மதத்தின் பேரிலான அத்துமீறல்கள் எவ்வகையிலும் ஏற்கக் கூடியனவல்ல. இதன் காரணமாக, மத நிறுவனங்கட்கும் இடதுசாரி இயக்கங்கட்குமிடையே முரண்பாடுகள் இருந்து வந்துள்ளன.

எவ்வாறாயினும் ஒருவர் தனது மதத்தைத் தெரிந்தெடுப்பதற்கு முழுமையான உரிமை உடையவர் என்பதில் மாக்ஸியவாதிகட்கு எந்தவிதமான மறுப்பும் இருக்க நியாயமில்லை. மதமாற்றம் பற்றிய பிரச்சனை எப்போது எழுகிறது என்றால், வற்புறுத்தல், வஞ்சனை, ஏமாற்று ஆகிய முறைகளைக் கையாண்டு மதமாற்றம் நடத்தப்படுமாயின், அது நிச்சயமாகக் கண்டிக்கவும் தேவையான இடத்துத் தண்டிக்கப்படவும் வேண்டும். இதற்கும் ஒருவர் தன் சொந்த விருப்பின் பேரில் ஒரு மதத்தினின்று இன்னொன்றுக்கு மாறுவதைத் தண்டனைக்குரிய தாக்குவதற்கும் மிகுந்த வேறுபாடு உண்டு.

ஒருவருக்குத் தனது அரசியல் நிலைப்பாட்டை மாற்ற உரிமை உண்டென்றால் ஏன் அவருக்குத் தனது ஆன்மீக நிலைப்பாட்டை மாற்ற உரிமை இல்லாமற் போக வேண்டும்? மனிதர் மதம் மாற நியாயமான தனிப்பட்ட காரணங்கள் பலவும் இருக்கலாம். அதிற் குறுக்கிடுவது ஒரு அடிப்படையான மனித உரிமை மீறலாகும். அதே வேளை ஒருவரை ஏய்த்தோ வற்புறுத்தியோ மதம் மாற்றும் முயற்சியைத் தடுப்பதற்கான நியாயங்கள் உள்ளன. நம்முன் உள்ள பிரச்சினை இவ்வாறான செயல்களை எவ்வாறு கையாளுவது என்பது பற்றியதே.

ஒருவர் தனது சாதி காரணமாகத் தனது சமயத்தைச் சார்ந்த பிறர் அனுபவிக்கும் வழிபாட்டு உரிமைகளை அனுபவிக்க முடியாது போனால், அவர் ஏன் தொடர்ந்தும் அச்சமயத்தினுள் இருக்க வேண்டும். கோயிலுக்குள் போகும் உரிமையற்ற ஒருவர் மதம் மாறிப் பள்ளிவாசலுக்கோ பன்சாலைக்கோ மாதாங்கோயிலுக்கோ போகும் உரிமையைப் பெறுவதில் என்ன தவறு இருக்கிறது. அம்பேத்கர் இதைத்தான் இந்தியாவுக்கு செய்து காட்டினார். காந்தியால் இது பற்றிக் கண்டித்துப்பேச முடிந்ததே ஒழிய மாற்று வழியைக் காட்ட முடியவில்லை. மதத்தின் பேரிலான சமூக ஒடுக்கு முறைக்கு எதிர்ப்புக் காட்டும் முறையில் மேற்கொள்ளப்படும் மதமாற்றம் நேர்மையானதும் நியாயமானதுமாகும். 1956ம் அளவில் வட இலங்கையில் தீண்டாமைக்கு எதிராகத் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரில் ஒரு பகுதியினர் புத்த சமயத்துக்கு மாறினர். இதற்காக இடதுசாரிகளைப் பழிசொல்ல முற்பட்ட தமிழரசுக் கட்சியினர் அந்த மக்கள் மதம் மாறக் காரணமான தீண்டாமைக் கொடுமையைக் கண்டித்து செயற்பட முன்வரவில்லை.

இன்று நடைபெறும் மத மாற்றங்களைப் பிரச்சினைக்குரியதாக்குவன அமெரிக்க எவாஞ்சலிஸ்ற் கிறிஸ்துவ நிறுவனங்களது மதமாற்ற நடைமுறைகளே. குறிப்பாக அற்புதங்களை நிகழ்த்திக் காட்டுவதாகக் கூறி நோயாளிகளைக் குணப்படுத்துவது போன்ற கபட நாடகங்களை நடத்தி மனிதரை நம்பவைப்பதும், மக்களது வறுமையைப் பயன்படுத்திப் பணத்தைக் காட்டி மதமாற்றத்திற்கு இணங்க வைப்பதும், பின்பு அவர்களைக் கொண்டு மேலும் மதமாற்ற முயற்சிகளை மேற்கொள்வதும் பல சமூகச் சிக்கல்கட்கு வழி செய்துள்ளன. குடும்பங்களுள்ளும் சமூகங்களுள்ளும் புதிய பூசல்கட்கு இவை காரணமாகியுள்ளன. அது மட்டுமல்லாமல் மதமாற்றத்தை வணிக நோக்கில் பயன்படுத்துகிற புல்லுருவிகளும் உருவாகியுள்ளனர்.

இவ்வளவு பணம் செலவிட்டு இந்தக் கிறிஸ்துவ நிறுவனங்கள் மதமாற்றத்தை ஊக்குவிப்பது ஏன் என்பது நியாயமான கேள்வி. இந்த நிறுவனங்கள் யாவுமே ஏறத்தாழ விலக்கில்லாமல், அமெரிக்க ஏகாதிபத்தியத்தினது நலன்களைப் பேணுவன. அமெரிக்காவிற்கு எதிரான ஆட்சிகளைக் கவிழ்க்கிற பணியில் இந்த மத நிறுவனங்கள் பல நாடுகளிலும் பெரும் பங்கை ஆற்றியுள்ளன. இவ்வாறு இவற்றின் நடவடிக்கைகள் பற்றி நிறையவே கூறலாம். இவற்றுக்கு அமெரிக்க உளவு நிறுவனங்கள் முதல் பெருமுதலாளிய நிறுவனங்கள் வரையிலானவற்றின் நிதி ஆதரவும் உண்டு. எனினும், இவற்றை முறியடிப்பது தான் நமது நாட்டில் மதமாற்றத் தடைச்சட்டத்தின் நோக்கமென நம்புவது கடினம்.

இந்தியாவின் இந்துத்துவ ஃபாஸிஸ பாரதிய ஜனதா ஆட்சியின் ஆலோசனையைத் தமிழகத்தில் பார்ப்பணியத்தின் பிரதிநிதியாகச் செயற்படும் ஜெயலலிதா நடைமுறைப் படுத்தியதை அடுத்தே இங்கு அந்த யோசனை முன்வைக்கப் பட்டுள்ளது. அங்கே இந்து மத வெறிக்குத் தூபமிடும் நோக்கிச் செய்யப்பட்ட ஒரு காரியம். இங்கே பௌத்த சிங்கள வெறிக்கு வசதியாக மேற் கொள்ளப்பட வுள்ளது. அதற்கு ஆதரவாக இந்து சமய அலுவல்கள் அமைச்சரான மகேஸ்வரன் நடத்தி வந்த பிரசாரம் தமிழர் நடுவே மத அடிப்படையில் பிளவை ஊக்குவித்துக் குறுகிய கால அரசியல் லாபம்

தொடர்ச்சி 11ம் பக்கம்..

# ஏகாதிபத்தியமும் பெண்களும்

## பெண்களின் நிபந்தனைகட்கமைய ஏகாதிபத்திய எதிர்ப்பு

சொல்லப்பட்டது. ஏகாதிபத்தியம் பெண்களைச் சுரண்டி ஒடுக்குவது பற்றிய முழுக் கதையுமல்ல. உலகின் செல்வம் மிக்க பகுதிகளிற் போன்று, மூன்றாமுலகிலும் பெண்களை ஒடுக்குவதற்கு எண்ணிறைந்த முறைகள் கையாளப்படுகின்றன. இதிற் குறிப்பாகக் குரூரமான ஒரு வடிவம் ஏதெனின், தென்கிழக்கு ஆசிய நாடுகளிற் சில 'டாப்பர்' அரசுகளாக மாறியுள்ள விதமாகும். பண வருமானத்திற்கு முக்கியமான ஒரு தோற்றுவாய் சுற்றுலாத் துறையாகும். சுற்றுலாப் பயணிகட்கு முக்கியமான கவர்ச்சி அம்சங்களுள் ஒன்று கீழைத் தேயத்தின் இனிய சுபாவமும் மருமமும் கொண்டு ஒளிரும் இளம் விபசாரிகள் அபரிமிதமான அளவிற் கிடைக்கக் கூடியமையாகும். நாட்டின் பெரும்பான்மையோரை மேலும் வறியோராக்கிக் கடன்களுக்கு வட்டியை மீளச் செலுத்துவிப்பதன் மூலம்தான் பெருமளவிலான வருமானத்தைப் பெறும் கொள்கைகளை சர்வதேச நாணய நிதியம் அரசாங்கங்கள் மீது திணிக்கிற போது, சர்வதேச நாணய நிதியமே, நடைமுறையில், விபசாரிகளைத் திரட்டுவதில் தலைமைப் பங்கை வகிக்கிறது. அக்னெதெ ஸ்ற்றோம் 1968ம் ஆண்டு எழுதிய தனது நூலில் இப்பகுதியில் விபசாரத்தின் விளைவுகளைப் பின்வருமாறு கூறுகிறார்:

"பாங்கொக் நகரின் விபசாரிகளிற் 96 சதவீதமானோர் நாட்டின் மிக வறுமைப் பட்ட பகுதிகளினின்று வருகின்றனர்.

தாய்லாந்தின் ஏழு லட்சம் விபசாரிகளில் இரண்டு லட்சம் பேர் பாலியல் சுற்றுலாத் துறையில் பயன்படுத்துகின்றனர்.

இதைத் தடுப்பதற்கு அரசு எடுக்கும் முயற்சி வெகு சொற்ப அல்லது இல்லவே இல்லை எனலாம். மாறாக, அது தன்னைப் பண வருமானத்தில் மேலும் தங்கியிருக்குமாறு செய்து மேலும் அதிகம் பாலியற் சுற்றுலாவுக்கு இடமளிக்கிறது "பாலியற் தொழில்' என்பது ஏகாதிபத்தியம் ஒழுங்கு முறையாக ஈன்ற குழந்தை. அது 20–30 ஆண்டுகளாக இருந்து வருகிறது. ஆனாலும் இப்போதுதான் உண்மையில் அது என்ன என்று எங்களுக்குக் கண் திறந்துள்ளது. இளம் பெண்கள் பெருநகரங்களிற் தம்மை விபசாரத்தில் ஈடுபடுத்தி வீட்டுக்கு அனுப்பும் பணத்தின் மீதே ஆயிரக்கணக்கான கிராமங்களது பொருளாதாரம் அமைந்துள்ளது.

"மகளின் விபசாரமே அவரது பெற்றோரினதோ குடும்பத்தினரதோ பொருளாதார அத்திவாரமாகி அதிகாரிகள் அதைத் தேசிய பொருளாதாரத்துக்கு முக்கியமானதாகக் கருதும்போது, பெண்களின் நிலைக்குக் குழிபறிப்பதில் ஏகாதிபத்தியம் வெகுவாக முன்னேறியுள்ளது எனலாம். பெண்கள் பற்றி விருத்தி பெற்றுள்ள இப்பார்வைக்கு எதிராகப் போரிட மாட்டார்களென்றால் அவர்களால் எத்தகைய புதிய சமுதாயத்தைத் தான் கட்டியெழுப்ப முடியும்?"

இந்த அத்தியாயத்தில் நான் தந்துள்ள விடயங்கள், பால் சார்பற்று ஏகாதிபத்தியம் இயங்கவில்லை என்று



காட்டுவதற்குப் போதுமானது. எனவே ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டம் பால் சார்பற்றதாக அமைய முடியாது. புறவயமாக ஆண்கள் உள்ள நிலையிற் பெண்கள் இல்லை. இது மூன்றாம் உலகுக்குப் பொருந்தும். எனவே, அவர்கள் வர்க்கப் போராட்டத்திலும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்திலும் ஆண்கள் வகிக்கும் அதே பங்கை வகிப்பதில்லை. ஏகாதிபத்தியத்தின் "அபிவிருத்திக்கான முன்மாதிரியாலும்" சீவனோபாயத்துறை மீதான தாக்கதலாலும் அதி கடுமையாகத் தாக்குண்டவர்கள் பெண்களே என அறிந்திருப்பது முக்கியமானது. ஆபிரிக்க விவசாயிகளின் புரட்சியொன்று நிகழுமானால் பெண்களே அதன் பிரதான சக்தியாக இருக்கக் கூடுமோ? ஸமிர் அமின், மிர்டால் போன்றோர் விவரிக்கும் விதமான ஒரு புரட்சியாக, உலகச் சந்தையுடன் உறவைத் துண்டித்துச் சீவனோபாயத்தைத் தனது மூலோபாயத்தின் பிரதான உறுப்பாகக் கொண்டதாக அமையலாம். எவ்வளவு கேவலமானதாக இருந்தாலும், ஆண்களுக்குத் தப்பிச் செல்ல மாற்று வழிகள் உள்ளன. "பழைய முறைப்படி வாழ்வது" பெண்களுக்கு மேலும் மேலும் இயலாததாகி வருகிறது. இதனால், மூன்றாமுலக நாடுகள் பலவற்றுக்கான விடுதலைக்கான மூலோபாயம் வெல்லவேண்டுமாயின் தெளிவானதொரு பெண்களின் நோக்கைக் கொண்டதாக அமைய வேண்டும்.

ஒரு விடயம் மட்டும் நிச்சயம். மூன்றாமுலகின் பெண்கள் மத்தியினின்று எழுங் கிளர்ச்சி ஏகாதிபத்தியத்துக்கு ஒரு பயங்கரமான மிரட்டலாகும். இத்தகைய ஒரு கிளர்ச்சி, மூன்றாமுலகின் வெகுசனங்களை மேலும் அதிகமாகச் சுரண்டுவதற்கு ஏகாதிபத்தியம் நிறுவுகிற அத்திவாரத்திற் பெரும்பகுதியைத் தாக்கிவிடும். தன்னளவில் கிட்டத்தட்ட நல்ல நோக்கத்திலேயே மேற்கொள்ளப்படும் உதவிப் பணிகள் "பெண்கள் அபிவிருத்திக்குப் பின்தங்கியவர்களாகவே உள்ளனர்" என்ற கருத்தின் அடிப்படையிலானதாகும். இது முற்றிலுந் தவறானது. எல்ஸனும் பியர்ஸனும் தமது நூலிற் பின்வருமாறு கூறுவதுடன் நான் முற்றாக உடன்படுகிறேன்.

"பிரச்சினை அபிவிருத்திச் செயல்முறையினின்று பெண்கள் விடுபட்டுப் போனமை தொடர்பானது என்பதை நாம் ஏற்கவில்லை. மாறாக எந்த உறவுகளும் பெண்கள் அபிவிருத்திச் செய்முறையுடன் 'ஒருங்கிணைக்கப்' படுகிறார்களோ அதுவே பிரச்சினையாகக் கொள்ளப்பட்டு விசாரிக்கப்பட வேண்டும். ஏனெனில் இத்தகைய உறவுகள் பிரச்சினையின் ஒரு பகுதியாகலாமேயொழியத் தீர்வின் ஒரு பகுதியாக இயலாது."

பெண்கள் எவ்வாறு ஏகாதிபத்திய அபிவிருத்தியுடன் ஒருங்கிணைக்கப் படுகிறார்கள் என்பது

தொடர்ச்சி 12ம் பக்கம்.

படிப்பகம்

www.padippakam.com



# இந்திய நாடாளுமன்றத் தேர்தல் சில அவதானிப்புகள்

- தீபன் -

இந்தியத் தேர்தல்கள் பற்றி என்றுமில்லாதவாறு இலங்கையர்கள் கூடிய கவனஞ் செலுத்தவேண்டியவர் களாக இருக்கின்றனர். தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு காண்பதில் இந்தியா தலையீடு செய்துவருவது மட்டுமன்றி இலங்கையின் பல அடிப்படையான வர்த்தகங்களிலும் இந்தியா கட்டுப்பாடு செலுத்தி வருகிறது.

அதேவேளை இந்திய ஆளும் வர்க்கத்திற்கு எதிராகவும் ஏகாதிபத்திய உலகமயமாக்கலுக்கு எதிராகவும் பல்வேறு மட்டங்களில் பல்வேறு விதங்களில் இந்திய மக்கள் போராடிவருகின்றனர். அப்போராட்டங்கள் தற்போது வளர்ச்சியடைந்து வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

இந்திய தேர்தல் பாரதீய ஜனதா கூட்டணி, இந்திரா காங்கிரஸ் கூட்டணி என்பவற்றிற்கிடையேயான போட்டியாக இருப்பதுடன் இந்திய ஆளும் வர்க்கங்களிடையே அரசாங்கத்தை கைமாற்றிக் கொள்ளும் சந்தர்ப்பமாக அமையுமா என்பதுமே பொதுவாக கவனிக்கப்படுகின்ற விடயமாக இருக்கிறது. அதாவது பாரதீய ஜனதா கூட்டணி தோற்கடிக்கப்பட்டு இந்திரா காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெறுமா என்பதே பொதுவாக எழுப்பப்படுகின்ற கேள்வியாக இருக்கிறது.

இந்தியாவின் இரண்டு பிரதான முதலாளித்துவ கட்சிகளின் வெற்றியை பிராந்திய கட்சிகளே மேலும் மேலும் தீர்மானிப்பனவாக இருப்பது இந்தியாவின் வித்தியாசமான விஷேடமான அரசியல் சூழ்நிலை என்றும் சிலர் எழுதி வருகின்றனர். பிராந்தியக் கட்சிகள் தேர்தல் வெற்றியை தீர்மானிப்பனவாக இருப்பதாக காட்டப்பட்டாலும் பிராந்திய கட்சிகளின் வர்க்க ஒருமைப்பாட்டுடன் தான் பிரதான கட்சிகள் மத்தியில் ஆட்சி நடத்தி வந்தன. பிராந்திய கட்சி ஒன்று தேர்தல் வெற்றியையும், பாராளுமன்ற பெரும்பான்மையையும் தீர்மானித்தது என்பதற்காக அப்பிராந்திய மக்கள் மத்திய அரசால் அடக்கப்படாமலோ ஒடுக்கப்படாமலோ இருந்தனர் என்பதற்கு சான்றுகளே இல்லை. குறிப்பாக இன, மத கலவரங்கள் அப்பிராந்தியத்தில் நடைபெறவில்லை என்றும் கூறமுடியாது. அப்பிராந்திய தொழிலாளர்கள், விவசாயிகள், பெண்கள் உரிமைகள் மறுக்கப்படவில்லை என்றும் கூறமுடியாது. பாரதீய ஜனதா கூட்டணியில் அங்கம் வகித்தார் என்பதற்காக ம.தி.மு.க. தலைவர் வை.கோ. உட்பட பலர் பொடா சட்டத்தின் கீழ் மாதக்கணக்கில் தடுத்து வைக்கப்பட்டதை தவிர்த்துக்கொள்ளவும் முடியவில்லை.

இந்திரா காங்கிரஸ் கூட்டணி ஆட்சியமைத்தால் இலங்கை தமிழ் மக்களின் உரிமைக்கோரிக்கை மேலும் நசுக்கப்படுவதற்கே வாய்ப்புகள் அதிகம் என்று வாதிடுவோரும் இருக்கின்றனர். பாரதீய ஜனதா ஆட்சிக்கு வந்தாலும் இந்திரா காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தாலும் தென்னாசிய பிராந்திய மேலாதிக்கம் தொடர்பான கொள்கையில் மாற்ற மெதுவும் ஏற்படாது. அதனால் இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு நடவடிக்கைகள் எடுக்கப்படுமானால் அதனை குழப்புகின்ற ஆழ, அகலம் வித்தியாசப்பட்டாலும் இரண்டு கட்சிகளும் குழப்பாமல் இருக்காது. தமிழ் மக்களின் உரிமைக்கோரிக்கைகளை இந்திய மேலாதிக்கத்திற்கு ஏற்றவாறு வளைத்துக் கொள்ளலாம் என்பதிலேயே அவை கரிசனையாக இருக்கும்.

அந்த இரண்டு கட்சிகளுக்கு அப்பால் ஆகக் குறைந்த தேசிய ஜனநாயக வேலைத் திட்டத்தையாவது முன்னெடுக்கக்கூடிய இன்னொரு அணியின் ஒருமுகப்பட்ட வளர்ச்சியை இந்தியாவில் தற்போதைக்கு காண முடியவில்லை.

ஏகாதிபத்திய உலகமயமாக்கலுக்கு இந்தியாவை திறந்து விடுவதிலும் உலகமயமாதல் சூழ்நிலையில் இந்திய மூலதனம் கூடியவரை தென்னாசியாவிலும் ஏனைய மூன்றாம் உலக நாடுகளிலும் ஆதிக்கம் செலுத்து மளவிற்கு மான நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதற்கும் ஏற்ற வகையிலேயே பாரதீய ஜனதா கட்சியும், இந்திய காங்கிரசும் எழுந்து நிற்கின்றன. அந்த அடிப்படையிலான ஆட்சியை செய்கின்றபோது இந்தியாவில் தேசிய இனங்களின் அபிலாஷைகள் மறுக்கப்படும். இந்திய மக்களின் ஜனநாயகம் மறுக்கப்படும். இந்திய உழைப்பாளர்களின், விவசாயிகளின் உரிமைகள் மறுக்கப்படுவதும் ஆட்சியின் பிரிக்க முடியாத லட்சணங்களாகி விடும். இப்பிராந்திய நாடுகளின் சுதந்திரத்தின் கழுத்து நெறிக்கப்படும்.

இந்தியாவின் உள்ளும் புறமும் ஏகாதிபத்திய உலகமயமாக்கலை முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களை எடுக்க வேண்டிய நிலையிலும் விருப்புடனுமே செயற்படும் கட்சிகளாகவே பாரதீய ஜனதா கட்சியும், இந்திரா காங்கிரசும் அவற்றுடன் கூட்டிணையும் பல பிராந்தியக் கட்சிகளும்இருக்கின்றன. அதற்கு பாரதீய ஜனதா இந்துத்துவத்தை போதியமட்டும் பாவிக்கும். இந்திரா காங்கிரஸ் மதச்சார்பின்மையை உச்சரித்துக்கொண்டு ஆட்சி செய்யும்.

இதனால் இரண்டு கட்சிகளில் எது ஆட்சிக்கு வந்தாலும் இந்திய மக்கள் தேசிய அபிலாஷைகள் நிராகரிக்கப்பட்டவர்களாகவும் ஜனநாயகம் மறுக்கப்பட்டவர்களாகவும் உழைப்பாளர்களும், விவசாயிகளும், உரிமை மறுக்கப்பட்டவர்களாகவும், பெண்களும் ஒடுக்கப்பட்ட மக்களும் சுதந்திரம் மறுக்கப்பட்டவர்களாகவும் வாழும் நிலை வெவ்வேறு விதங்களில் தொடரத்தான் செய்யும்.

இதற்கு மாறான மக்கள் நலன் சார்ந்த போக்கினைக் கொண்ட அரசியல் நடவடிக்கைகளில் ஒருமைப்பட்ட போக்கில்லாவிட்டாலும் வெவ்வேறு விதங்களில் அந்நடவடிக்கைகள் பல சக்திகளாலும் முன்னெடுக்கப்படுகின்றன. இச்சக்திகளை புரட்சிகர மாக்சிஸ்ட்டு லெனினிஸ்டுகளாகவும், இடதுசாரி முற்போக்கு சக்திகளாகவும், தேசபக்த ஜனநாயக சக்திகளாவும் காண முடிகின்றது.

இச்சக்திகளில் சில எதிர்வரும் தேர்தலை பகிஷ்கரித்து மக்கள் போராட்ட இயக்கங்களை முன்னெடுக்கின்றன. சில சக்திகள் தேர்தலில் போட்டியிட்டு அவற்றின் தனித்துவத்துடன் மக்கள் போராட்ட இயக்கங்களுக்கு வலுசேர்க்கின்றன. இச்சக்திகள் ஏகாதிபத்திய உலகமயமாக்கலுக்கும் இந்திய மேலாதிக்கத்துக்கும், இந்திய முதலாளிவர்க்கத்திற்கு எதிராக விட்டுக்கொடுக்காமல் போராடிவருகின்றன. அச்சக்திகள் எதிர்வரும் தேர்தலிலும் அதற்கு பின்னரும் மேலும் பன்மடங்கு பலம் பெற்று முன்னேற வேண்டும்.

இச்சக்திகள் அனைத்தும் பரந்துபட்ட பொது வேலைத்திட்டத்தின் கீழ் பொது இணக்கப்பாட்டுடன் இந்திய மக்களின் விடுதலைக்கான பாதையில் அணித்திரள்வதற்கான அவசியம் புறத்தொதுக்க முடியாததாகியுள்ளது. அவ்வாறு பொது இணக்கப்பாட்டுடன் செயற்படுவது இலகுவான காரியமாக இருக்கப்போவதில்லை. ஆனால் அது இப்பிராந்திய நாடுகளின் புரட்சிகர, இடதுசாரி முற்போக்கு ஜனநாயக சக்திகளுக்கு நிச்சயமாக ஒத்துழைப்பாகவும் தெம்பாகவும் இருக்கும் என்பதில் ஐயமிருக்க முடியாது.

# ஈராக்கிற்கு இட்டுக்கட்டிய கதை சீ.ஐ.ஏ. இயக்குனர் கூறுகிறார்

ஜனாதிபதி புஷ்சின் செல்வாக்கு 50மூ வீழ்ச்சி அமெரிக்க ஜனாதிபதி புஷ்சின் செல்வாக்கு அரைவாசியாக வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகிவருகின்ற வேளை பெப்ரவரி 5ம் திகதி சீ.ஐ.ஏ இயக்குனர் ஜோர்ஜ் ரெனற் ஒரு சொற்பொழிவில் வெளி யிட்டார்.

ஈராக்கில் பெருமளவில் அழிவைத் தரும் இரசாயன ஆயுதங்கள் இருந்தன என்று சி.ஐ.ஏ. வெளியிட்ட தகவல்களில் தவறுகள் இருந்திருக்கலாம் என வாஷிங்ரனில் உள்ள ஜோர்ஜ் ரவுண் பல்கலைக்கழகத்தில் உரையாற்றுகையில் கூறியிருந்தார்.

அந்த உரையில் "ஒருவரும் எம்மை என்ன சொல்ல வேண்டும், எப்படிச் சொல்ல வேண்டும்" என்று அறிவுறுத்தவில்லையெனத் தெரிவித்திருந்தார்.

ஈராக்கில் சதாம் குசேயினைப் பதவியிலிருந்து எப்படியேனும் அப்புறப்படுத்த வேண்டுமென்று ஜனாதிபதி புஷ் தீர்மானித்ததன் அடிப்படையிலேயே சீ.ஐ.ஏ. ஈராக்கில் பயங்கர ஆயுதங்கள் இருக்கின்றன என அறிக்கைகள் வெளியிடத் தொடங்கின என்பதை சீ.ஐ.ஏயின் இயக்குனரின் கூற்று தெளிவுபடுத்துகிறது.

இது இவ்வாறிருக்க இராக்கில் அழிவு தரும் ஆயுதங்கள் கண்டுபிடிக்காத நிலையில் இது தொடர்பாக ஒரு விசாரணை ஆணைக்குழுவை நியமிக்க ரொனிபிளேயர் திட்டமிட்டுள்ளார். நாற்பத்தைந்து நிமிடங்களில் அவ்வாறான அழிவு தரும் ஆயுதங்களை ஈராக் பயன்படுத்தும் என பிரதமர் பிளையர் தெரிவித்தே ஈராக்மீதான யுத்தத் தொடுப்புக்கு ஆதரவு வழங்கினார் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

இது இவ்வாறிருக்க ஈராக் மீது யுத்தம் தொடுத்ததை எதிர்த்த அமைச்சர் றொபின் கூக் பிரதமர் பிளையர் தான் 45 நிமிடங்களில் ஈராக் அழிவுதரும் ஆயுதங்களை பயன்படுத்தலாம் என்ற கூற்றினை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை எனத் தெரிவித்தமையானது பிரதமர் தமது கடமையில் தவறிழைத்துவிட்டார் எனவும் அவர் இராஜினாமாச் செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

1976ல் தான் பட்டம் பெற்ற பல்கலைக் கழகத்தில் உரையாற்றுகையில் சீ.ஐ.ஏ இயக்குனர் ஆற்றிய உரையின் சாரம் இது தான்.

"உளவு என்ற விடயத்தில் நீங்கள் முழுமையாகத் தவறு விடுவதில்லை. அது போலவே முழுமையாகச் சரியென்றும் இல்லை. சதாமின் பாரிய அழிவு தரும் ஆயுதங்கள் சம்பந்தப்பட்ட விடயத்திற்கும் இது முழுமையாகப் பொருந்தும்.

## குத்தகைக்காக

2ம் பக்க தொடர்ச்சி

மக்கள் மீது போரைத் திணித்து தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வை வழங்க மறுக்கும் அரசாங்கத்திடமிருந்து கூடிய வாடகையை பெறுவதுடன் அரசாங்க செலவில் கட்டிட மறுசீரமைப்பையும், கட்டிடத்திற்கு மின்சாரத்தையும் பெற்றுக்கொள்ளும்போது எவ்வாறு தமிழ் மக்களுக்காக குரல் எழுப்ப முடியும்?

குத்தகைப் பணத்திற்காக 'சோரம் போய்விட்டு' தமிழ் உணர்வு, தமிழ் தேசிய உணர்வு பற்றியெல்லாம் எப்படி உச்சரிக்க முடிகிறது?

இவர் மட்டுமல்ல இன்னும் பல தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர்கள் சோரம்போன கதைகள் நிறையவே இருக்கின்றன. தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர்களில் பலர் அரசாங்கத்தைப் பற்றி எவ்வளவுதான் விமர்சித்து பேசினாலும் அவர்களுக்கு ஐ.தே.கட்சி மீது ஆழமான காதல் இருக்கிறது. அதுதான் அவர்களின் முதலாளித்துவ வர்க்க காதல்.

அதேபோல் வேறு சில தமிழ் தலைவர் களுக்கு ஜனாதிபதி சந்திரிக்கா தலைமையிலான சுதந்திரக் கட்சி ஜே.வி.பி. கூட்டான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மீது காதல் இருக்கிறது. அம்முன்னணி மீது காதல் இருக்கிறது. அம்முன்னணி தமிழ் மக்களுக்கு உரிமைகளை அள்ளித் தரப்போவதாக அவர்கள் பிரசாரம் செய்கிறார்கள். இதுவும் ஆளும் வர்க்கத்துடனான வர்க்க உறவே ஆகும்.

# புரட்சிகர குறிப்பேடு

## கார்ல் மார்கஸ் நினைவு தினம் – (1883-03-14)



1883 மார்ச்சு 14ம் திகதி மார்க்சியத்தின் மூலவர்களில் ஒருவரான கார்ல் மார்க்சு காலமானார். அவர் மூலதனத்தின் சுரண்டல் பற்றியும், அதிலிருந்து முழு மனிதகுலமும் விடுதலையடைய தொழிலாளர் வர்க்க புரட்சியின் அவசியம் பற்றியும் விஞ்ஞானபூர்வமாக உலகிற்கு எடுத்துக் காட்டியிருந்தார். சுரண்டல் நிறைந்த சமூகத்தை மாற்ற பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான சோஷலிசப் புரட்சியின் அவசியம் பற்றியும் அதிலிருந்து வர்க்கமற்ற கம்யூனிஸ சமூகத்தை கட்டியெழுப்புவது பற்றியும் தத்துவரீதியாகவும் தர்க்கரீதியாகவும் நிரூபித்திருந்தார்.

மனித மனங்களில் ஏற்படும் கருத்துக்களே அவர்களை வழிநடத்துகின்றன என்ற கருத்து முதல் வாத தத்துவம் உலகத்தில் வெகுகாலமாக நிலவி வந்தது. மனித மனங்களில் கருத்துக்களை கடவுள் ஏற்படுத்துகிறார் என்றும் அதன் வழி நடக்க வேண்டும் என்பதே அதன் பொருளாக இருந்தது. 19ம் நூற்றாண்டில் கார்ல் மார்க்ஸ் அதனை மறுத்தார். மனதுக்கு வெளியில் இருக்கும் பொருட்கள் தான் மனதில் கருத்துக்களை ஏற்படுத்துகின்றன என்ற பொருள் முதல்வாதத்தை விஞ்ஞானப் பூர்வமாக அவர் தெளிவுபடுத்தினார். இது இயக்கவியல் பொருள் முதல் வாதம் எனப்படுகிறது. அன்றிலிருந்து கருத்துமுதல் வாதம் பொருள் முதல் வாதம் இரண்டிற்கும் இடையில் மோதல் தொடங்கியது. இவை உலகத்தின் கவனத்தை ஈர்த்தன. ஆளும் வர்க்கத்தினர் மார்க்சின் கருத்திற்கு எதிராக பல்வேறு வகையில் செயற்பட்டன. அந்த அடக்குமுறைகளை எதிர்த்து உலகெங்கிலும் உள்ள அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் வீரத்துடன் வர்க்கப் போராட்டப் பாதையில் முன்னேறத் தொடங்கினர். மார்க்சீயத்தின் அடிப்படையில் போராட்டங்களும் புரட்சிகளும் நடைபெற்றன.

மார்க்சிசம் லெனினிசமாக வளர்த்தெடுக்கப்பட்டது. உலகின் சோஷலிஸ நாடுகள் உருவாகின. அவற்றின் சோஷலிஸ கட்டுமானங்களில் பிரச்சினைகள் ஏற்பட்டு தற்காலிகமான பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன.

ஆனால் மார்க்சிசத்தின் தேவை இன்னும் நிராகரிக்கப்பட முடியாததாகவே இருக்கிறது. ஏனெனில் சுரண்டல் ஒழிக்கப்படும்வரை அதற்கான தேவை இருந்து கொண்டே இருக்கும்.

## ஸ்டாலின் நினைவு தினம் – (1953-03-05)



1917ம் ஆண்டு அக்டோபர் புரட்சிக்கு தலைமைதாங்கிய முன்னணித் தலைவர்களில் ஒருவர் ஜே.வி.ஸ்டாலின். லெனினின் மறைவிற்குப் பிறகு சோவியத் யூனியனில் சோஷலிஸ கட்டுமானங்களை முன்னெடுத்தவர். 1945ம் ஆண்டு இரண்டாம் உலக யுத்த அழிவுகளிலிருந்து சோவியத் யூனியனை தற்காத்தது மட்டுமன்றி முழு மனிதகுலத்தையும் ஹிட்லரின் நாசிக அழிவிலிருந்து காப்பாற்றிய தலைவர்களில் முதன்மையானவராவார்.

ஒரு நாட்டில் சோஷலிஸத்தை கட்டியெழுப்பும் அதேவேளை உலகப்புரட்சி நோக்கி முன்னேறுவது, சோஷலிஸ கட்டுமானங்கள், ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டம் போன்றவற்றுக்கு பெரும்பங்களிப்பை செய்தார்.

திரிபுவாதம் மீள முதலாளித்தவமாதல் போன்றவற்றிற்கு எதிராக கடுமையான போராட்டங்களை முன்னெடுத்தார்.

## பகத்சிங் நினைவு நாள் (1931-03-23)



1931 மார்ச் 23ம் திகதி பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகிய மூன்று இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் லாகூர் மத்திய சிறையில் தூக்கிலிட்டது. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கானவர்கள் வீர மரணமடைந்துள்ளனர். அவர்களில் பகத்சிங் முற்போக்கான பாத்திரத்தை வகித்திருக்கிறார். அவரது போராட்ட நடவடிக்கைகள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை கதிகலங்கச் செய்தது. அவர் உயிர் நீக்கும் வரை எவ்வித சமரசத்தையும் செய்யவில்லை.

இன்று இந்தியா, இலங்கை போன்ற நாடுகளின் மக்கள் ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலின் கீழ் மறுகாலனியாதிக்கத்திற்குட்படுத்தப்பட்டுள்ள இக்கால கட்டத்தில் பகத்சிங் போன்ற தியாகிகளின் நினைவு மறுகாலனித்துவத்திற்கு எதிரான போராட்டங்களுக்கு வலுவைச் சேர்க்கிறது.

## சர்வதேச உழைக்கும் மகளிர் தினம் (மார்ச் 8)

- மாதர்கள் பூரண விடுதலையை வென்று பெறாத வரையிலும் தொழிலாளி வர்க்கம் பூரண விடுதலையை அடைய முடியாது.
- நாட்டின் நிர்வாகத்தில் பங்கெடுத்துக் கொள்வதன் மூலம் மாதர்கள் விரைவில் கற்றுத்தேர்ந்து ஆண்களை எட்டிப் பிடிப்பார்கள்.
- உழைக்கும் பெண் உழைக்கும் ஆணுக்குச் சட்டத்தின் மட்டுமன்றி, நடைமுறையிலும் சம அந்தஸ்து உள்ளவராக இருக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். இதற்கு உழைப்பாளிப் பெண்கள் சமூக உடைமையாக்கப்பட்ட நிலையங்களின் நிர்வாகத்திலும், அரசின் நிர்வாகத்திலும் மென்மேலும் அதிகம் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும்.

இவை பெண் விடுதலை பற்றி லெனின் கூறியவற்றிலிருந்து எடுக்கப்பட்ட சில விடயங்களாகும். வர்க்க சமூகத்தின் உற்பத்தியே பெண்ணடக்குமுறை என்பதனால் வர்க்க சமூகத் தகர்ப்பதுடன் இன்றியமையாதவாறு பிணைக்கப்பட்டுள்ளது பெண் விடுதலை ஆகும்.

பெண்களுடைய போராட்டங்களின் தொடர்ச்சியாக சர்வதேச மகளிர் தினம் பிரகடனப்படுத்தப்பட்டது. ஆனால் இன்று நடக்கின்ற மகளிர் தின நிகழ்ச்சிகளை பாரக்கின்றபோது சர்வதேச மகளிர் தினப் பிரகடனத்திற்கும் அந்நிகழ்ச்சிகளுக்கும் தொடர்பற்ற தாகவே இருக்கிறது. அடக்கப்படுகின்ற ஒடுக்கப்படுகின்ற உழைக்கும் மகளிர் தினமாகவன்றி வெறும் கொண்டாட்டங்களாக அமைந்துள்ளன.

இன்னொரு பக்கத்தில் அரசசார்பற்ற நிறுவனங்கள் வெறும் பெண்ணிலைப்பட்டதாக ஆண்விரோத போக்குடையதாக மகளிர் விடுதலையை முன்னெடுக்கின்றன.

இதற்கு மாறாக பரந்துபட்ட உழைக்கும் மக்களின் போராட்டங்களுடன் மகளிரின் போராட்டங்கள் இணைக்கப்பட்டதாக முன்னெடுக்கப்படுவது அவசியம். அதுவே முழுமையான பெண்கள் விடுதலைக்கு வழி வகுக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



# பிரதான கட்சிகளின் போக்கும் பொது மக்களின் வாக்குகளும்

**நமன்**

இலங்கைப் பாராளுமன்றப் பொதுத் தேர்தல் என்ற முதலாளித்துவ ஜனநாயக ஏமாற்று நாடகம் எதிர் வரும் ஏப்பிரல் 2ம் திகதி மீண்டும் ஒரு முறை அரங்கேறுகின்றது. ஆளும் வர்க்க கட்சிகள் இரண்டினது அதிகாரப் போட்டி காரணமாக நடைபெறும் இப் பொதுத் தேர்தல் மக்களுக்குப் பயனற்றதும் நிராகரிக்கப்பட வேண்டியதொன்றுமாகும். ஆயினும் இத் தேர்தலில் நிற்கும் பிரதான கட்சிகளின் கொள்கை கோரிக்கைகள் பற்றி நமது கண்ணோட்டத்தைச் செலுத்துவது மக்களுக்கு ஒரு அரசியல் விமர்சனப் பார்வையை வழங்க உதவக் கூடியதாகும்.

தெற்கின் பிரதான ஆளும் வர்க்க கட்சிகள் இரண்டும் வழமை போன்று இத் தேர்தலில் போட்டியிடுகின்றன. ஐக்கிய தேசியக் கட்சி தனது யானைச் சின்னத்தில் மலையக் கட்சியான இ.தொ.காவையும் முஸ்லீம் காங்கிரசையும் அரவணைத்துக் கொண்டு களத்தில் இறங்கி நிற்கிறது. ஜே.வி.பி. சிறிலங்க சுதந்திரக் கட்சியுடன் கூட்டு முன்னணி அமைத்துக் கொள்ளாத வரை ஐக்கிய தேசியக் கட்சி ஒரு பொதுத் தேர்தல் பற்றி ஆவலாகவும் அக்கறையாகவும் இருந்து வந்தது. ஆனால் கூட்டு முன்னணி அமைந்து கொண்ட பின் தேர்தல் அவசியமற்றது என்றே ஐ.தே.கட்சி கூறத் தொடங்கியது.

இதனால் ரணில் தலைமையிலான ஐ.தே.கட்சி இத் தேர்தலில் பெரும் ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லை. தமது வாக்கு வங்கியைப் பாதுகாத்துக் கொள்ளவும் கணிசமான ஆசனங்களைத் தக்கவைத்துக் கொள்ளவும் மட்டுமே தேர்தலில் இறங்கி நிற்கிறது. அதற்கு அப்பால் மீண்டும் பாராளுமன்ற அதிகாரத்திற்கு வருவதில் உற்சாகம் காட்டவில்லை. காரணம் அவர்களது முழுக் கவனம் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலாகவே உள்ளது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி தமது கைகளுக்கு வருவதையே ரணிலும் ஐக்கிய தேசியக் கட்சியும் இலக்காக வைத்திருக்கிறது. அது கிடைத்தால் தனது மாமனாரும் இன்றைய அரசியலமைப்பின் தந்தையுமான ஜே.ஆர். நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டு செய்தவை போன்று தானும் சகலதையும் ஆட்டிப்படைக்கலாம் என்றே ரணில் ஓடுமீன் ஓடி உறுமீன் வரும் வரை காத்து நிற்கவே விரும்புகிறார்.

அத்துடன் ஜனாதிபதியின் காலம் முடியவுள்ள இரண்டு ஆண்டுகளில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி- ஜே.வி.பி. கூட்டை பாராளுமன்றப் பதவிக்கு வரவிட்டு அதனைத் துரும்பாகக் கொண்டு தமது பிரசாரத்தை நடாத்தி ஜனாதிபதித் தேர்தலை வெற்றிகொள்ளலாம் என்பதும் ரணிலின் கொள்கை வகுப்பாளர்களின் கணக்குமாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியால் ரணில் தலைமையிலான தலைமைத்துவத்தால் அல்லது அவர்களோடு கூட்டிணைந்து நிற்பவர்கள் இந்த நாட்டிற்கும் மக்களுக்கும் எவ்வித பயன்களோ மாற்றங்களோ வரப்போவதில்லை. கடந்த இரண்டு வருட ஆட்சியில் ரணிலின் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் செய்து கொண்ட மக்கள் விரோத தேசவிரோத செயற்பாடுகள் சிறந்த உதாரணங்களாகும். தாராளமயம் தனியார் மயத்தை வலுப்படுத்தி மக்கள் மீதான சுமைகளை அதிகரித்து தொழிலாளர் விரோதச் சட்டங்களைக் கொண்டு வந்து ஏகாதிபத்திய அரவணைப்புடன் ஆட்சி செய்த ரணிலின் கொள்கை நடைமுறைகளால் நாட்டிற்கும் மக்களுக்கும் எவ்வித நன்மைகளும் கிடைக்கவில்லை.

சமாதான சூழலைக் கொண்டு வருவதில் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய ஒன்றைத் தவிர கடந்த இரண்டு வருடகால சமாதானப் பேச்சு வார்த்தைகளால் உருப்படியான எதையும் ரணிலால் சாதிக்க முடியவில்லை. அடிப்படைக் காரணம் பேரினவாத நிலைப் பாடேயாகும். எனவே மீண்டும் பதவிக்கு வருவதனால் சமாதானம் செழித்து வளரும் என்பது வெறும்பிரச்சாரம் மட்டுமே. ஏனெனில் தேசிய இனப்பிரச்சினைக்கான நியாயமான தீர்வு ஐக்கிய தேசியக் கட்சியிடமோ ரணிலிடமோ கிடையாது. ஆனால் வெறும் தோற்றத்தையும் பிரமையையும் மட்டுமே அவர்கள் வழங்கி நிற்கிறார்கள்.

அதே வேளை ஜே.வி.பி. யுடன் புதிய கூட்டு அமைத்து நிற்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாட்டின் எந்தவொரு பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியாதநிலையிலேயே இருந்து வருகின்றது. இவர்கள் அமைத்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்பது ஒரு தெளிவான மாற்றுக் கொள்கைகளாக் கொண்ட வேலைத் திட்டத்தை முன்வைக்கவில்லை. பிரதான பிரச்சினையான தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் ஜே.வி.பி. தீவிர இனவாத நிலைப்பாட்டையே பின்பற்றி நிற்கிறது. அதே வேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஒரு மிதவாத நிலைப்பாட்டில் இருந்தாலும் இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வை முன்வைப்பதற்கு தயாரில்லாத நிலைதான் காணப் படுகின்றது.

ஜே.வி.பி. தாராள பொருளாதாரம், தனியார்மயம் பற்றி எந்தளவுக்கு நீட்டி எதிர்ப்புத் தெரிவித்தாலும் பாராளுமன்ற ஆசனங்கள் அதிகமாக வந்து சேர்ந்ததும் அதிகாரத்தில் பதவிகள் பெற்றதும் யாவற்றையும் அடக்கி வாசித்து இறுதியில் பாராளுமன்ற சத்தர்ப்பவாதத்திற்குள் அமுங்கிக் கொள்ளவே நேரிடும். பழைய பாரம்பரிய இடதுசாரிகள் சென்று முடிந்த அதே பாதையே இவர்களுக்கும் திறந்திருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக ஜே.வி.பி. கக்கி வந்த பேரினவாத கூச்சல்களுக்கு பதில் கூற வேண்டிய கட்டாயத்திலும் அவர்கள் விடப்படுவார்கள்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் முன்னணியில் உள்ள தலைவர்கள் அமெரிக்காவிற்கு மட்டுமன்றி இந்திய மேலாதிக்கத்திற்கும் அடிபணிந்தவர்களாகவே இருந்தும் வருகின்றனர்.

- **ஐ.தே.கட்சிக்கு தேர்தலில் ஆர்வம் இல்லை. அது ஜனாதிபதி பதவி மீதே அக்கறை.**
- **சிறிலங்கா-ஜே.வி.பி கூட்டுக்கு பாராளு மன்ற அதிகாரம் தேவை.**
- **புலிகள் இயக்கம் இத் தேர்தலை நிராகரித் திருக்க வேண்டும்.**

ஜே.வி.பி. யின் இந்திய விசுவாசமும் கலந்து நிற்பதனால் கடுமையான அமெரிக்க இந்தியப் போட்டியின் பலிக்களமாக இலங்கை மாற்றப்படும் அபாயம் அதிகரித்து கொள்ளவே செய்யும்.

வடக்கு கிழக்கிலே தமிழர் கூட்டமைப்பு நேரடியாகவே புலிகள் இயக்கத்தால் வழிகாட்டப்படும் நிலைக்கு வந்துள்ளது. அரைவாசிப் பேர் பழைய கட்சிகளின் பிரதி நிதிகளாகவும் அரைவாசிப் பேர் புலிகளின் முகவர்களாகவும் வேட்பாளர்கள் காணப்படுகின்றனர். தேர்தல் கோரிக்கைகள் எதுவும் புதியவை அல்ல. வழிவழி வந்த பழைய பல்லவிதான். சர்வதேசத்திற்கும் சிங்கள தேசத்திற்கும் தமிழர்களது பலத்தைக் காட்ட வேண்டும் என்பதற்கு அப்பால் வடக்கு கிழக்கின் ஏகப்பெரும்பான்மையான சாதாரண மக்களின் வாழ்வுப் பிரச்சினைகளோ அடிநிலை மக்களின் அபிலாஷைகளோ முன்வைக்கப்படவில்லை. தேசியத்தை வலுப்படுத்தும் தமிழரின் பலத்தைக் காட்டும் புலிகளை ஏகப்பிரதி நிதிகளைக் காட்டும் தேர்தல் என்றே பொது வாகக் கூறப்படுகின்றது. இவை தேர்தல் கால முழக்கங்களாயினும் வடக்கு கிழக்கின் அடிப்படை அரசியல் யதார்த்தங்கள் முன்வைக்கப்படவில்லை என்பது கவனத்திற்குரியதாகும்.

புலிகள் இயக்கம் பேரினவாத ஆட்சியதிகாரத்திற்காக சகல மக்களின் மீதும் திணிக்கப்பட்டுள்ள இத்தேர்தலைப் புறக்கணித்திருக்க வேண்டும். அல்லது இதில் அக்கறை இல்லை எனக் கூறி தூரத்தில் ஒதுங்கி நின்று அவதானித்திருக்க வேண்டும். அதற்குமப்பால் இத் தேர்தலில் பங்கு கொண்டு செயற்படுவது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் வீச்சையும் வேகத்தையும் பயனற்ற பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்திற்குள் இழந்து கொள்வதன் ஆரம்பமோ என்றே சிந்திக்க ஏவப்பதாகவே உள்ளது. இதனை உலக விடுதலைப் போராட்டங்களில் ஏற்பட்ட அனுபவ பட்டறிவுகளுடன் ஒப்பட்டுப் பார்க்க வேண்டியும் உள்ளது.

இவற்றுக்கும் அப்பால் தமிழர் கூட்டமைப்பில் அங்கம் பெறும் கட்சிகளை சற்று அவதானித்தால் அவற்றின் கடந்தகால அடையாளங்களை மக்கள் மறந்துவிடமாட்டார்கள். மக்கள் விரோத செயற்பாடுகள் இரத்தக் கறைபடிந்த கரங்கள் துரோகத் தனங்கள் காட்டிக்கொடுப்புக்கள் என நீண்டு செல்லும் பலபக்கங்கள் உண்டு. அவற்றுக்குரிய சுயவிமர்சனங்களோ பகிரங்க மன்னிப்போ கோராதவரை மக்களை ஏமாந்தவர்களாக காணும் நிலைதான் காணப்படும்.

இவற்றுக்கும் அப்பால் கூட்டமைப்பினரின் சில அறிக்கைகள் பேச்சுக்கள் யூஎன்.பி ஆதரவுநிலையை சுட்டிக்காட்டுவதாகவும் காணப்படுகிறது. இது பழைய தமிழ்த் தலைமைகள் பின்பற்றி வந்த யூஎன்.பி ஆதரவாகவே காணப்படுகிறது. இரண்டு கட்சிகளும் பேரினவாத பேரு முதலாளித்துவ பழமை பேணும் ஆளும் வர்க்கக்கட்சிகள் என்பது தமிழ்மக்களிடம் எடுத்து கூறப்படா விட்டால் தமிழ்ப்போராட்டத்தினதும் சுயநிர்ணய உரிமைக்கோரிக்கையினதும் அர்த்தம் வலுவிழந்த ஒன்றாகிவிடவே செய்யும்.

மேலும் முஸ்லிம் மக்கள் மத்தியில் தலைமைகள் பிரிந்து நின்று வாக்குக் கேட்கும் நிலை முஸ்லிம் தேசியம் என்று கூறப்படுவதன் வறுமையையே எடுத்துக்காட்டுகிறது. முஸ்லிம் தேசியத்தின் பெயரால் பிரேரிக்கப்பட்ட ஐக்கியம் தத்தமது வர்க்க நோக்கங்களுக்கான சுயநலத்தால் மூழ்கடிக்கப் பட்டுள்ளது. தேர்தலில் வெற்றி பெறுவோர் அமைச்சர்கள் மற்றும் பதவிகளுக்கு ஆலாய்ப் பறப்பவர்களே அன்றி சாதாரண முஸ்லிங்களின் ரட்சகர்களாக முடியாது என்ற உண்மை விரைவாகவே முஸ்லிம் மக்களால் உணரப்படவே செய்யும்.

மலையகத்தில் ஆறுமுகம் தொண்டமானும், சந்திரசேகரனும் தங்களது மேய்ப்பர்கள் பதவிக்காக எந்தக் குத்துக்கரணமும் போடத் தயாரான நிலையில் வழமை போன்று இத் தேர்தலிலும் நின்று வருகின்றனர். மலையகத்திலிருந்து தேர்தலில் நின்று வரும் பணபலமும் அந்தஸ்து நிலையும் ஆதிக்க அரசியல் குணமும் கொண்ட அத்தனை பேர்களினதும் பேச்சுக்களும் மலையக மக்களை அரசியல் அறிவற்று சொல்வதை எல்லாம் மறுப்பின்றிக் கேட்டு வாக்குப்போடும் மக்களாகக் கருதியே பேசிவருகிறார்கள். ஆனால் மலையக மக்களை இத் தேர்தலில் ஏமாற்றினாலும் எதிர்காலத்தில் ஏமாற்ற முடியாத நிலை தோன்றவே செய்யும்.

எனவே இப்பாராளுமன்றப் பொதுத் தேர்தல் மூலம் சகல மக்களும் அரசியல் அனுபவங்களையும் முதலாளித்துவ பண முதலைகளினதும் பழைமைவாத ஆளும்வர்க்க அரசியல் ஆதிக்க சக்திகளினதும் உண்மையான அரசியல் சுயரூபத்தைத் தெரிந்து கொள்ளும் சந்தர்ப்பமாக்கிக் கொள்ளல் வேண்டும்.




## த்ரொத்ஸ்கியம் தலைதூக்குகிறதா?

புரட்சிகர மாக்ஸிய இயக்கமாகத் த்ரொத்ஸ்கியம் தன்னை அடையாளங் காட்டிய காலம் எப்போதோ சென்றொழிந்தாயிற்று. உலகில் மிகப்பெரிய த்ரொத்ஸ்கியக் கட்சிகள் அமெரிக்காவிலும் இலங்கையிலுமே இருந்தன. இலங்கையில் த்ரொத்ஸ்கியம் தலை தூக்க ஒரு முக்கிய காரணம் இலங்கை இடதுசாரி இயக்கத்தின் தொடக்கக்காலச் சிங்களத் தலைவர்கள் மேற்கில் த்ரொத்ஸ்கியத்தால் ஈர்க்கப்பட்டு இலங்கை திரும்பியவர்கள் என்பதாகும். பிலிப் குணவர்த்தன, கொல்வின் ஆர்.டி.சில்வா, பின்னர் என்.எம்.பெரேரா, லெஸ்லி குணவர்த்தன போன்ற பலரும் வசதியுள்ள குடும்பப் பின்னணியை உடையவர்கள் என்பதால் அவர்களது அணுகுமுறையில் அவர்களது வர்க்கப் பண்பு காணப்பட்டது. அவர்கள் தங்களது சிந்தனையைப் பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்திற் கூர்மைப்படுத்திக் கொள்வதற்கு மாறாகத் தாம் உய்விக்க வந்த ஒடுக்கப்பட்ட மக்களின் ரட்சகர்களாகவே தம்மைக் கருதினர். அவர்களது மேட்டுக்குடி மனோபாவமும் சொகுசான வாழ்க்கை முறையும் காலப்போக்கில் அவர்களை முதலாளிய அரசியலுடன் சமரசத்துக்கு இட்டுச் செல்ல உதவியது என்பது உண்மை. எனினும், அதைவிட முக்கியமாக, த்ரொத்ஸ்கியத்துக்கே உரிய சிறுமுதலாளிய மனோபாவமே அவர்களது அரசியற் சீரழிவின் அடிப்படை எனலாம்.

இன்று ஸ்தாலினியத்தைத் தாக்குவதன் மூலம் தம்மை மரியாதைக்குரியவர்களாகக் காட்டுகிற ஒரு போக்கு பல பழைய இடதுசாரிகளிடையிலும் காணப்படக் கூடியதாகவுள்ளது. இது தமது அரசியல் இயலாமைக்கான காரணத்தைத் தவறாக இனங் கண்டதன் விளைவாக அல்லது தங்களது கடந்த காலத் தவறுகட்கான பழியை ஸ்தாலின் மீது சுமத்தித் தப்பிச் செல்லுகிற தேவையாதலேயே பெரிதும் நடைபெறுகிறது. அதே வேளை. த்ரொத்ஸ்கியம் ஒரு நடைமுறைப் புரட்சிகர இயக்கம் என்ற தகுதியை இரண்டாம் உலகப் போரின் பின்னர் வேகமாகவே இழந்துவிட்டது. இதற்கான பல வரலாற்றுக் காரணங்கள் இருந்தன. எனினும் சோவியத் யூனியனில் திரிபுவாதத்தின் எழுச்சியும் மேற்கு ஐரோப்பியக் கம்யூனிஸ்ற் கட்சிகளது திரிபுவாதப் போக்கின் விளைவாக அங்கு கம்யூனிஸ்ற் கட்சிகள் வெறும் சீர்திருத்தவாதக் கட்சிகளைகளாச் சீரழிய நேர்ந்ததும் உதிரிகளாகப் பிளவுபட்டு மூலைக்கொரு 'நான்காவது அகிலம்' எனப்படும் த்ரொத்ஸ்கிய 'சர்வதேச' அமைப்பைப் பிரகடனம் செய்து செயற்பட்ட த்ரொத்ஸ்கியக் குழுக்கள் தொடர்ந்தும் செயற்பட உதவியது.

த்ரொத்ஸ்கியம் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தேசிய முதலாளியத்துடன் சேர்ந்து கம்யூனிஸ்ற்றுக்கள் போராடுவதை ஏற்கவில்லை. பின்தங்கிய முதலாளிய வளர்ச்சியுள்ள நாடுகளில் சோஷலிஸப் புரட்சி ஒரே வீச்சில் நடைபெற இயலாது என்பதையோ அது ஒன்றுக்கும் மேற்பட்ட காலகட்டங்களில் நடைபெற வேண்டியிருக்கும் என்பதையோ அது ஏற்கவில்லை. சமச்சீரான முறையில் முதலாளிய விருத்தியும் பாட்டாளி வர்க்கத்தின் போராட்ட உணர்வும் விருத்தியடையாத சூழ்நிலையில் உலகளாவிய புரட்சிக்குப் பதிலாகப் புரட்சி வெற்றி பெற்ற எந்தவொரு மண்ணிலும் சோஷலிஸ சமூக - பொருளாதார அமைப்பை நிறுவுவதும் அதன் மூலம் உலகப் புரட்சிக்கு அமைவான சூழலை ஏற்படுத்துவதையும் அது ஏற்கவில்லை.

இதன் விளைவாக ஏற்பட்ட தவறுகள், எவ்வாறு தவறான அணுகுமுறை மூலம் புரட்சியின் பேரால் எதிர்ப்புரட்சியை ஆதரிக்கலாம் என்பதை நமக்குத் திரும்பத்திரும்ப உணர்த்தி வந்துள்ளன. இரண்டாம் உலகப் போரிற்குள் சோவியத் யூனியன் இழுக்கப்பட்ட பின்பு, உலகப் பட்டாளி வர்க்கத்தைப் பொறுத்த வரை போரின் பண்பு மாறிவிட்டது. உலகின் மீதான மேலாதிக்கத்துக்காக ஏகாதிபத்திய இங்கிலாந்தும் பிரான்சும், ஃபாஸிஸ் ஜேர்மனிக்கு எதிராகப் போரிட்ட நிலைமையிலிருந்து ஃபாஸிஸத்துக்கு எதிராக சோசலிஷ சோவியத் யூனியனும் ஏகாதிபத்திய நாடுகளும் இணைந்து போராட வேண்டிய ஒரு நிலையில், விடாப்பிடியாக ஃபாஸிஸத்துக்கு எதிரான போருக்கு எதிர்ப்பு என்ற நிலைப்பாட்டை இலங்கையின் த்ரொத்ஸ்கியவாதிகள் மேற்கொண்டனர்.

லெனின் சோவியத் யூனியனை வலுப்படுத்தும் நோக்கில் முதலாம் உலகப் போருக்குப் பிந்திய சூழலில் சோவியத் யூனியனுக்கும் ஐரோப்பிய முதலாளிய நாடுகட்குமிடையே ஆக்கிரமிப்பின்மையை உறுதிப்படுத்த முயன்ற வேளையில், புரட்சியை 'ஏற்றுமதி' செய்கிற கொள்கையைக் கடைப்பிடித்த த்ரொத்ஸ்கியின் வாரிசுகள் இந்த விதமான மூர்க்கத்தனமான தீவிர இடதுசாரிச் சிறுபிள்ளைத்தனத்தில் த்ரொத்ஸ்கிக்குச் சிறிதும் சளைத்தவர்கள் அல்ல. எல்லாத் தீவிர இடதுசாரிப் போக்கையும் போலக் காலத்துக்குக் காலம் தீவிர வலது சந்தர்ப்ப வாதத்துக்குத் தாவுவதற்கும் அவர்கள் தயங்கியதில்லை.

கொல்வின் ஆர்.டி.சில்வா ஒரு காலத்தில் ருவான்வலிசாய ஸ்தூபியை இடித்து அச் செங்கற்களால் பொது மலசல கூடங்கள் கட்ட வேண்டும் என்றவராவார். 'இரு மொழிகள் - ஒரு நாடு; ஒரு மொழி - இரு நாடுகள்' இன்று 1956ல் எச்சரித்தவரும் அவரே. அதே த்ரொத்ஸ்கிசிவாதி 1970ல் பௌத்த விகாரைக்கு வழிபாட்டுக்கு மலர் கொண்டு சென்றார். 1972ல் தமிழ் மக்களது உரிமைகளை மறுக்கும் முறையிலான ஒரு அரசியல் யாப்பை வரைந்தார். என்.எம்.பெரேரா 1964ல் தன்கட்சியோடு போய் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முதலாளி வர்க்கத்துடன் கூட்டரசாங்கம் அமைத்தார். அது கவிழ்ந்த பிறகு 1970ல் வென்ற பின்பு இரண்டாம் முறையாக நிதி அமைச்சரானார். அதன் பின்பு கூட அவரது த்ரொஸ்கிய சிறுபிள்ளைத்தனம் அவரைவிடவில்லை. 1970களில் பல சில்லறை வியாபார நிறுவனங்களையும் அரசியற் காரணங்கட்காகத் தேசியமயமாக்கி அதுவே சோஷலிசத்துக்கான பாதை என்றார். தனது 'சோஷலிசப் பாதை' அரசாங்கத்தின் பெரும்பான்மைக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு உடன்பாடற்றது என்ற நிலையில் "சோஷலிசத்துக்குப் போகிற வழியில் சத்திரங்கள் கிடையாது" என்று வீறாப்புப் பேசினார். அவரும் திரிபுவாதிகளும் 1977 தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விழுத்தும் நோக்கிற் செயற்பட்டதன் விளைவாக யூஎன்.பி அமோக வெற்றியீட்ட மேலும் வசதி ஏற்பட்டது. அதற்கும் மேலாக, பாராளு மன்ற இடதுசாரி வேட்பாளர்கள் ஒருவருமே எந்தத் தொகுதியிலும் மூன்றாம் இடத்திற்கு மேலே வர முடியாது போய்ப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தையே இழந்தனர்.

"த்ரொஸ்கியத்தின் தந்தை" எனப்படும் பிலிப் குணவர்த்தன சக இடதுசாரிகள் மீதான கசப்புணர்வால் யூஎன்.பி அரசாங்கத்தில் அமைச்சரானார். 1956ல் அவரது த்ரொத்ஸ்கியம் பேரினவாத வடிவம் பெற்றுவிட்டது. இன்று அவரது பிள்ளைகள் யாவருமே பேரினவாதத்தின் குரல்களாக உள்ளனர்.

இன்று எஞ்சியுள்ள த்ரொத்ஸ்விவாதிகள் ஒரு புறம் வரட்டுத்தனமான தீவிர இடதுசாரிச் சுலோகம் உதிர்க்கும் அண்ணாவிமாராக இருக்கிறார்கள் அல்லது இன்னொரு புறம் பாராளுமன்ற அரசியலில் தமக்கொரு இடம் வேண்டிப் பல்வகையான அரசியல் சமரசங்களையும் செய்து வருகிறார்கள். தென்னிலங்கை இடதுசாரி அரசியலின் மிகப் பெரிய சாபக்கேடு, என்னவென்றால் அது த்ரொதஸ்கியவாதிகளது ஆதிக்கத்துக்கு உட்பட்டது என்பது தான்.

சமசமாஜக்கட்சியின் சந்தர்ப்பவாதப் போக்குப் பிடிக்கவில்லை என்று விலகிய எட்மண்ட் சமரக்கொடி தனிப்பட்ட முறையில் நேர்மையானவர். எனினும் 1964ம் ஆண்டு

மறுபக்கம் பார்க்க..

படிப்பகம்

www.padippakam.com



# யாழ்–கல்வியியற் கல்லூரி திறந்த வெளி சிறைச்சாலையா?

## மாணவர்கள், பெற்றோர் கவலைத் தெரிவிக்கின்றனர்

இலங்கையின் கல்வித் துறையில் இயங்கி வரும் பதினேழு கல்வியியற் கல்லூரிகளில் யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியும் ஒன்றாகும். கோப்பாய் பிரதேசத்தில் உருவாக்கப்பட்ட புதிய கட்டிடத் தொகுதியில் செயற்பட்டு வரும் இக் கல்லூரியின் வளர்ச்சி மக்களாலும் கல்வி ஆர்வலர்களாலும் கல்வியியலாளர் களாலும் அக்கறையுடன் எதிர்பார்க்கப்பட்டது. பல்கலைக் கழக அனுமதியில் பலவித புள்ளிக் குறைப்புகளுக்கு ஆளாக்கப்பட்ட மாணவர்களுக்கு இத் தேசிய கல்வியியற் கல்லூரிகளே ஓரளவுக்கு ஆறுதல் வழங்கி வருகின்றன. எனவே இக் கல்லூரிகளின் ஆசிரிய மாணவர்களும் அவர்களது ஆற்றல்களும் மதிக்கப்பட்டு நெறிப்படுத்தப்படுவது அவசியம். அவர்கள் சாதாரண பாடசாலைகளின் கீழ் வகுப்பு மாணவர்கள் போன்று நடாத்தப்படக் கூடாது. இதற்குரிய பொறுப்பு ஒவ்வொரு தேசிய கல்வியியற் கல்லூரிகளினதும் பீடாதிபதி முதல் விரிவுரை யாளர்கள் வரை இருப்பது அவசியம். ஆனால் அதனைத் தட்டிக் கழித்து நடந்து கொள்ளும் பீடாதிபதிகளையும் விரிவுரையாளர்களையும் தான் காண முடிகின்றது. சில கல்லூரிகளின் பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் மாணவர்களின், பெற்றோர் களின் கருத்துக்களுக்கு செவிமடுத்து நிர்வாகத்தை திறமையுடன் நடாத்தியும் வருகின்றனர். ஆனால் சிலரோ தான்தோன்றித்தனமாக நடந்து தமது சொந்த வக்கிரங்களை வெளிப்படுத்தியும் வருகின்றனர்.

இந்தவகையில் யாழ் -தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியின் செயற்பாடுகள் பற்றியும் அவருக்கு உதவியாக இருந்து வரும் ஒரு சில விரிவுரையாளர்கள் பற்றியும் அங்கு கடமை புரியும் சில காவலாளிகள், சிற்றூழியர்கள் பற்றியும் கடும் புகார்கள் ஆசிரிய மாணவர்கள் தெரிவித்து தமது எதிர்ப்பையும் காட்டியுள்ளனர். இது பற்றி வடபுலத்தின் தினக்குரல் பத்திரிகை விபரமான விடயங்களை ஏற்கனவே வெளியிட்டும் இருந்தது. இவை வெளியில் வந்ததும் அவற்றுக்கு உரிய நிவாரணமோ தீர்வோ முன்வைத்து மாணவர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்குப் பதிலாக பீடாதிபதியும் அவருடன் சேர்ந்தவர்களும் மூடி மறைப்பிலும் அப்படி எதுவும் அங்கு இல்லை என்றவாறும் விடயங்களைத் திரித்தும் மறுத்தும் கொள்வதிலேயே காலத்தை செலவு செய்கின்றனர். சொல்லப்பட்ட விடயங்கள் பற்றி உரிய பதிலோ செயலோ செய்வதற்குப் பதிலாக மேற்படி குட்டுக்களை வெளியே கொண்டுவந்த தினக்குரல் செய்தியாளர் ஒருவரை அச்சுறுத்துவதிலும் மாணவர்களைப் பழிவாங்குவதிலும் பீடாதிபதியும் நிர்வாகமும் மும்முரமாகி நிற்கிறது.

கல்வியியற் கல்லூரிகளில் பொதுவாகப் பின்பற்றப்பட்டு வரும் நடைமுறைகள் கட்டுப்பாடுகள் குறுகிய காலத்தில் உரிய கல்விப் பயிற்சியை வழங்கி சமூகத்திற்கு சிறந்த ஆசிரியர்களைத் தர வேண்டும் என்ற நோக்கிலான தாகும். ஆனால் இதனை சில பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் தமது சர்வாதிகாரத்திற்கானது போன்று நடைமுறைப்படுத்த முற்படும் போதே மாணவர்களுடன் முரண்பாடு தோன்றுகின்றது. அந்தவகையில் கோப்பாயில் அமைந்த தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி மீது மாணவர்கள் சரமாரியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர். ஒரு மாணவன் மிகுந்த கவலையுடன் "இது மாணவர்களை பொறுப்புள்ள ஆசிரியர்களாக உருவாக்கும் கல்வி நிறுவனம் என்று கூறுவதை விட திறந்தவெளிச் சிறைச்சாலை என்று கூறுவதே பொருத்தமானது" எனக் கூறியதைக் கேட்க முடிந்தது. அந்தளவுக்கு அங்கு ஆசிரிய பயிற்சி மாணவ மாணவிகள் நொந்தும் வெந்தும் காணப்படுகின்றனர்.

அங்கிருந்து மாணவர்கள் கீழ்வரும் விடயங்களைப் புதியபூமிக்குத் தந்துள்ளார்கள்.

1. மாணவர்களுக்குச் செல்லும் கடிதங்கள் பீடாதிபதியால் உடைக்கப்பட்டு அவர் முன்னிலையில் பகிரங்கமாக கடிதம் வாசிக்க வேண்டும்.
2. மாணவர்களின் பெற்றோர்கள் எந்த வகையான உணவுப் பண்டங்களும் கொண்டு சென்று மாணவர்களுக்கு கொடுப்பதை அனுமதிப்பதில்லை.
3. மாணவர்கள் (அலுவலகத்) தொலைபேசியில் கதைப்பது ஒட்டுக்கேட்கப்படுகின்றது. குறிப்பாக அங்கு நடைபெறும் அடக்குமுறை பற்றி மாணவி ஒருவர் பெற்றோருக்கு தொலைபேசியில் அறிவித்ததை ஒட்டுக்கேட்ட பீடாதிபதி அம்மாணவியை பகிரங்கமாக மாணவர்கள் முன்னிலையில் நிறுத்தி தண்டித்தமை குறிப்பிடத்தக்கது.
4. மாணவிகளின் விடுதிக்கே இரவு வேளையில் பீடாதிபதி செல்வதுடன் மாணவிகளை அச்சுறுத்தி தனது உணர்வுகளை வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. இதனால் உளரீதியாக பாதிக்கப்பட்ட இரு மாணவிகள் தமக்கு நடந்த அநீதிகளை வெளியில் கூறாது உளவளத்துணை நிலையங்களை நாடிச் சென்றதுடன் கல்வியியற் கல்லூரியிலிருந்தும் விலகியும் உள்ளனர்.
5. இதைவிட காவலர் (கல்லூரி பாதுகாப்பு ஊழியர்) ஒருவர் கல்லூரி அயலில் இடம்பெற்ற பாலியல் விவகாரத்தில் சம்மந்தப்பட்டதால் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டார். ஆனால் அதனை மூடி மறைப்பதற்காக காவலர்களிற்கு பீடாதிபதி பயந்து நடப்பதாக முகிழ்நிலை ஆசிரியர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
6. அத்துடன் தற்போது காவலர்களிற்கும் முகிழ்நிலை ஆசிரியர்களிற்கும் (மாணவர்கள்) இடையில் ஏற்பட்ட முரண்பாட்டினை பீடாதிபதி பெரிதுபடுத்தி விரிவுரைகளை 7 நாட்களாக இடைநிறுத்தியதுடன் மாணவர்களை இலக்கு வைத்து உள உடல் ரீதியாக பாதிப்படையச் செய்தமை குறிப்பிடத்தக்கது. இதனையடுத்து 4ம் அணி முகிழ்நிலை ஆசிரியர்கள் (மாணவர்கள்) எழுப்பிய வினாக்கள் பின்வருமாறு:-



யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதிக்கு இல்லாத அதிகாரம் காவலாளி மணியம் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளதன் காரணம் என்ன? அக்காவலாளி தனக்குரிய சீருடை அணிவதில்லை. சிவில் உடையில் கல்லூரி வளாகத்திற்குள் உலாவி வருவது ஏன்? இதைவிட பெண்கள் விடுதிக் காப்பாளராக இருந்த பெண் ஊழியர் ஏன் இடைநிறுத்தப்பட்டார்? ஏன் இன்னமும் அப்பதவிக்கு வேறொருவர் நியமிக்கப்படவில்லை? பெண்கள் விடுதிக்கு இரவு வேளையில்தான் பீடாதிபதியும் விரிவுரையாளர்களும் சுத்தம் பார்ப்பதற்காக செல்ல வேண்டுமா?

இவ்வாறான சம்பவங்களை மூடி மறைப்பதற்காக பீடாதிபதியும் விரிவுரையாளர்களும் பல முயற்சிகள் எடுத்தும் அவை கைகூடவில்லை. இறுதியில் மாணவர்களுக்கு வழங்கப்படும் நீர் விநியோகத்தை இடைநிறுத்தியதை அடுத்து யாழ் மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறையிடப்பட்டது. அவர்களுடன் பத்திரிகையாளர்களும் சென்றபோது அப்படியான ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்றும் அவர்களை திசை திருப்பும் வகையில் தந்திரமாகச் செயற்பட்டார் பீடாதிபதி. ஆனால் தினக்குரல் பத்திரிகையாளர் ஒருவர் அங்கு நடைபெற்ற அடக்குமுறைகள் பற்றி மாணவர்களின் கருத்துக்களை வெளியில் கொண்டு வந்து கடந்த 23-02-2004ல் யாழ்-தினக்குரல் பத்திரிகையில் வெளியிட்டதை அடுத்து பீடாதிபதி கோபமடைந்து கொண்டார். தனது சர்வாதிகாரத்தனங்களை வெளிப்படுத்திய பத்திரிகையாளரை அச்சுறுத்தும் செயல்களிலும் பீடாதிபதி ஈடுபட்டதுடன் தனது பணபலத்தையும் அதிகாரப் பலத்தையும் பயன்படுத்தி யாழ் தினக்குரல் முகாமையாளரை செல்வாக்கிற்கு உற்படுத்தி இச்செய்தி பிழையென 24ம் திகதி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது என மாணவர்கள் தெரிவித்தனர். 24ம் திகதி காவலர்கள் ஊடாக மாணவர்களிற்கு எதிரான துண்டுப்பிரசுரங்கள் கோப்பாய் வாழ் மக்கள் என்ற பெயரிட்டு அடிக்கப்பட்டு கல்லூரி வளாகத்திற்குள் ஆங்காங்கே போடப்பட்டது. இதனைக் கண்டுபிடித்த மாணவர்கள் இச்சம்பவம் பற்றி மக்களுக்கு தெரிவித்ததை அடுத்து ஊர் மக்கள் ஒன்றுகூடி தமக்கும் இத்துண்டு பிரசுரத்திற்கும் தொடர்பில்லை, ஏன் கோப்பாய் வாழ் மக்கள் என்று கள்ளத் துண்டு பிரசுரம் அடிக்கப்பட்டது என கல்லூரி வாயிலில் போராட்டம் நடத்தினர். அன்றையதினம் மனித உரிமை ஆணைக்குழுவும் விடுதலைப் புலிகளும் இப்பிரச்சினை பற்றி ஆராய்ந்ததுடன் அவசர பெற்றோர் நலன்விரும்பிகள் சங்கக் கூட்டமும் நடைபெற்றது. இதனையடுத்து மாணவர்களிற்கு விரிவுரைகள் நடத்துவதற்கு ஆவன செய்யப்பட்டது. ஆனால் கல்லூரிக்கு அருகாமையில் இருந்த மக்கள் அன்றிரவு பெரும் அச்சுறுத்தலை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது. அதாவது பீடாதிபதியும் உபபீடாதிபதியும் காவலர்களும் போராட்டம் நடத்திய மக்கள் வீடுகளுக்குச் சென்று கடுமையாக எச்சரித்ததுடன் சாதியின் பெயர்களைச் சொல்லி இழிவுபடுத்திப் பேசியமை குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து கிராம சேவகர் மக்களிடம் சென்று பீடாதிபதி "ஒரு தொலைபேசியில் உங்களை இந்த இடத்திலிருந்து எழுப்பிப் போடுவார். நீங்கள் அடிமை குடிமை வேலை செய்கின்றீங்கள். கூலி வேலை செய்யிற உங்களுக்கு கல்வி பற்றித் தெரியுமோ. நாளைக்கு விடியிறதுக்கிடையில எல்லாரும் சென்று அவரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று அச்சுறுத்தினார். இப்படியான ஒரு அவல நிலை யாழ் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு ஏற்பட்டமை கவலை அளிப்பதாக கல்விமான்கள் தெரிவிக்கின்றனர். பத்திரிகைகள் எதிலும் கல்வியியற் கல்லூரி பற்றி செய்தி வெளியிடப்படாது செய்தமை தமது அடாவடித்தன நடவடிக்கைகள் வெளியில் தெரியாதவாறு மூடி மறைக்க பீடாதிபதியும் வேறு சிலரும் முனைந்துள்ளதாகவே மாணவர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்.

தேசிய கல்வியியற் கல்லூரி மக்களின் கல்விச் சொத்தாகும். அது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் பீடாதிபதியினதோ ஏனைய சில விரிவுரையாளர்களினதோ அன்றி பாதுகாப்பு ஊழியர்களினதோ தனிப்பட்ட சொத்தோ சுகங்கள் அனுபவிக்கும் நிலையமோ அல்ல. எனவே மாணவர்களின் குறைப்பாடுகளுக்கு காது கொடுத்து சிறந்த கல்வி நிறுவனமாக யாழ்ப்பாண கல்வியியற் கல்லூரியைக் கட்டி வளர்த்து சமூகத்திற்கு சிறந்த ஆசிரியர்களை வழங்கும் பணி தொடர வேண்டும். தவறுகள் எங்கிருந்து சுட்டிக்காட்டப்பட்டாலும் திருத்தப்பட வேண்டுமே தவிர அதிகாரம், ஆதிக்கம், சாதியத் திமிர், பண அந்தஸ்து போன்றவற்றால் மூடி மறைக்கப்படக் கூடாது.

– யாழில் இருந்து – 'கீரன்'

---

### *மாக்ஸிஸத்தின்..*

முன்பக்க தொடர்ச்சி..

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் கவிழ்ந்து யூஎன்.பி 1965ல் அதிகாரத்துக்கு வருவதற்கு லேக்ஹவுஸ் தேசியமயத்தை எதிர்த்து அவர் பாராளுமன்றத்தில் (ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராக) வாக்களித்து ஒரு முக்கிய பங்கை அளித்தது அவரோடு சேர்ந்து வெளியேறிய பாலா தம்பு ஒரு பூரண தொழிற்சங்க முதலாளியாகி இப்போது தொழிற்சங்கங்கள் அரசியல் பேசக்கூடாது என்று விதிக்கும் ஒரு என்.ஜி.ஓ தரகராகி விட்டார். இவர் தான் 1978ல் ஜே.வி.பிக்குத் தன்னுடன் தொடர்புள்ள த்ரொஸ்க்கிய "நான்காவது அகிலம்" ஒன்றின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுத்தவராவார். ஜே.வி.பி தலைவரான விஜேவீரவும் தன்னை ஒரு த்ரொத்ஸ்கி வாதியாகப் பிரகடனப்படுத்தினார். அந்தளவில் இன்றைய ஜே.வி.பி இலங்கையின் த்ரொத்ஸ்கிய வரலாற்றுக்குக் குறைவில்லாத விதமாகவே நடந்து கொண்டுள்ளது எனலாம்.

த்ரொத்ஸ்கியம் எப்போதுமே நடுத்தரவர்க்க புத்தி ஜீவிகளுக்குக் கவர்ச்சியாகத் தோன்றியுள்ளது. இதற்கு ஒரு முக்கியமான காரணம் த்ரொத்ஸ்வாதிகள் தம்மைப் பாட்டாளி வர்க்கத்தினும் உயர்ந்த நிலையில் வைத்து நோக்கும் அதே வேளை, நடுத்தர வர்க்கத்துக்குப் பசப்பான ஒரு பாட்டாளி வர்க்க அடையாளத்தை வழங்கி, ஒரே காலத்தில், பாட்டாளிக்குப் பாட்டாளியாகவும் பாட்டாளிகளை வென்ற படிப்பாளிகளாகவும் தம்மைக் காட்டிக் கொள்ள இயலுமாவதுமாகும். அரசியல் அனுபவமும் வெகுசன வேலைகள் ஊடாக அரசியல் முதிர்ச்சியும் குறைந்த இளைஞர்கட்குத் தங்களது பகட்டான நடுத்தர வர்க்க வாழக்கைக்கு உறவில்லாத தீவிர இடதுசாரிக் கோஷங்களை உதிர்ப்பதில் ஒரு கிளுகிளுப்பு உண்டு. தங்களது மேதா விலாசத்தைக் காட்டி மற்றவர்களை மட்டந்தட்டுவதும் இந்த நடுத்தர வர்க்கப் புத்தி ஜீவிகட்குப் பிடித்தமானது. மாறாக "மக்களுக்குச் சேவை செய்", "மக்களே வரலாற்றின் உந்து சக்தி" போன்ற கருத்துக்கள் அவர்களைக் கவருவதற்கு அவர்கள் வெகுசன இயக்கங்களில் ஆழமாக ஈடுபட வேண்டும். இலங்கையின் த்ரொஸ்கிய இயக்கத்தலைமை முழுவதும் வசதிபடைத்த குடும்பங்களில் பிறந்தவர்களது கையில் இருந்தது தற்செயலான ஒன்றாக இருக்க முடியாது.

இன்று த்ரொத்ஸ்கியவாதிகள் சர்வதேசமட்டத்தில் மாக்ஸிய ஆய்வாளர்களாகக் கணிசமான செல்வாக்குச் செலுத்துகின்றனர். முதலாளிய ஊடகங்களின் அரை நூற்றாண்டுப் பணியாலும் சோவியத் யூனியனில் க்ருஷ்சேவும் அவருக்குப் பின்பு வந்தோரும் எடுத்த முயற்சிகளாலும், ஸ்தாலினை நிராகரிப்பது பல மேலை நாட்டு இடதுசாரி ஆய்வாளர்கட்கு வழமையாகிவிட்டது. ஆழமான சிந்தனையின்றித் தாம் விரும்பாத எதையுமே ஸ்தாலினியம் என்று முத்திரை குத்தி நசுக்குவது இவர்களிற் பலருக்கு வழக்கமாகி விட்டது. எனினும் இவர்களால் த்ரொத்ஸ்கியத்தை ஒரு புரட்சிகர மார்க்கமாக முன்வைக்க இயலாதுள்ளது. ஏனெனில், த்ரொத்ஸ்கியத்தின் உலக நோக்கு ஏகாதிபத்தியம் பற்றிய மாக்ஸியலெனினிய அணுகுமுறைக்கு முரணானதும் குழப்பமானதுமாகும்.

இதன் விளைவாக ஸ்தாலினுக்கு மாறாக புக்காரின் முதல் கொர்பச்சொவ் வரையிலானவர்களை உயர்த்திப் பிடிப்பதில் அவர்கள் முனைப்பாக உள்ளனர். மாஓ சேதுங் சிந்தனையும் மக்கள் யுத்தம், வெகுசனப் பாதை போன்ற கோட்பாடுகளும் அவர்கட்குப் பிடிப்பதில்லை. மாஓவைப் பற்றிப் பேசுவதை அவர்கள் தவிர்க்கிறார்கள்.

கருங்கச் சொன்னால், ஸ்தாலின் மீதான வெறுப்பை மையமாகக் கொண்ட சிறுமுதலாளியச் சிந்தனைப் போக்கு ஒன்று பழைய த்ரொத்ஸ்கியத்தின் இடத்தைப் பிடித்துள்ளது. எனவே இடதுசாரி இயக்கத்தினுள் உள்ள விவாதம், ஸ்தாலினியமும் த்ரொத்ஸ்கியமும் பற்றியதல்ல. ஆக்கமான மாக்ஸிய லெனினிய அணுகுமுறைக்கும் பல்வேறு வரட்டுச் சிந்தனைகட்கும் இடையிலான முரண்பாடே இன்றைய இடதுசாரி இயக்கத்தில் முக்கியமாகக் காணப்படுகின்றது.

– **இமயவரம்பன்**–

ஆசிரியர் குறிப்பு : இதுவரை மாக்சிசத்தின் போதாமைகள் என்னும் தலைப்பில் வெளிவந்த இக் கட்டுரைத் தொடர் இத்துடன் முற்றுப் பெறுகின்றது. இவை விரைவில் நூல் வடிவம் பெற இருப்பதால் இக்கட்டுரைகள் பற்றிய ஆக்கபூர்வமான கருத்துக்களை இக்கட்டுரை ஆசிரியர் கோருகின்றார். பயனுள்ள கருத்துக்களும் ஆலோசனைகளும் நூலில் சேர்த்துக் கொள்ளப்படும்.

---

## அரசியல் மாணவர்களுக்கான பத்து வினா-விடை

1. ஒரு "ஜனநாயக" நாட்டில் அதியுயர் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் நடாத்தப்படும் வருடாந்த விழா எது?
   சுதந்திர தினம்
2. ஒரு "ஜனநாயக" நாட்டில் அதிக வன்முறைச் சம்பவங்கள் பதியப்படும் காலம் எது?
   தேர்தல் காலம்
3. ஒரு ஜனநாயக நாட்டில் அரசாங்க விடுமுறை நாள் ஒன்றில் நீதிமன்றம் செயற்படும் (விசேட) சந்தர்ப்பம் எது?
   ஊழல் மோசடித் துறையின் பெரும் புள்ளி ஒருவர் கைது செய்யப்படும் போது.
4. ஒரு ஜனநாயக நாட்டில் ஊழல் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் பிரதான செயற்பாடு என்ன?
   ஊழல் குற்றவாளிகளிடம் இலஞ்சம் பெற்று அவர்களை நிரபராதிகளாகக் காட்டுதல்.
5. ஒரு ஜனநாயக நாட்டில் "தோல் உரிப்பது" பற்றி பகிரங்கமாக அறிவிக்க வல்லவர் யார்?
   அதி மேதகு ஜனாதிபதி
6. ஒரு ஜனநாயக நாட்டில் "கட்சி பேதம் இன்மை" என்ற சொல்லின் பதம் ?
   இனவாதக் கட்சிகள் ஓர் அணியில் சேருதல்
7. ஒரு ஜனநாயக நாட்டில் "கூட்டணி" என்பதன் விளக்கம்?
   பரஸ்பர துரோகிகள் விரோதிகள் பொது இணக்கப்பாட்டில் (தேர்தல் நோக்கி) ஒன்றுபடல்.
8. ஒரு ஜனநாயக நாட்டில் நீதி மன்றங்களின் அமைவிடம் எவ்வாறு அமைய வேண்டும்?
   சிறைச்சாலைகளுக்குள்
9. "ஒரு ஜனநாயக நாட்டில் ஊடக சுதந்திரத்தின் உயிர் நாடி" என்று குறிப்பிடப்படுவோர் யார்?
   பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்
10. ஒரு ஜனநாயக நாட்டில் பொருளாதார வளர்ச்சியைத் தீர்மானிப்பது எது?
    அமைச்சர்களுக்குக் கிடைக்கும் கொமிஷனின் அளவு.

படிப்பகம்

www.padippakam.com



# பேராசிரியருக்கு என்ன கூறுகிறார்?

ஈழத்தின் இலக்கியப் பிரமுகர்களால் தற்பொழுது வெளியிடப்படும் இலக்கியக் கருத்துகள், இலக்கிய அபிமானிகளைத் தடுமாற வைத்து விசனப்படுத்துகின்றன.

ஈழத்து முற்போக்கு அணியின் கால்களில் ஒன்றாகவிருந்த பேராசிரியர் கா.சிவத்தம்பி சஞ்சிகையொன்றிற்கு வழங்கிய நேர்காணலில் இப்படிக் கூறி இருக்கிறார்.

"எங்களுடைய குழுவில் யாராவது ஒருவர் கதை எழுதினால், அவர் அந்தக் கதையை வாசிப்பார். கதை பிரசுரமாக இருக்காது அந்தக் கதையை எல்லோரும் சேர்ந்து கலந்துரையாடு வார்கள். பிறகு எழுதியவர் திருத்த அனுப்புவார்".

இக் கூற்றின்படி அன்றைய முற்போக்குப் படைப்பாளர்களின் படைப் புக்கள் அவரவரது சொந்த ஆக்கமா காது ஓர் கூட்டுமுயற்சி என்றே கருத முடிகின்றது. முற்போக்கின் பிதாமகர்களிலொருவரான பேராசிரியரே இப்படிச் சொல்லும் பொழுது வேறெப்படி எண்ண முடியும். முற் போக்கின் ஊற்றுக்கண்ணாகவும் இருந்தவர் பேராசிரியரல்லவா! "பொன்னுத் துரை யின் விஷயத்தில் கூட பொன்னுத்துரை தான் விரும்பியது போல எழுதுவதற்கு நாங்கள் தடையாக இருக்கவில்லை". ஏனைய படைப்பாளிகளின் படைப்புகள் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டன என்கிறார். எஸ்.பொவுக்கு மட்டும் ஏன் இந்தச் சலுகை! அவர் பொன் முட்டை தரும் வாத்தா! மற்றவர்கள் வெறும் பயிலுநர்களா?

"டானியல், ஜீவா இவர்களுடன் பொன்னுத்துரைக்கு உறவு இருந்தது. தங்களுடைய இலக்கியங்களை எழுத்துக்களை இவர்கள் பொன்னுத் துரையுடன் னுளைஉரளள பண்ணு வார்கள். அதில் ஏதாவது பிழையென்று சொன்னால் திருத்துவார்கள்" இப்படியும் பேராசிரியர் கூறுகிறார்.

அடிக்கடி எஸ். பொ. மேற்படி இரு முற்போக்கு இலக்கியப் படைப்பாளி களுக்குத் தான் "குதிரை ஓடியதாக" மேடைகளிலும், எழுத்திலும் பதிவுகளை ஏற்படுத்தி இருப்பது இலக்கிய உலகிற்குச் சொல்ல மறந்த கதையா காது! அதுவொரு கல் வெட்டாகி விட்டது. இந்த நிலைமையில் பேராசிரியர் இந்த விடயத்தைக் கவன ஈர்ப்புச் செய்திருப்பது சம்பந்தப்பட்ட படைப்பாளிகளின் ஆக்க வல்லமையை மறுபரிசீலனைக்கு உட்படுத்துவதாக அமைகின்றது. அதுமட்டுமன்றி எஸ்.பொவினதும் சம்பந்தப்பட்ட இரு எழுத்தாளர்களதும் உறவுகளை இன்றைய இளைய தலைமுறை அசுசையுடன் நோக்குவதற்கும் உதவு கின்றது. அவர்களது படைப்புகளும் ஆளுமையை இழக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றது. இந்தப் பாரதூரமான இலக்கிய விடயம் குறித்து சம்பந்தப் பட்டவர்கள் தங்களது நோன்பைக் கலைக்காதவரை பேராசிரியரையும், எஸ். பொவையுந் தான் இளைய தலை முறையும், இலக்கிய நோக்கர்களும் நம்புவார்கள். தமக்கு புகழ் மேலோங்கி விட்டது. அந்தப் புகைச்சலில் தான் சேறைப்பூச விளைகின்றனர் எனச் சம்பந்தப்பட்ட எழுத்தாளர்கள் கூறுவது ஏற்க முடியாத தொன்றாகும்".

அமரர் எஸ் அகஸ்தியர் நாடறிந்த எழுத்தாளர் தடித்த முற்போக்காளர். அவரொரு ளுவலடளைவ எனவும் ஆயவவநச தான் முக்கியமெனவும் பேராசிரியர் தான் அகஸ்தியரை முன்னுக்குத் தள்ளாததற்கு இதுவே காரணமெனவும் பிரகடனப்படுத்துகிறார். "நீ " என்று ஏதோ எழுதினாரெனவும் அகஸ்தியரின் உணர்வூற்றுச் சித்திரங்களைக் கொச்சைப்படுத்து கிறார். முற்போக்கு முகாமைச் சேர்ந்த ஏனைய எழுத்தாளர்களது படைப்பு களை முற்போக்குப் புத்திசீவிகள் "குற்றம் குறை" பார்த்தது போல அகஸ்தியரின் ஆக்கங்களையும் பரிசீலனைக்கு உட்படுத்தி இருக்க லாமே! ஏன் தவிர்க்கப்பட்டது? இதே அணுகுமுறை அகஸ்தியரின் படைப்பு களுக்கு மிகுந்திருப்பின், மேலோங்க நின்ற ளுவலடளைவ தன்மையை அகஸ்தியர் திருத்தி இருப்பாரே." அப்படி அவர் உடன்படாதிருப்பின் எஸ்.பொவு க்கு எடுத்த நடவடிக்கையை இவருக் கும் எடுத்திருக்கலாமே. இந்த வகையில் அகஸ்தியர் முற்போக்கு எழுத்தாளர் அணிக்குள் தத்துப்பிள்ளையாக இருந்துள்ளாரென்பதை பேராசிரியர் நிறுவி இருக்கிறார். இருந்தும் முற்போக் குச் சிந்தனையாளர்கள் அகஸ்தியரைத் தீவிர முற்போக்காளராகவே கருது கின்றனர்.

பேராசிரியரின் தற்போதைய இலக்கிய கோட்பாடுகள் மாற்றங்கண்டிருந்தாலும், ஏற்கனவே தான் இருந்த முகாமைச் கொச்சைப்படுத்தும் வகையில் முரண்பட்ட கருத்துகளை வெளிப் படுத்துவது இலக்கிய வரலாற்றை ஆராயும் இன்றைய தலைமுறைக்கு பெருத்த சிரமத்தை ஏற்படுத்து மென்பதை தாழ்மையோடு நினைவு படுத்த வேண்டியுள்ளது.

கொழும்பு
மா. பாலசிங்கம்

## புரிந்தும் புரியாதும் புரிந்தன

ஒருவர் மற்றவரை எப்போதோ எப்படியோ ஏய்ப்பர்
என்பது புரிந்தும்
அவர் இவரையும் இவர் அவரையும் எப்போது எப்படி
என்பது புரியாமலும்
உடன்பட்ட எதுவுமே உண்மையில் உடன்பாடான தல்ல
என்பது புரிந்தும்
உடன்பாடான உடன்படிக்கையில் உள்ளடங்கியுள்ளது
என்பது புரியாமலும்
பாம்பின் கால் பாம்பறியும்
என்பது புரிந்தும்
எந்தப் புற்றில் எந்தப்பாம்பு இருக்கிறது
என்பது புரியாமலும்
புரிந்துணர்வு உடன்படிக்கைகள் புரியப்படுகின்றன.

புரிந்தவற்றைப் புரியாதன போலும்
புரியாதனவற்றைப் புரிந்தன போலும்
ஒருவர் மற்றவருக்குத் தோற்றங் காட்டுவது
மற்றவருக்குப் புரியும் என்பது புரிந்தும்
ஒரு வேளை புரியாமலிருக்கலாம் என்ற எதிர்பார்ப்புடன்
புரிந்த உடன்படைக்கைகள் எதையுமே புரியாது
என்பது எல்லாருக்கும் புரியும் என்றளவில்
புரிந்துணர்வு உடன்படிக்கைகள்
முழுமையான புரிந்துணர்வுடனேயே புரியவும்
புரிந்து கொள்ளவும் படுகின்றன.

- பிரதேசிப் பாவாணர் -

## வாழ்வின் சாரம்

எது நடந்ததோ அது அநியாயமாகவே நடந்தது
(ஏனெனில் உலகை நடத்தியது ஆண்ட கருத்தியல்)
எது நடக்கிறதோ அது அநியாயமாகவே நடக்கிறது
(ஏனெனில் உலகை நடத்துவது ஆண்ட பரம்பரை)
எது நடக்க இருக்கிறதோ அதுவும் அநியாயமாகவே நடக்கும்
(ஏனெனில் உழைப்பாளியாகிய நீ அக்கறையற்றிருக்கிறாய்)
உன்னுடைய சிந்தனையை இழந்தாய் அதற்காக நீ அழுகிறாய்
உலகம் உன்னை உருவாக்கியது அதனை நீ இழக்கலாமா?
புதிய உலகை நீ படைப்பாய் அதை வீணாக்குவாயா?
உலகு எல்லோருக்குமென்பதால் அது உனக்குமானது
அதை எவரும் கொடுக்கவும் முடியாது வாங்கவும் முடியாது
அது இன்று உன்னுடையது நாளை மற்றொரு உழைப்பாளிக்குரியது
மற்றொருநாள் அது வேறொரு உழைப்பாளிக்குரியதாகிறது
எனவே உலகைக் காப்பது உனது வாழ்வாகிறது
இதுவே உலக நியதியும் மக்கள் படைப்பின் சாரமும் ஆகும்

- ஈழத்துத் தேவன் பூதனார்-

### மலையக மக்களின்

1ம் பக்க தொடர்ச்சி..

அவர் தோட்டத்தொழிலாளர்களையும் மறந்து மலையகத்தமிழ் மக்களையும் மறந்து பெரும் முதலாளிகளையும் கோடீஸ்வரர்களையும் திருப்திபடுத்துபவ ராக மாறிவிட்டார். அதனால் இப்போ தெல்லாம் அவர் மலையகத்தமிழ் மக்கள் என்று உச்சரிப்பதை விட இந்திய வம்சா வளி தமிழர் என்றே உச்சரிக்கிறார்.

எனவே மலையகத்தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவன்றி சொந்த இருப்பிற்காகவே ஆறுமுகனும் சந்திர சேகரமும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர் பெரிய அரசியல் கட்சிகளின் தயவில் வேண்டியவர்க ளோகவே மலையகத்தமிழ் மக்களை தள்ளி இருக்கிறார்கள்.

எனவே அவர்கள் இருவருமே மலையகத்தமிழ் மக்களுக்கு சரியான அரசியல் தலைமை கொடுக்க முடியாத அண்ணனும் தம்பியும் தான்

எதிர்வரும் தேர்தலில் ஐ.தே.கட்சிக்கு உதவ முன்வந்துள்ள சகோதரர்கள்.

மக்களின் உரிமைகளை வென்றெடுக்க பேரப்பேச்சு சரியான அரசியல் வழிமுறை ஆகாது மக்கள் போரதட்டப் பாதை கடினமான தென்றாலும் அதுவே சரியான வழி முறை ஆகும் அதனை இந்து இரண்டும் பேராலும் செய்ய முடியாது.

### பொதுத் தேர்தலில்

1ம் பக்க தொடர்ச்சி....

உயர்வர்க்கத்தினரின் சொத்து சுகபோக திரையாகவே பாராளுமன்ற ஜனநாயக மும் அதற்கான தேர்தல்களும் இருந்து வருகின்றன. இந்தத் திரைகள் கிழித்தெறியப்பட்டு அதன் மறைவில் உள்ள அநீதிகள், அட்டூழியங்கள் சமூக நீதி மறுப்புக்கள், மக்கள் விரோத செயற்பாடுகள் ஒவ்வொன்றும் அம்பலப் படுத்தப்பட்டு மக்களால் அழித்தொழிக்கப் படாத வரை இலங்கை நாட்டுக்கும் மக்களுக்கும் மீட்சிவரப் போவதில்லை.

இந்த அப்பட்டமான உண்மைக்குப் பதிலாக இந்தப் பாராளுமன்ற ஜனநாயகத்தின் மூலம் அல்லது பொதுத் தேர்தலில் நல்லவர்களைத் தெரிவு செய்வதன் ஊடாக மக்களுக்கும் அவர்களது பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டு கொள்ள முடியும் என நம்பச் செய்வதை விட அரசியல் அறிவீலித் தனம் முட்டாள்தனம் வேறெதுவுமாக இருக்க முடியாது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சி அமைத்து அதிகாரம் செலுத்தும் இரண்டு ஆளும் வர்க்க கட்சிகளில் ஏதாவது ஒன்று நாம் மேலே கேட்டுள்ள கேள்விகளுக்கு உரியவாறு பதில் கூறி நேர்மையுடனும் துணிவுடனும் அவற்றைச் செயற் படுத்துமா? அதற்கான கொள்கையும் வேலைத்திட்டமும் அவர்களிடம் உள நிறைந்து காணப்படுகின்றதா? அத்தகைய கட்சிகளுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் முண்டு கொடுத்துத் தள்ளி நிற்கும் தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழ் கட்சிகள் மேற்படி பத்து வினாக் களுக்குமுரிய பதிலை மக்களுக்கு தேர்தல் வாக்குறுதியாக முன்னிலைப் படுத்தத் தயாரா? உண்மையாகவும் நெஞ்சுக்கு நேர்மையாகவும் அவற்றுக் குரிய பதில்களை இப்பாராளுமன்றக் கட்சிகளால் வழங்க முடியாது. ஏனெனில் அவை இந்நாட்டினதும் ஏகப் பெரும்பான்மை மக்களினதும் அடிப்படைப் பிரச்சினைகளோடும் அபிலாஷைகளோடும் இணைந்தவைக ளாகும்.

மக்களின் பிரச்சினைகளைக் காட்டி அவற்றுக்கு உரிய பரிகாரங்களை தேடி கொள்கையில் மக்கள் ஜனநாயக ரீதியில் இப்பாராளுமன்றத் தேர்தல்கள் இடம்பெறுவதில்லை. இது முற்றிலும் முதலாளித்துவப் பாராளுமன்ற அமைப்பு முறைத் தேர்தலாகும். இங்கே மக்களை ஏமாற்றி வாக்குகள் பெறும் வழி முறைகளே முன் நிற்கின்றன. பணத்தை அள்ளி இறைப்பதும் இன மொழி மத பிரதேச வேறுபாடுகளை உணர்ச்சி பொங்கவைப்பதும் அந்தஸ்து ஊர் சாதி நிலைநின்று வாக்குகள் பெறுவதும் கள்ள வாக்குகளைத் தயார் படுத்துவதும் மக்களது அரசியல் அறியா மையைப் பயன்படுத்தி மது பானங் களல் மயங்கச் செய்து குறுக்கு வழியில் வாக்குவேட்டையில் ஈடுபடுவதுமே இத் தேர்தலின் பிரதான போக்காகும்.

இந்நிலையிலேயே இப் பொதுத் தேர்தலில் யார் வென்றாலும் மக்கள் என்ற பதத்திற்குள் வரக்கூடிய ஏகப் பெரும்பான்மையான சிங்கள தமிழ் முஸ்லிம் மலையகத் தமிழ் உழைக்கும் மக்களுக்கோ ஏனைய பறங்கிய, மலே, வேடுவ சமூக மக்களுக்கோ எதுவுமே கிடைக்கப் போவதில்லை. ஆண்ட பரம்பரையினரும் அவர்களுக்கு ஒத்தூதுவர்களும் மீண்டும் ஆட்சி அதிகாரத்திற்கும் பாராளுமன்றப் பதவிகளுக்கும் வந்து கொள்வதற்கான ஒரு தேர்தலே எதிர்வரும் பதின்மூன்றா வது பாராளுமன்றத் தேர்தலுக்கும் இந்த உண்மையை மக்கள் நலன் நாடும் சமூக அக்கறையுள்ள அனைவரும் குறிப்பாக இளம் தலை முறையினரும் அரசியல் அடிப்படையில் சிந்தித்து தெரிந்து கொள்வது தேர்தல் காலத்து அரசியல் படிப்பாகும். அதுவே எதிர்காலத்திற்குத் தேவையானதுமாகும்.

### கல்வியும் சமூக......

6ம் பக்க தொடர்ச்சி

நீங்கற் சான்றிதழ் (ஜே.எஸ்.எல்.சி) பெற்றோரின் தொகை இன்று பட்டப்படிப்புப் பெற்றவர்களது தொகையில் ஒரு அற்பப் பின்னமே. அரசாங்கத்தில் எழுதுவினைஞராகத் தொழில் பெறப் போதிய தகுதியாக அது இருந்தது. காலப் போக்கில் கல்விப் பரவலாக்கம் இத்தகுதி பெற்றோரது எண்ணிக்கையை விரிவுபடுத்தியதனால் குறைந்த பட்சத் தகுதி சிரேஷ்ட பாடசாலை நீங்கற் சான்றிதழ் (எஸ்.எஸ்.எல்.சி) என்கிற பத்தாவது வகுப்புப் படிப்பாக உயர்ந்தது.

இவ்வாறான நகர் சார்ந்த கல்வி விருத்தி ஒருபுறமிருக்க, கிராமங்களின் கல்வியில் மக்களுக்கு அன்றைய நவீன கல்வி மறுக்கப்பட்டது உண்மை. ஆயினும் மரபு சார்ந்த கல்விக்கான வாய்ப்புக்கள், சமூக ஏற்றத்தாழ்வுகட்கும் கட்டுப்பாடுகட்கும் உட்பட்டு, கிராமங்களிற் கிடைக்கப் பெற்றன.

அதேவேளை, இந்தியாவிலிருந்து தோட்டங்களில் வேலை செய்வதற்காகக் கொண்டு வரப்பட்ட மக்களுடைய கல்வி வளர்ச்சியில் கொலனிய நிர்வாகம் மிகக் குறைவான அக்கறையையே காட்டியது. ஏனெனில் இந்த உழைக்கும் மக்களுக்குத் தங்கள் வேலையை ஒழுங்காகவும் எசமான்கட்குக் கீழ்ப்பட்டும் செய்வதற்கு மேலாகக் கல்வி தேவைப்படவில்லை என்பது கொலனியவாதிகளது கருத்தும் தோட்ட முதலாளிகளது கருத்துமாகும். பிற்காலக் கல்விச் சீர்திருத்தங்களின் போது கூட, எழுத வாசிக்கத் தெரிவதற்கு மேலாகத் தோட்டத் தொழிலாளர்களது பிள்ளைகட்கு எந்தவிதமான கல்வியும் தேவையில்லை என்ற மனோபாவம் எசமான்களிடம் மட்டுமன்றி, அவர்களது பாடசாலைகளில் வேலைக்கு அமர்த்தப்பட்ட ஆசிரியர்களிடமும் காணப்பட்டது.

இலவசக் கல்வி முறை அறிமுகமாகும் வரை, பெருமளவுக்கும் சமுதாயத்தின் வர்க்க ஏற்றத்தாழ்வுகள் கல்வித் தகுதியிலும் வெளிப்படும் விதமாகவே இலங்கையின் கல்விமுறை அமைந்திருந்தது.

### மத மாற்றத்.....

7ம் பக்க தொடர்ச்சி..

தேடுகிற முயற்சி அல்லாமல் வேறல்ல.

எழுச்சி பெற்றுவரும் பௌத்த சிங்கள நவ.ஃபாஸிஸப் போக்குக்கட்கு முகங் கொடுக்கத் துணிவின்றிக் கத்தோலிக் கத் திருச்சபையும் இந்த மதமாற்றத் தடைச்சட்ட ஆலோசனையை ஆதரிக்கிறது. இது நேர்மையான ஆதரவு என்றால் இலங்கையில் தாங்கள் மதம் மாற்றிய அனைவரையும் தமது பழைய மதங்கட்குத் திரும்பும் படி கூறத் திருச்சபை முன்வருமா? இவ்வாறான கோழைத்தனம் ஃபாஸிஸ வாதிகட்கு மேலும் வலுவூட்டுமேயொழிய மதங்களி டையே நல்லிணக்கத்தை வளர்க்க உதவாது என்பதை அண்மை க்காலங்களில் கிறிஸ்துவ தேவாலயங் கள் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல்கள் உணர்த்துகின்றன.

எனவே, மதமாற்றத்துக்கான தனிமனித உரிமையைச் சட்டமிட்டுத் தடுப்பது தவறானது மட்டுமல்ல, பயனற்றதுங் கூட. எந்தச் சட்டத்தாலும் மோசடிகளை நிறுத்த முடியாது. மதம் மாறிய ஒருவர் அதை வெளிவெளியாக அறிவிக்காமலே தனது புதிய மதத்தைக் கடைப்பிடிக்க லாம். ஒரு பௌத்தரோ சைவரோ கிறிஸ்துவ தேவாலயத்துக்குப் போகக் கூடாது என்றும் சட்டமியற்ற முடியுமா?.

ஒருவர் மதம் மாறிவிட்டார் என்பதை அவரே ஒப்புக்கொள்ளாத வரை எவராலும் நிரூபிக்க இயலுமா? மதமாற்றத் தடைச்சட்டம் என்பது ஒரு ஏமாற்று வேலை. அது தீர்க்க முயலு கிறதாகக் கூறப்படும் பிரச்சினையைச் சட்டம் இயற்றித் தீர்க்க முடியாது. மதங்களின் பேராலும் மூடநம்பிக்கை களைப் பயன்படுத்தியும் மக்களை ஏய்க்கும் முயற்சிகளையும் மக்களது இயலாமை யைப் பயன்படுத்தி மதம் மாற்றும் முயற்சிகளையும் மக்கள் வெளிவெளி யாகப் பேசி விவாதித்து விமர்சிப்பதன் மூலமே தடுத்து நிறுத்த முடியும்.

சோதிடர்களைக் கலந்தாலோசித்தே முக்கியமான அரசியல் முடிவுகளை எடுக்கிற தலைவர்களால் வழிநடத்தப் படும் ஒரு நாட்டில், மக்களைத் தவறாக வழிநடத்துவதிலே முனைப்பாக உள்ள ஊடகங்கள் ஆதிக்கம் செலுத்தும் ஒரு சூழலில் அது இலகுவானதல்ல. ஆயினும் அதைவிடச் சனநாயகமானதும் நீண்டகால நன்மை தருவதுமான வழியேதும் இல்லை.

படிப்பகம்

www.padippakam.com



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
# புதிய பூமி
Puthiya Poomi
சுற்று 11 மார்சி 2004 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 67

தேர்தலை பகிஷ்கரிக்கக்கோரி யாழ் குடாநாட்டில் நடைபெற்ற புதிய ஜனநாயக கட்சியின் பத்திரிகையாளர் மாநாட்டில் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வடபிராந்திய செயலாளர் கா.கதிர்காமநாதன் மத்திய குழு உறுப்பினர் க.தணிகாசலம் ஆகியோரை படத்தில் காணலாம்.




## சோம தேரரின் மரணத்திற்கு விசாரணை

# ரோஹன விஜேவீரவின் படுகொலைக்கு?

பௌத்தமத அடிப்படைவாதியான கங்கொடவில சோமதேரோவின் மரணம் பற்றி ஆராய்வதற்கு ஜனாதிபதி விசாரணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி சந்திரிகா அக்குழுவை நியமித்துள்ளார்.

அவரது மரணம் மாரடைப்பினால் திடீரென நிகழ்ந்ததாக ரஷ்யா நாட்டு பரிசோதனை முடிவுகளும் இலங்கையில் மரணவிசாரணை நடத்திய நீதவானின் கட்டளையும் தெளிவுபடுத்தியுள்ளன.

அவர் ரஷ்யாவுக்கு சென்றிருந்த வேளையில் மயங்கி விழுந்தார். அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டிருந்தால் அடுத்தடுத்து இரண்டு முறை இருதய சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப் பட்டன. அதன் பின் அவர் மரணமானார்.

எனினும் அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று தீவிர பௌத்தமத வாதிகளும் அடிப்படை வாதிகளும் கூறிவந்தனர். அது பற்றி ஆராய விசாரணை குழுவை நியமிக்கும்படி ஜனாதிபதியிடம் கேட்டு வந்தனர்.

ஹெல உறுமய கட்சியில் போட்டியிடும் பௌத்த பிக்குகள் சோமதேரோவின் மரணம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வந்தனர்.

தேர்தல் காலம் என்பதால் அக்கோரிக்கையை ஜனாபதி நிறைவேற்றியுள்ளார் என்பதையும் விட பௌத்த மத அடிப்படை வாதிகளின் அழுத்தத்திற்கு அடிபணிந்துவிட்டார் என்பதே சரியானதாகும்.

ஆனால் பொலிஸ் கட்டுக்காவலில் இருந்த ஜே.வி.பியின் ஸ்தாபக தலைவரான ரோஹன விஜேவீர படுகொலை செய்யப்பட்டதற்கு சாதாரண விசாரணைகள் கூட நடத்தப்படவில்லை. அது பற்றிய விசாரணைகளை நடத்தும்படி தற்போதைய ஜே.வி.பி தலைவர்கள் சில வருடங்களுக்கு முன்பு கோரிக்கை விடுத்தபோதும் தற்போது அது பற்றி கவலைப்படுவதாக தெரியவில்லை. அவர்களுக்கு தற்போது தேவையானதெல்லாம் சுதந்திரக்கட்சியுடன் சேர்ந்து எப்படியாவது ஆட்சியதிகாரத்தை கைப்பற்றி விடவேண்டும் என்பது தான். அதனால் ரோஹன விஜேவீரவின் படுகொலை பற்றிய விசாரணைகள் மேற்கொள்ளும்படி கோரிக்கை விடுத்து ஜனாதிபதி சந்திரிகாவுடனான உறவில் விரிசலை ஏற்படுத்திக் கொள்ள அவர்கள் விரும்பவில்லை. அப்படி கோரிக்கை விடுத்தாலும் ஜனாதிபதி சந்திரிகா செய்யப் போவதுமில்லை.

எவ்வளவு தான் கொள்கை, நடைமுறை முரண்பாடுகளும் வித்தியாசங்களும் இருந்த போதும் அரசியல் கைதிகளை மட்டுமல்ல சாதாரண கைதிகளை கூட படுகொலை செய்வதற்கு பொலிஸாருக்கோ இராணுவத்தினருக்கோ எவ்வித அதிகாரமும் இல்லை.

ஐ.தே.கட்சி ஆட்சிக்காலத்தில் பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்த போது கைது செய்யப்பட்டு பொலிஸ் காவலில் இருக்கும் போது ரோஹனவிஜேவீர படுகொலை செய்யப்பட்டார். அவரது படுகொலை பற்றிய விசாரணைகளை கூட செய்துகொள்ள முடியாத ஜே.வி.பி தலைவர்கள் ஜனாதிபதி சந்திரிகாவுடன் இணைந்தென்ன பிரயோசனம்.?

ஆனால் அவர்கள் சோமதேரோவின் மரணம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும்படி கோரிக்கை விடுத்து வந்தனர். அது பற்றி ஆராய்வதற்காக விசாரணைக்குழு நியமிக்கப்பட்டமை அவர்களுக்கு மிகழ்வை கொடுத்திருக்கும் அதெல்லாம் வாக்குகளை பெறுவதற்கான மிகவும் மலினமான வழிமுறைகள் தான்.

வாக்குகளுக்காக அரசியல் நடத்த தொடங்கிவிட்டால் கொள்கையாவது கோட்பாடாவது ஸ்தாபக தலைவராவது தற்போதைய தலைவராவது எல்லாம் வாக்குகளின் பெயரால் மறக்கப்படும்.

# பேரினவாத கட்சிகளுக்கு பின்னால் இழுபடும் முஸ்லிம் தலைமைகள்

விருப்புரிமை வாக்குகள் காரணமாகவே முஸ்லிம் காங்கிரசிற்குள் முதலாவது பிளவு ஏற்பட்டதாக அக்கட்சியின் தலைவர்களே பகிரங்கமாக கூறிவருகின்றனர். காலஞ்சென்ற அஷ்ரப்பிற்கும் சேகுஸ்சைதினுக்கும் ஏற்பட்ட பிளவை விருப்புரிமை வாக்குகளினால் ஏற்பட்ட பிளவு என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கிம் அம்பாறை (திகாமடுல்ல) மாவட்டத்தில் போட்டியிடுகிறார். அவரை தலைமையாகக் கொண்ட பட்டியலில் போட்டியிடும் ஏனைய முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்கள் அவர்களுக்கு மட்டுமே தனித்தனியாக விருப்புரிமை வாக்குகளை தேடும் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். அதனால் ரவூப் ஹக்கீம் மனம் நொந்து போயுள்ளார்.

இது ஒரு புறமிருக்க ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பட்டியலில் போட்டியிடும் அத்தாவுல்லா தலைமையிலான தேசிய முஸ்லிம் காங்கிரஸ் அணியினர் அந்த முன்னணியின் பட்டியலில் போட்டியிடும் ஜனாபா அஷ்ரப்பின் தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணியின் வேட்பாளர்களை கடுமையாக சாடி பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர். ஒரே பட்டியலில் போட்டியிட்டாலும் விருப்புரிமை வாக்குகளை பெறுவதற்கு அவ்வாறான பிரசாரங்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதைவிட ஐ. தே. கட்சியின் பட்டியலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலும் முஸ்லிம் அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர். அவர்களிடையேயும் போட்டி நிலவுகிறது.

இந்த பொதுவான போக்கிற்கு அப்பால் முஸ்லிம் மக்களுடைய தேசிய அபிலாஷைகள் பற்றி அக்கறை கொண்டிருந்த முஸ்லிம் பிரமுகர்களுடன் குழுக்களும் எதிர்வரும் தேர்தலில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஐ.தே. கட்சியை அல்லது ஐ.ம.சு முன்னணியை ஆதரிப்பனவாகவே இருக்கின்றன.

விருப்புரிமை வாக்குகளுக்காக முஸ்லிம் வேட்பாளர்கள் மட்டுமன்றி தமிழ், சிங்கள வேட்பாளர்களும் போட்டியிட்டுக் கொள்கின்றனர்.

அடக்கப்படும் தமிழ், மலையகத்தமிழ்த் தேசிய இனங்களிடையே தலைவர்கள் எனப்பட்டவர்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஐ.தே.கட்சியை அல்லது ம.ஐ.சு. முன்னணியை ஆதரிக்கின்றனர்.

முஸ்லிம் தலைவர்கள் என்போரும் அதையே செய்கின்றனர்.

தமிழ் முஸ்லிம் தலைமைகள் எவ்வளவு தான் தங்களுக்கு அடிபட்டுக் கொண்டாலும் இரண்டு பேரினவாத முதலாளித்துவக் கட்சிகளை ஆதரிப்பதிலும் அவற்றிற்கு பின்னால் தமிழ், முஸ்லிம் மக்களை இழுத்துச் செல்வதிலும் ஒற்றுமையுடனேயே செயற்படுகின்றனர்.

# காசைக் கொடுத்தும் பாணைப் பெறுவோமா?

பாண் இன்று இலங்கை மக்களின் அன்றாட உணவாக மாறிவிட்டது. பேக்கரி உரிமையாளர்கள் பாண் நிறையைக் குறைத்துக் கொள்ளை லாபமடிக்கிறார்கள். ஏழைகள் வயிற்றில் அடிக்கிறார்கள். ஒரு இறாத்தல் என்பது சொல்லப்படும் பாணின் நிறை 450 கிறாம் இருக்க வேண்டும். ஆனால் ஒரு இறாத்தலின் நிறையோ 300 அல்லது 350 கிராம் தான் இருக்கிறது. இரண்டு இறாத்தல் (900மீற்றார்)வாங்க வேண்டியவர்கள் ஒரு இறாத்தல் கூடுதலாக வாங்க வேண்டியுள்ளது. ஒரு இறாத்தலுக்கு (450கிராம்) 6.50சதம் கூடுதலாக கொடுக்க வேண்டியுள்ளது. இந்தப் பகல் கொள்ளையை கேட்பதற்கு யாரும் இல்லையா?

இது மாத்திரமல்ல சுகாதார மற்ற இடங்களில் இவை தயாரிக்கப்படுவதால் நோயையும் வாங்க வேண்டியுள்ளது. காசைக் கொடுத்துப் பேயைக் கொள்ள வேண்டி இருக்கிது.

சுத்தமான தரமான பாணையும் சரியான நிறையான பாணையும் நாம் காண்பது எப்போது?

உணவுப் பரிசோதகர்களும் நிறுத்தல் அளவைப் பகுதியினரும் கூடிய கவனம் எடுக்க வேண்டும். இதற்கும் மேலாக பிரதேச செயலர் மாவட்டச் செயலர் கவனமெடுத்து ஏழை மக்களைக் காப்பாற்ற வேண்டும்.

~ பி.சேது ~ மூதூர்.

## ஏகாதிபத்தியமும்..

7ம் பக்க தொடர்ச்சி..

பெண்களுடைய "பிரச்சினையில் ஒரு பகுதியும்" ஏகாதி பத்தியத்தின் "தீர்வில் ஒரு பகுதியும்" ஆகும். இந்த "ஒருங்கிணைப்புக்கு" எதிராகப் போராடப் பெண்கள் தம்மை ஒழுங்குப்படுத்திக் கொள்வார்களாயின், அவர்கள் வலியதொரு ஏகாதிபத்திய விரோத சக்தியாவர். மூன்றாமுலகிற் பல இடங்களில் இத்தகைய ஏற்பாடுகள் பல்வேறு தளங்களில், பல்வேறு அத்திவாரங்கள் மீது தொடங்கியுள்ளன. உலகில் நாம் வாழும் பகுதியிற் போன்று, அவர்களது போராட்டம் ஆண்கள் நடத்தும் போராட்டங்களை விடவும் ஆழமான தீர்வுகளை வேண்டி நிற்கும். இதை உணராது அதன் விளைவுகளை ஏற்பவர்கள், நடைமுறையிற் புரட்சிவாதிகளாகவும் ஏகாதிபத்திய எதிர்ப்பாளராகவும் இருப்பதிற் பிரச்சினைகளை எதிர் நோக்குவர்.

# கிறிஸ்தவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள்

சமீப கால மாதங்களில் பல கிறிஸ்தவ ஆலயங்கள் தென்னிலங்கையில் தாக்குதலுக்கு உள்ளானதும் தாமதமான நடவடிக்கைகளின் பின்னர் சிலர் கைதாகியதும் செய்திகள்.

யுத்த நிறுத்தத்திற்கு முன்னர் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் அரச படைகளினால் ஆலயங்கள் கோவில்கள் தாக்குதலுக்குள்ளாகிய போது மக்கள் கொல்லப்பட்டபோது தென்னிலங்கையில் உள்ள கிறிஸ்தவ மதவாதிகள் அரசபடையினர் அவ்விதம் செய்திருக்க மாட்டார்கள் எனக்கருதி வந்ததுடன் இறந்தோர் பற்றி எவ்வித அக்கறையும் காட்டியதாக இல்லை. மாறாக வடக்கு கிழக்கில் யுத்தம் செய்யும் படையினரை ஆசீர்வதிக்கும் சடங் கொன்று கொழும்பு புனிதலுசியா ஆலயத்தில் நடை பெற்றது. அத்துடன் தேசிய பாதுகாப்பு நிதிக்கு கிறிஸ்தவ மத நிறுவனங்கள் நன்கொடைகளும் வழங்கின. ஆலயங்கள் தாக்குதலுக்கு உள்ளாகின்ற போது கூட தென்னிலங்கையில் உள்ள கிறிஸ்தவ மதவாதிகள் பின்வரும் விடயங்களைப் புரிந்து கொள்வார்களோ என எண்ணவேண்டியுள்ளது.

1 சிங்கள வராயினும் பௌத்தர்கள் அல்லாதவர்களின் வழிபாட்டிடங்கள் அவசியமெனில் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படும்.

2 சிங்களவராயினும் பௌத்தர்கள் அல்லாதவர்களின் உயிருக்கும் உடமைகட்கும் மதசுதந்திரம் உட்பட ஏனைய உரிமை கட்கும் உத்தரவாதமில்லை.

3 தென்னிலங்கையில் கிறிஸ்தவ ஆலயங்களின் மீது தாக்குதல் நடாத்தும் சக்திகள் அரசபடைகளில் இருந்து வடக்கு கிழக்கில் திட்டமிட்டே வழிபாட்டிடங்களை அழித்தும் ஆங்காங்கே பௌத்த சின்னங்களை நிறுவியும் வந்த சக்திகள் என்பது குறிப்பிடத்தக்கது.

4 இலங்கையை ஒருபௌத்தசிங்கள நாடாக ஆக்க விளைகின்ற சக்திகள் ஆங்காங்கே விழிப்புடன் இருந்து வருகின்றன. இவர்களைப் பெரிய இடங்கள் ஆதரித்து வழிநடாத்துகின்றன.

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த காலஞ்சென்ற மதகுருவான சிங்கராயர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்க் கைதாகிய போது தென்னிலங்கையைச் சேர்ந்த அவரது மத நிறுவனங்கள் அவரைக் கைநெகிழ்த்தன. அதன் பின்னரே அவர் தாக்குதலுக்கு உள்ளானார். இப்போது கிறிஸ்தவ ஆலயங்கள் தாக்குதலுக்கு உள்ளாகின்றபோது அந்தவழிபாட்டிடங்கள் தமக்குரியன வல்ல வென்றும் அங்கிருந்த புனிதப் பொருட்கள் தமது மதத்துக்குரியன வல்ல வென்றும் இம்மதவாதிகள் கூறத்துணிவார்களா?

- ஜீ.பீற்றர் - கொழும்பு

## புலி இயக்க...

1ம் பக்க தொடர்ச்சி

இலங்கையில் இந்தியத் தூதுவராக இருந்த ஜே.என்.தீக்ஷித் இலங்கையின் வடக்கு கிழக்கு இணைப்பு என்பது தற்போது சாத்தியமில்லை. கிழக்கில் வாழும் முஸ்லீம்களும், தமிழ் மக்களும் வடக்குடன் இணைவதை விரும்பவில்லை. அதனால் இனப்பிரச்சினைக்கான தீர்வில் வடக்கு கிழக்கு இணைந்த பிரதேசமாக இருக்க வேண்டுமென்ப என்பதற்கு அடிப்படை யில்லாது போய்விட்டது என்றும் கூறியுள்ளார்.

கிழக்கில் நடந்த தமிழ் - முஸ்லீம் மோதல்களுக்கு பின்னால் வடக்கு கிழக்கு இணைப்பதை எதிர்ப்பவர்களின் அக்கறை பெரிதாக இருந்துள்ளது. இந்திய மேலாதிக்க சக்திகளின் தூண்டுதல் இருந்ததாக கூறப்படுகிறது.

தற்போதைய புலிகள் பிளவிலும் இந்திய மேலாதிக்க சக்திகளின் கையிருப்பதாக கூறப்படுகிறது. அது வெறும் ஊகமல்ல என்பதற்கு ஆதாரமாக சில தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்திய சமாதானப்படை கிழக்கில் நடத்திய வெறி யாட்டம் எத்தகையது என்பதை நினைவுப் படுத்தி னால், இந்திய மேலாதிக சக்திகள் கிழக்கு மாகாண மக்கள் மீது செலுத்துவதாக காட்டப்படும் அக்கறை யின் உள் நோக்கம் புரியும் இலங்கை இராணுவ கொமாண்டே படைப்பிரிவும் அதிரடிப் படை பிரிவும் நடத்திய அட்டகாசங்கள் எப்போதும் மறக்கப்பட முடியாததாகும். அவ்வாறிருக்கும் இலங்கை இராணுவத்தினதும் இலங்கை அரசினது தயவும் எத்தகையது என்பது விளங்க முடியாததாக இருக்கிறது.

எனவே கருத்து மோதல்கள், பிளவுகள் தமிழ் மக்களின் போராட்டத்திற்கு வலுசேர்க்குமோ பலவீனப்படுத்துமா என்பதைக் கொண்டே அவை பற்றி மதிப்பீடு செய்ய முடியும்.

தற்போது ஏற்பட்டிருக்கும் பிளவு சுமுகமாக தீர்க்கப்பட்டாவிட்டால் தமிழ் மக்களின் போராட்டத்தை பலவீனப் படுத்துவதாகவே அமையும்.

வெளியிடுபவர் : இ. தம்பையா, இல. 47, 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட், 334A, K. சிறில் சி. பெரேரா மாவத்தை, கொழும்பு 13.

படிப்பகம்